அறைவு 03 இயம் 34 March 06-13, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

aat @ VBC 0770203201




## இலக்கை அடைந்தது

# மக்கள் போராட்டம்

யுத்தத்தின் பின்னர் திருகோணமலை மாவட்டத்தில் பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட மக்கள் போராட்டமானது தனது இலக்கை வெற்றிகரமாக அடைந்துள்ளது.

காணாமற்போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அமர்வுகளைப் பகிஸ்கரிக்குமாறு திருகோணமலை மாவட்டத் தமிழ் சிவில் சமூக அமைப்பினர் மற்றும் திருகோணமலை மாவட்டக் காணாமற்போனோர் சங்கத்தினர் ஆகியோர் கூட்டாக மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அவ்வாறு பகிஷ்கரிப்பதற்கான காரணங்களையும் அவ்வமைப்புக்கள் தெளிவாகத் தெரிவித்திருந்தன.

இதனையடுத்து கடந்த 28ம் திகதி தொடக்கம் 3ம் திகதி வரையான நான்கு நாட்களும் அம்ாவுகளைப் பகிஷ்கரித்து மக்கள் கடும் கவனயீர்ப்பு நடவடிக்கைகளை 17

## இடைக்கால அறிக்கை பங்குனியில்

## அடுத்த அமர்வுகளுக்கு முன் சிவில் சமூக அமைப்புக்களுடன் கலந்துரையாடல்



## "முதலமைச்சர் பதவியைக் கோட்டை விட்டோம்"

### அமைச்சுப் பகிர்வு சனநாயகத்திற்கு முரணானது - ஈபிஆர்எல்எவ்

கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சர் பதவியைக் கோட்டை விட்டதாகக் கூறியுள்ள ஈபிஆர்எல்எவ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஒதுக்கப்பட்ட அமைச்சுக்களை அக்கூட்டமைப்பிலுள்ள கட்சிகளிடையே பகிர்ந்த விதம் சனநாயகத்திற்கு முரணாணது என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மட்டக்களப்புக் கிளை தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது.

"கிழக்கு மாகாண ஆட்சியமைப்பு தொடர்பாகவும் அமைச்சுப் பதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட முறைமை தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சி சனநாயக வரன்முறைகளுக்கு முரணாக நடந்துகொண்டமை தொடர்பாக நாம் மிகுந்த மனவேதனை அடைகின்றோம்" என அக் கட்சியின் அறிக்கை 17

## மீனவர் ஆர்ப்பாட்டம் - கலகத்தடுப்புக் காவல்துறை களம் இறங்கியது



(நிக்கி தொம்சன்)

திருகோணமலை பிரதேசச் செயலகத்திற்கு முன்பாக கலகம் அடக்கும் காவல்துறையினர் திடீரென அணிவகுத்து தாக்குதலுக்கு தயாரானதை அடுத்து அங்கு பதற்றம் நிலவியதுடன் போக்குவரத்தும் தளம்பலடைந்தது.

வெளிமாவட்ட மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக வருவதை 17



## காணாமலாக்கப்பட்டவர்கள் முகாம்களில் காலணி கழுவுகின்றனர் வடமாகாண முதல்வர்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள் பலர் இலங்கையின் பல இடங்களில் உள்ள இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக வடக்கு முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

காணாமல் போனவர்களின் உறவுகள் யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை நடாத்தியிருந்ததுடன் அரச அதிபர், வடக்கு ஆளுநர் மற்றும் 17

## "அரசியற் தலைவர்கள் களத்தில் குதிக்க வேண்டும்" - ஆக்ஷா

வடமாகாண சபையின் முதலமைச்சர் காணாமலாக்கப் பட்டவர்கள் பலர் இரகசிய முகாம்களில் காலணிகளைத்துடைத்துக் கொண்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

அவ்வாறாயின் அவ்வாறானவர்களை உடனடியாக மீட்கத் தமிழ் அரசியல் தலைவர்கள் யாவரும் களம் இறங்க வேண்டும் என திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி ஆஷா மலைமுரசிற்குத் 17

## முன்னாள் முதல்வர்களை அழைக்காமலேயே வளாகக் கட்டிடங்கள் திறப்பு

திருகோணமலை பல்கலைக்கழக வளாகத்தின் முன்னாள் முதல்வர்கள் எவரையும் அழைக்காமலேயே அக்கட்டிடத் திறப்புவிழா நிகழ்வு நடத்தப்பட்டுள்ளதாக தெரிகின்றது.

முன்னாள் முதல்வர்கள் அனைவரினதும் முயற்சியாலேயே இக்கட்டிடங்கள் அங்கு உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சனாதிபதியால் இவை திறந்து வைக்கப்பட்டன.

## ஐரோப்பிய உதவியில் திருமலை புறக்கணிப்பு???

அண்மையில் பெய்த மழையால் கிழக்கில் நூற்றுக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள் பாதிப்படைந்ததை அடுத்து அவற்றிற்கு நட்டஈட்டை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்துள்ளது.

எனினும் இவ்வாறு வழங்கப்படவுள்ள நட்டஈடு மட்டு அம்பாறை மாவட்டங்களுக்கே வழங்கப்பட ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிகின்றது.

நாடு முழுவதும் வெள்ளத்தால் அழிக்கப்பட்ட நிலையில் கிழக்கிற்கு ஐரோப்பிய ஒன்றிய மனிதாபிமான உதவித்திட்டத்தின் கீழ் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# மாற்றம் ஒன்றை நோக்கி நகரும் மக்கள்!

**போர்** முடிவடைந்து ஆறு ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் தமிழ் மக்கள் தமக்கான மாற்றமொன்றை நோக்கி நகரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை நடந்து முடிந்த இரு நிகழ்வுகள் வெளிப்படுத்தியிருந்தன.

வடக்கிலும் நடந்த முதலாவது நிகழ்வில் தமிழ்த் தலைமைகள் வெறும் பார்வையாளர்களாகவோ அல்லது பொதுமக்களாகவோ ஆகவோ மட்டுமே கலந்து கொண்டிருந்தனர்.

ஆனால் கிழக்கில் நிகழ்ந்த நிகழ்வில் தமிழ்த் தலைமைகள் எதிர்ப்பாளர்களாகக் களமிறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முதலாவது நிகழ்வு ஐநா சபையின் மனித உரிமைக் கண்காணிப்பகம் மேற்கொண்ட ஸ்ரீலங்கா தொடர்பான விசாரணை அறிக்கையை கட்டாயம் வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையுடன் நடத்தப்பட்ட கவனஈர்ப்பு நடவடிக்கை.

இக்கவனஈர்ப்பு நடவடிக்கையானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகத்தால் முன்னெடுக்கப் பட்டபோது பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு ஆதரவளித்திருந்தனர். அத்துடன் பிற தமிழ் மாவட்டங்களில் இருந்து அங்கு சென்ற மக்கள் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு அதற்கு வலுச் சேர்த்திருந்தனர்.

இந்நிகழ்வானது போரின் பின்னர் மக்கள் தாமாகவே முன்வந்து தமக்குத் தேவையான நீதியைப் பெற்றுக்கொள்ளும் முதல் முயற்சியாகப் பதிவானது. தமிழ்த் தலைமைகள் ஐநாவின் அறிக்கை தொடர்பாக வெளியிடப்பட்ட கருத்துக்கள் எவற்றையும் மக்கள் கவனத்திற்கொள்ளாது நடத்திய இந் நடவடிக்கை-யினைச் செய்து முடித்திருந்தனர்.

இக்கவனயீர்ப்பு நடவடிக்கையானது மெலிதானதொரு அதிர்வலையை தமிழ்த் தலைமைகளுக்கு அனுப்பியிருந்தது. அதாவது தமிழர்கள் தாமாகவே தமது உரிமைகளை நிலைநாட்டப் புறப்படுகின்றர்கள் என்பதே அவ்வதிர்வு.

அதனையடுத்து புதிய அரசு பதவியேற்றதன் பின்னர் தமது முதலாவது அமர்வை திருகோணமலையில் நிகழ்த்துவதற்காக வருகை தந்த காணாமற்போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அமர்வுகளை ஒட்டுமொத்தமாகப் பகிஷ்கரித்தமை அவ்விரண்டாவது நிகழ்வாகும்.

பகிஷ்கரிக்கும் முடிவை தமிழ்ச் சிவில் சமூகம் எடுத்தமை தொடர்பான அறிவித்தல் வெளியானதைத் தொடர்ந்து அதிர்வடைந்த தமிழ்த் தலைமைகள் இந் நடவடிக்கையை எதிர்க்கும் முடிவை எடுத்தன. அதன்படி கிழக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் திருகோணமலை மக்கள் ஆணைக்குழுவைப் பகிஷ்கரிக்கக்கூடாது என்ற அறிவித்தலை பகிரங்கமாக வானொலிக்கு வழங்கியதுடன் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் இணையத்தளங்களிற்கும் அச்செய்தியைப் பரப்பினார்.

எனினும் திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் அமர்வுகளைப் பகிஷ்கரித்து அரசியல் தலைமைகளின் வேண்டுகோளைப் புறக்கணித்தனர்.

இந்தப் பகிஷ்கரிப்பானது நான்காம் நாளின் முடிவில் ஒரு மைல்கல்லை எட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தலைமைகளால் தாம் கைவிடப்படுவதாக தமிழர்கள் உணரத் தொடங்கியுள்ளனர். அதன்பால் மாற்றமொன்றை நோக்கி அவர்கள் சுயமாகவே நகரத் தொடங்கியுள்ள நிலையில் தமிழ்த் தலைமைகள் சரியான வழியைப் பற்றிச் சிந்திப்பார்களா?

-மாயவன்-

## சினேகபூர்வச் சந்திப்பு

**இலங்கைக்கான** ஐக்கிய அமெரிக்க தூதுவரில்லத்தின் கல்வி, கலாசார ஊடக விவகாரப் பணிப்பாளர் நிக்கோல் சுலிக், திருகோணமலை மாவட்ட ஊடகவியளாளர்களை சினேகபூர்வமாகச் சந்தித்து உரையாடினார்.

இச் சந்திப்பு கடந்த 04.03.2015 ஆம் திகதி சாயா புளுஇல் இடம்பெற்றது இந்நிகழ்வில் தூதுவரில்லத்தின் உதவித் தொடர்பாடல் அதிகாரி ஓமர் இராஜரத்னமும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (பஹ்மி யூஸுப்)



## வெள்ள நிவாரணம்

**ம**றுவாழ்வுக்கழகம் (கனடா) அனுசரணையில் அண்மையில் எற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவு நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை (04) காலை வெருகல் பிரதேச செயலக பிரிவில் உள்ள வட்டவான் கிராமத்தில் பாதிக்கப்பட்ட நூற்று அறுபத்தைந்து குடும்பங்கள் இந்நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டன.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி



ஆகியோர் இவற்றினை வட்டவான் பல்தேவை கட்டிடத்தில் வைத்து வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் முன்நாள் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம். கிழக்கு மாகாண உறுப்பினர் கு.நாகேஸ்வரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (கதிரவன்)

## வெள்ள நிவாரணம்

**ம**றுவாழ்வுக்கழகம் (கனடா) அனுசரணையில் அண்மையில் எற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவு நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை (04) காலை வெருகல் பிரதேச செயலக பிரிவில் உள்ள வட்டவான் கிராமத்தில் பாதிக்கப்பட்ட நூற்று அறுபத்தைந்து குடும்பங்கள் இந்நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டன.

## திருமலையில் பாகிஸ்தானியக் கடற்படை

**திருகோணமலை** கடற்படைத்-தளத்திற்கு பாகிஸ்தானிய கடற்படைக் கப்பலொன்று நல்லெண்ணப் பயணத்தினை மேற்கொண்டு-ள்ளது.



சுல்பிகார் எனப் பெயரிடப் பட்டுள்ள 123 மீற்றர் நீளம் கொண்ட இந்த யுத்தக் கப்பல் 303



கடற்படையினரைத் தன்ன-கத்தே கொண்டது.

இக்கப்பலின் கப்டன் அமீர் மொகமட் கிழக்குப் பிராந்திய கடற்படை அட்மிரல் றோகன பெரோவினால் வரவேற்கப் பட்டார்.

## சம்பூர் ரதனின் "கேட்காத குரல்கள்" குறுவெட்டு வெளியீடு



**சம்பூர்** மக்களின் அகதி முகாம் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கேட்காத குரல்கள் என்னும் இறுவெட்டு கடந்த 05ம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

தரிசனம் வெளியீட்டுப் பிரிவின் இயக்குனர் சந்திரனின் முயற்சியில் நகரயன்ஸ் கழகத்தினர் இவ்விழாவை நடாத்தியுள்ளனர்.

## மோடி திருமலைக்கு வருவார்?

**இந்தியப்** பிரதமர் மோடி எதிர்வரும் 13ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

அன்றைய தினம் கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசிலுள்ள முக்கியஸ்தர்களையும் சந்தித்துப் பேசும் இந்தியப் பிரதமர், மறுநாள் 14ஆம் திகதி சனிக்கிழமை வடக்கிற்கு வருகை தந்து கிரிமலையில் இந்திய வீட்டுத் திட்டத்தைக் கையளிக்கும் நிகழ்விலும் கலந்துகொள்ளவுள்ளார். பின்னர் மன்னாருக்கும் செல்வார்.

அடுத்தநாள் 15ஆம் திகதி மலையகத்திற்கும் பயணிக்கும் அவரின் திருகோணமலைக்கும் [illegible] வருகை திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# "விமலின்" கூற்று தவறானது
## நித்தி மாஸ்டர்

**தமிழர்** ஆதரவுச் செயற்பாடுகளால் பிரிவினைகளை தூண்ட அரசாங்கமும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் முயற்சிப்பதாக அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச கூறியிருக்கும் கருத்தானது அவரே பிரிவினையை தூண்ட அடித்தளம் இடுகிறார் என்பதை எடுத்துக்காட்டுகிறது என ரொலோ இயக்கத்தின் நிர்வாக செயலாளர் நித்தி மாஸ்டர் தெரிவிக்கின்றார்.

இந்த நாட்டில் தமிழர்களுக்கு ஆதரவாக எவரும் செயற்படக் கூடாது எனவும் இனவாதம் நிறைந்த இக் கூற்று அமைந்திருக்கின்றது. மேலும் நாட்டில் எந்த இன மக்களாக இருந்தாலும் அவர்கள் சம உரிமையுடன் வாழவேண்டும் இதுவே யதார்த்தம்

சுதந்திர தினத்தன்று தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்திருந்தாலோ அல்லது உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றி இருந்தாலோ அல்லது சம்பூர் மக்களை தங்களது சொந்த மண்ணில் குடியேற்றி இருந்தாலோ அல்லது இந்த மைத்திரி ஆட்சியை கொண்டு வருவதற்காக வாக்களித்த கிழக்கு தமிழ் மக்களுக்கு கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் பதவியில் நியாம் கிடைத்திருந்தாலோ நம்பிக்கை வந்திருக்கும். ஆனால் இவை எதுமே செய்யாத அரசாங்கதை பார்த்து அரசாங்கம் தமிழர் ஆதரவு செயற்பாட்டை மேற்கொள்கிறது என விமல்வீரவன்ச எவ்வாறு தெரிவிப்பார்? எனக் கேள்வி எழுப்பினார்.

எனவே இனிவரும் காலங்களிலாவது தமிழ் மக்கள் இந்நாட்டில் நிம்மதியாக வாழ விமல்வீரவன்ச போன்றவர்கள் இவ்வாறான கருத்துக்களை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என தமது ஊடக அறிக்கையில் ரொலோ இயக்கத்தின் நிர்வாக செயலாளர் நித்தி மாஸ்டர் தெரிவித்துள்ளார். (அச்சுதன்)

## கிண்ணியாவில் ஆர்ப்பாட்டம்

**கிண்ணியா** பிரதேசத்தில் மற்றுமொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஒன்றைப் பெற்றுத்தரக்கோரி, பொதுமக்கள் புதன்கிழமை (4) கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிண்ணியா மய்யம் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு கிண்ணியா பிரதேச செயலாளரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் செய்திகள்

## உணவு விடுதிகள் திடீர் சோதனை

மட்டக்களப்பு நகரில் உணவு விடுதிகளில் சுகாதாரம் பேணப்படாதுவிட்டால், அந்த உணவு விடுதிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று மட்டக்களப்பு, வெட்டுக்காடு பொதுச்சுகாதார பரிசோதகர் சோ.அமுதமாலன் தெரிவித்தார்.

வெட்டுக்காடு பொதுச்சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள உணவு விடுதிகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று வியாழக்கிழமை திடீர்ச் சோதனை மேற்கொண்டனர். அத்துடன், உணவு விடுதியொன்றிலிருந்து சுகாதாரத்துக்கு உகந்த முறையில் இல்லாமல் வைக்கப்பட்டிருந்த பெருமளவு உணவுப்பொருட்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டதாக வெட்டுக்காடு பொதுச்சுகாதார பரிசோதகர் சோ.அமுதமாலன் தெரிவித்தார்.



## ஆசிரியர் இடமாற்றங்கள்

### தேசிய இடமாற்ற சபையினூடாகவே இடம்பெற வேணும்




ஆசிரியர் இடமாற்றங்கள் தேசிய இடமாற்றசபையின் மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும் என கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.ஜெயராஜா இன்று வெள்ளிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, "கிழக்கு மாகாண கல்வி வலயங்களில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், தன்னிச்சையான தீர்மானங்களின் மூலம் ஆசிரியர் இடமாற்றங்களை மேற்கொள்கின்றனர். அத்தோடு பழிவாங்கும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. நீதி நியாயத்துக்காகப் போராடும் ஆசிரியர்களுடன் அதிகாரிகள் சவால் விடுதல் போன்ற அற்பத்தனமான செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் அதிகம் காணப்படும் இடமாக திருகோணமலை கல்வி வலயம் காணப்படுகின்றது. இந்த நிலைமை உடனடியாக மாற்றியமைக்கப்படவேண்டும். கிழக்கு மாகாணத்தில் வருடாந்தம் ஆசிரியர் இடமாற்றங்கள் இடம்பெறுகின்ற அதேவேளை, அதிபர்களுக்கான இடமாற்றங்கள் இடம்பெறுவதில்லை. இது ஒரு பாரபட்சமான ஏற்றத்தாழ்வு நடவடிக்கையாகும். ஐந்து வருடங்களை பூர்த்திசெய்த அதிபர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்படவேண்டியது அவசியமாகும். இவ்வாறு அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடமாற்றங்கள் வழங்குவதன் மூலம் ஏற்றத்தாழ்வுகள், நிர்வாகச் சீர்கேடுகள், நிதிமோசடிகள் போன்ற ஊழல்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கும் ஆசிரியர்கள் அதிபர் உறவைப் பேணுவதன் மூலம் பாடசாலைகளின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கும் வழியேற்படுத்திக் கொடுக்கமுடியும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குப்பை கொட்டிய இடம் பொழுதுபோக்கு இடமாக

காத்தான்குடி ஆற்றங்கரைப்பகுதியில் பொழுதுபோக்கு இடம் மற்றும் மைதானம் அமைப்பதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நகரசபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் தெரிவித்தார். காத்தான்குடி ஆற்றங்கரைப்பகுதியில் குப்பைகள் கொட்டப்பட்ட இடத்திலேயே பொழுதுபோக்கு இடம் மற்றும் மைதானம் அமைக்கப்படவுள்ளதாகவும் இந்த நிலையில், தற்போது குறித்த பகுதியில் நிலத்தை செப்பனிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## ரவைகள் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள திக்கோடை காட்டுப்பகுதியிலிருந்து ரீ-81 ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தும் ரவைகள் 53, அடையாளம் காணப்படாத ரவைகள் 03 என்பவற்றை கடந்த வியாழக்கிழமை தாம் கைப்பற்றியதாக மட்டக்களப்பு விமானப்படையினர் தெரிவித்துள்ளனர். தமக்கு கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் குறித்த காட்டுப்பகுதியில் தேடுதல் மேற்கொண்டபொழுது, இவற்றை தாம் கைப்பற்றியதாக விமானப்படையினர் மேலும் தெரிவித்தனர்.

## பெயர் எழுதியவருக்கு 2 வருட சிறை

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான சீகிரியாவின் பளிங்கு சுவரில், தனது பெயரை எழுதிய மட்டக்களப்பை சேர்ந்த சின்னதம்பி உதேனி (23) என்ற யுவதிக்கு, தம்புள்ளை நீதவான் நீதிமன்ற நீதவான் சஞ்சீவ ரம்யகுமார இரண்டு வருட கால சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி தனது தோழர்களுடன் சீகிரியாவுக்கு சுற்றுலா சென்றிருந்த குறித்த யுவதியே பெயரை எழுதிய குற்றச்சாட்டில் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.



## 220 பேருக்கு டெங்கு



இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே இந்த வருடம் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், இந்த மாவட்டத்தில் ஜனவரி மாதத்திலிருந்து இதுவரையில் 220 பேருக்கு டெங்கு அடையாளம் காணப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் எம்.உதயகுமார் தெரிவித்தார். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம், மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் மண்முனை வடக்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம், மட்டக்களப்பு மாநகரசபை மற்றும் பொலிஸாரின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை காலை விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

## தொண்டர் ஆசிரியர்களுக்கு அழைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2007ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைப்பதற்கான தேர்வில் தோற்றியும் ஆசிரியர்களாக உள்வாங்கப்படாதவர்களை இன்று சனிக்கிழமை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் ஒன்றுகூடுமாறு மட்டக்களப்பு மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் ஐயமுத்து ரவிச்சந்திரன் அழைப்புவிடுத்துள்ளார்.

புதிய அரசாங்கம் பதவியேற்ற நிலையில் தற்போது அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் யாரும் வெளிப்படுத்தாத நிலையில் அவற்றினை வெளிப்படுத்தும் வகையில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தமிழினம் ஏமாந்தால் அரசாங்கமே ஏமாறும்

தமிழினத்தை ஏமாற்றமுடியும் என்று தற்போதைய அரசாங்கம் நினைத்துச் செயற்பட்டால், அரசாங்கமே ஏமாந்து வீடு செல்லவேண்டி ஏற்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டத்தின் காக்காச்சிவட்டைக் கிராம அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல், களுவாஞ்சிக்குடியிலுள்ள அவரது இல்லத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## அம்புலன்ஸ் இன்மையால் அவதி

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையின் பிரச்சினைகளை தீர்த்துவைக்க நடவடிக்கையெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த மூன்று மாதங்களாக அம்பியுலன்ஸ் வண்டி இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் பல சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

## ஊடகவியலாளர் சந்திப்பு

ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் வகையில் அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க அமெரிக்கா தயாராக விருப்பதாக அமெரிக்க தூதுவராலயத்தின் ஊடக மற்றும் கல்வி பிரிவுக்கான பணிப்பாளர் திருமதி.நிக்கோலி சூலீக் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் அமெரிக்க தூதுவராலயத்தின் ஊடகம் மற்றும் கல்விக்கான பணிப்பாளருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## தமிழ் பயிற்சி டிப்ளோமா

தமிழ்மொழி டிப்ளோமா பயிற்சியை 135 சிங்களமொழி மூல பொலிஸார் நிறைவு செய்துள்ளனர். 5 மாதங்களைக் கொண்ட இப்பயிற்சியை 9ஆவது குழுவினர் நிறைவுசெய்துள்ளதாக பொலிஸ் பயிற்சிப் பாடசாலையின் பொறுப்பாளர் ஏ.அருளானந்தம் தெரிவித்தார். இந்த நிலையில், கலை நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை கல்லடி பொலிஸ் பயிற்சிக்கல்லூரியில் நடைபெற்றன. மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் உபுல் ஜயசிங்க, மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



## கா.து. க்கு கைக்குண்டு வீச்சு

கணவன், மனைவிக்கு இடையில் இடம்பெற்ற குடும்பச் சண்டையை விசாரிப்பதற்காக சென்ற காவல்துறையினர் மீது கைக்குண்டு வீசப்பட்ட சம்பவமொன்று மட்டக்களப்பு, ராணமடு மாதிரிக்கிராமத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. கைக்குண்டு வெடிக்காத நிலையில், குண்டை வீசிய நபரை காவல்துறையினர் மடக்கிப்பிடித்து தடுத்துவைத்துள்ளனர். வீசப்பட்ட கைக்குண்டு நீண்ட காலம் மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்து அண்மையில் வெளியில் எடுக்கப்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொறாமை கொள்ளக் கூடாது

நாட்டை நாடாளுமன்ற தேர்தல்கள் வரும் போது பொறாமை இல்லாமல் போட்டிகளில் பங்குபற்ற நாங்கள் திடசங்கற்பம் பூணவேண்டும். மக்கள் சேவையை முன்வைத்து முன்னேறவேண்டும். எங்கள் ஒற்றுமையும் ஒருங்கிணைந்த சேவையும் இங்கிருக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் நல்லதொரு வாழ்க்கையை ஏற்படுத்தும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறினார்.

வடமாகாண ஆளுநர் எச்.என்.ஜி.எஸ்.பளிஹக்காரவும் நாங்களும் ஒற்றுமையுடன் செயற்படுவதால் இந்த வடமாகாணத்துக்கு பல நன்மைகள் வந்தடையும் என்பதில் எனக்கு சந்தேகம் எதுவுமில்லை. ஆளுநருடன் சேர்ந்து மருத்தவ தொகுதியொன்றைத் திறந்து வைக்கும் முதல் நிகழ்வு இது. நாடாளுமன்ற தேர்தல்கள் இன்று எட்டி பார்த்துக் கொள்ள விழையும் இந்த நேரத்தில் எங்களுக்குள் போட்டிகள் வளரட்டும். ஆனால் பொறாமை எழாது இருக்கட்டும்.



மற்றவர்களை ஊக்குவித்து அதேநேரத்தில் நாமும் ஊக்கமுடன் முன்னேறுவதே போட்டி மனப்பான்மையின் தாற்பரியம். நான் மட்டும் முன்னேற வேண்டும் மற்றையவன் வீழ வேண்டும் என்பது பொறாமை மனோநிலையின் வெளிப்பாடு எனக் கூறினார்.

# காவலருக்குக் "கல்தா"

தும்மலசூரிய காவல் நிலைய உத்தியோகத்தர்கள் இருவர் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் சிறைக்கூடத்தினுள் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தொடர்பிலேயே இவர்களைச் சேவையிலிருந்து இடைநிறுத்தியுள்ளதாக பதில் காவல் பேச்சாளரும், உதவிக் காவல் அத்தியட்சகருமான ருவன் குணசேகர குறிப்பிடுகின்றார்.

சந்தேகநபர் குறித்து உரிய கவனம் செலுத்தப்படவில்லை என இவர்கள் மீது குற்றஞ்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக காவல் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இரவுநேர கடமையில் அவர்கள் இருந்தபோதே இம்மரணம் நிகழ்ந்துள்ளது.

இதேவேளை, தற்கொலை செய்துகொண்ட சந்தேகநபரின் தேகம், மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# கோத்தாவின் மிக் வழக்கு முடிந்தது



சில யுத்த காலத்தில் மிக் ரக வானூர்திகளை கொள்வனவு செய்தபோது, மோசடி செய்ததாக சண்டே லீடர் செய்தித்தாளில் வெளியான கட்டுரை காரணமாக தாம் அபகீர்த்திக்கு உள்ளானதாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ச தாக்கல் செய்த வழக்கு நேற்று முடிவிற்கு வந்துள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டை அடுத்து இந்த முடிவு எட்டப்பட்டது.

கடந்த 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற மிக் ரக வானூர்தி கொள்வனவு தொடர்பில் 2009ஆம் ஆண்டு ஜூலை, ஓகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் சண்டே லீடர் செய்தித்தாளில் தொடர்ச்சியாக கட்டுரைகள் வெளியாகியிருந்தன.

மேற்கொள்ளப்பட்ட கொள்வனவின் போது, மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக அந்த கட்டுரைகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னாள் பாதுகாப்பு செயலாளர், அந்த செய்தித்தாளிடம் 10 கோடி 'ரூபா நட்டஈட்டை கோரி வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார்.

தற்போது சண்டேலீடர் பத்திரிகையானது உரிமையாளர்களிடம் இருந்து கைமாறியுள்ளதால் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

# யானைகளின் சாகசம் மீண்டும் ஆரம்பம்

தெஹிவலை மிருக காட்சிசாலையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த, யானைகள் சாகச நிகழ்ச்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப் படவுள்ளன.

முதல் கட்டமாக வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் யானைகளின் சாகச நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளதாக, தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுர டி சில்வா குறிப்பிடுகின்றார்.

மிருகக் காட்சிசாலையில் இருந்த யானைகளுக்கு காசநோய் தொற்றியுள்ளதாக ஏற்பட்ட சந்தேகத்தினால், கடந்த வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து யானை சாகச நிகழ்ச்சிகளை நிறுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

# வடக்குகிழக்கிற்கு மேலும் அதிகாரங்கள்

நாடாளுமன்ற தெரிவுக்குழு அல்லது சர்வகட்சி குழு ஒன்றின் ஊடாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று ஈ.பி.டி.பி வலியுறுத்தியுள்ளது.

அதன் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவாநந்தா இதனைத் தெரிவித்துள்ளார்.

விடயம் சம்பந்தமான கோரிக்கைகளை தாம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன்வைத்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# உன்னிப்பாக கண்காணிக்கின்றோம் -சீனா-



ஸ்ரீலங்காவை உன்னிப்பாகக் கண்காணித்த வருவதாக சீனா எச்சரிக்கை மிகுதொனியில் கூறியுள்ளது.

கொழும்புத் துறைமுக நகரத் திட்ட விவகாரத்தை சிறிலங்கா பொருத்தமான முறையில் தீர்க்கும் என்று சீனா தெரிவித்துள்ளது. இந்த திட்டத்தை இடைநிறுத்த சிறிலங்கா எடுத்துள்ள முடிவு குறித்து சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹுவா சுன்யிங், பீஜிங்கில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

"இந்த நிலைமை குறித்து சிறிலங்கா அரசாங்கம் சீனாவுக்கு தகவல் அளித்துள்ளது. திட்டம் தற்காலிகமாகவே இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், அது ரத்துச் செய்யப்படவில்லை" என்றும் சிறிலங்கா கூறியுள்ளது என அவர் தெரிவித்தார்.

# 3மாத தடுப்பில் பகீரதி

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினரை 90 நாள்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரண செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜெயகணேஸ் பகீரதி மற்றும் அவரது மகளும் கிளிநொச்சியில் உள்ள தனது தாயாரின் வீட்டிற்கு பிரான்ஸில் இருந்து விடுமுறையில் வந்து மீண்டும் பிரான்ஸிற்கு திரும்பும் வேளையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

1997 ஆம்ஆண்டில் இருந்து 2000 ஆம் ஆண்டு வரைக்கும் கடற்புலிகளின் பெண்கள் பிரிவுக்கு தலைவியாக இந்தார் என்றும் பயங்கரவாத செயற்பாட்டில் ஈடுபட்டார் என்றும் தகவல் கிடைக்கப்பெற்றதை அடிப்படையாக கொண்டே பகீரதி கைது செய்யப் பட்டுள்ளதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்திருந்தன

# மீண்டும் தவறிழைக்கக்கூடாது



அரசாங்கத்தினால் கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட தவறுகள் மீண்டும் இடம்பெறக் கூடாது என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹசேன் எச்சரித்துள்ளார்.

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 28வது கூட்டத்தொடரில் அவர், ஆண்டறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றினார். அதன்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

சிறிலங்காவில் மாற்றமடையும் சூழ்நிலைகள், அரசி[illegible] ஒத்துழைப்பு வழங்கு[illegible] கிடைத்துள்ள சமிக்ஞைகள், மேலும் தகவல்கள் கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் என்பவை குறித்து மதிப்பிட்ட பின்னரே நான் அவ்வாறு பரிந்துரை செய்தேன்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாத அமர்வுக்கு முன்னதாக சிறிலங்காவுக்கு வருமாறு எனக்கும் உண்மை – நீதி விடயம் பற்றிய சிறப்பு நிபுணர்களுக்கும், பலவந்தமான காணமற்போதல் தொடர்பான செயற்குழுவுக்கும் சிறிலங்கா அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## "பிப்டி சேட்ஸ் ஒவ் கிரே" இந்தியாவில் தடை

**பல** நாடுகளில் வெற்றிகரமாக ஓடி வரும் "பிப்டி ஷேட்ஸ் ஆப் க்ரே" படம் இந்தியாவில் தடை செய்யப்படுள்ளது.

கடந்த மாதம் இறுதியில் உலகம் முழுவதும் வெளியாகி 260 மில்லியன் பவுண்ட் வசூல் செய்த திரைப்படம் "பிப்டி ஷேட்ஸ் ஆப் க்ரே".

ஜமி டொர்னான், டகோடா ஜான்சன் இணைந்து நடித்துள்ள இப்படத்தில் இருவருக்கும் இடையே உள்ள அதீதமான காதலை வெளிப்படுத்தும் வகையில் நேரடியான உடலுறவுக் காட்சிகள் பல உள்ளது.

இந்நிலையில் திரைப்படத்தைப் பார்த்த இந்திய திரைப்பட தணிக்கைக்குழு படத்தில் உள்ள நிர்வாணக்காட்சிகள் அனைத்தையும் நீக்கிய பிறகும்கூட இது இந்திய ரசிகர்களுக்கு ஏற்றதல்ல என்று கூறி இப்படத்தை தடை செய்துள்ளது.



## அமெரிக்க தூதுவருக்கு கத்தி வெட்டு

**தென்**கொரியாவிலுள்ள அமெரிக்க தூதுவர் மார்க் லிப்பேர்ட் தாக்கப்பட்டுள்ளார். இத்தாக்குதலின் போது கூரிய சவர அலொகான்றினால் வலது புறக் கன்னம் மற்றும் நெற்றிப்பகுதியில் வெட்டுக்காயங்கள் அவருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வார ஆரம்பத்தில் அமெரிக்க தென்கொரியப் படைகளின் கூட்டு இராணுவப் பயிற்சி நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளதை அடுத்து அப்பயிற்சி நடவடிக்கையினால் அதிருப்தியுள்ள நபரொருவரே தாக்குதலை நடாத்தியுள்ளதாக செய்தி முகவர் அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

லிப்பேர்ட் அமெரிக்க சனாதிபதியின் நெருங்கிய சகா என்பது குறிப்பிடத்தக்கது.

## "ஏர்ஏசியா" நடவடிக்கைகள் முடிவு

**வி**பத்தடைந்த ஏர்ஏசியா விமானத்தின் மீட்புப் பணிகள் நிறைவுற்றுள்ளதாக இந்தோனேசியா அறிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 162 பயணிகளுடன் பயணித்த ஏர்ஏசியா விமானம் 8501 இந்தோனியக் கடலில் விபத்துக்குள்ளானது.

கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்ற மீட்புப் பணிகளில் மீட்கப்பட்ட தொன்னுற்றி நான்கு பயணிகளின் உடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் மேலும் அறுவரின் சடலங்கள் அடையாளம் காணப்படுவதற்காக வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன.



## ஜப்பானியக் கப்பலின் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டன

**02**வது உலக மகா யுத்தத்தில் மூழ்கடிக்கப்படட ஜப்பானிய யுத்தக் கப்பலின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மைக்ரோசொவ்ட் நிறுவனத்தினை உருவாக்கியவர்களுள் ஒருவரான போல் அலன் என்பவரின் முயற்சியாலேயே இக்கண்டுபிடிப்பு சாத்தியமாகியுள்ளது.

போர்க்கப்பல்களில் அக்காலத்தில் மிகப் பெரிய இரண்டு கப்பல்களில் ஒன்றான முசாசி என்ற இந்தக் கப்பல் பிலிப்பைன்ஸ் நாட்டுக் கடற்பரப்பில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இம்முயற்சியில் கடந்த எட்டு வருடங்களாக ஈடுபட்டுவரும் போல் அலன் குழுவினர் அக்கப்பற் சிதைவுகளின் படங்களை வெளியிட்டுள்ளனர்.

இப்படங்கள் ஆளில்லா நீர்மூழ்கிக் கப்பலினால் படமாக்கப்பட்டுள்ளன. முசாசி 1944 ஒக்டோபர் 24ம் திகதி மூழ்கடிக்கப்பட்டது. இத்தாக்குதலில் அமெரிக்க விமானங்கள் வீசிய பத்து டோர்பிடோ குண்டுகளும் பதினாறு விமானத் தாக்குதல்களும் இக்கப்பலின் மீது மேற்கொள்ளப்பட்டதாக ஆவணங்கள் கூறுகின்றன.




## சர்சையை உருவாக்கியுள்ள குற்றவாளி தொடர்பான ஆவணப்படம்

பாலியல் குற்றவாளியொருவர் தொடர்பான ஆவணப்படத்தை பிபிசி செய்திச்சேவை வெளியிட்டதைத் தொடர்ந்து கடும் சர்சைகள் எழுந்துள்ளன.

இந்த ஆவணப்படத்தை இந்தியாவில் வெளியிடத் தடைகளை நீதிமன்றம் விதித்துள்ளது.

பாலியில் குற்றச்சாட்டில் கைதாகி குற்றவாளியெ ஆயுட்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முகெஸ் சிங் தொடர்பானதே அவ்வாவணப்படம் ஆகும்.

பிபிசியின் ஆவணப்படத்தில், பாலியல் வல்லுறவுக் குற்றவாளி முகே' சிங் தனது குற்றத்திற்காக கவலைப்படவில்லை. அத்தோடு, பாலியல் வல்லுறவுக்கு உள்ளான பெண் எதிர்த்திருக்கக்கூடாது என்றும் விமர்சித்திருக்கிறார்.

## பாலியல் சந்தேகநபர் அடித்துக் கொலை

நாகாலாந்து மாநிலத்தில் பாலியல் பலாத்காரம் செய்தவரை சிறையை உடைத்து, வெளியே இழுத்துவந்து பொதுமக்கள் அடித்துக் கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வங்காளதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் வந்த 35 வயதான சையத் பரீத்கான் என்பவர், கடந்த 23 மற்றும் 24-ம் தேதிகளில் நாகா பழங்குடியின பெண் ஒருவரை பல்வேறு பகுதிகளுக்கு கடத்தி சென்று பாலியல் பலாத்காரம் செய்ததாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து காவல்துறையால் கைதாகி நீதிமன்றால் திம்மாபூரில் உள்ள மிகவும் பாதுகாப்பு நிறைந்த மத்திய சிறையில் இவர் அடைக்கப்பட்டார்.

இந்த பலாத்கார சம்பவம் தொடர்பாக சையத் மீது நாகா பழங்குடியின மக்கள் கடும் கோபத்தில் இருந்தனர். சையத்திற்கு தக்க தண்டனை வழங்க நினைத்த அவர்கள், ஆயிரக்கணக்கில் திரண்டனர். திம்மாபூர் மத்திய சிறையை உடைத்து உள்ளே சென்றனர். பின்னர், பாலியல் குற்றவாளி சையத்தை சிறைக்கு வெளியே இழுத்து, ஊர்வலமாக அழைத்து சென்று ஊருக்கு மையப் பகுதியில் வைத்து அடித்துக் கொலை செய்தனர்.

## ஐஎஸ்ஐஎஸ் ஆகும் அமெரிக்கர்கள்

**அ**மெரிக்க நாட்டவர்கள் பலர் கடும் போக்கு இஸ்லாமியத் தீவிரவாதிகளான ஐஎஸ்ஐஎஸ் இயக்கத்தில் இணையும் பொருட்டு சிரியாவிற்குப் பறப்பதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கலிபோர்னியாவைச் சோந்த 21 வயதான இளைஞன் சிரியா நோக்கிப் பறக்கவிருந்த போது கைது செய்யப்பட்டதை அடுத்து அவரை தீவிரவாத இயக்கத்திற்கு இணைத்தார் என்ற குற்றச்சாட்டில் 17 வயதான வேர்ஜினியப் பலகலைக் கழக மாணவியொருவர் கைதாகியுள்ளார்.

குறித்த இளைஞன் ஏற்கனவே பயங்கரவாதிகளுக்கு உதவி செய்தமைக்காக கண்காணிப்பில் இருந்துள்ளார்

தற்போது வரை 180 அமெரிக்கர்கள் சிரியா நோக்கிப் பறக்க முயன்றிருப்பதாகத் தெரிவித்துள்ள தகவல்கள் தற்போதுவரை எத்தனை அமெரிக்கர்கள் தீவிரவாதிகள் ஆகியுள்ளனர் என்பது பற்றிய தகவல் கள் கிடைக்காமலுள்ளதாகத் தெரிவித்துள்ளன. இவ்வியக்கத்தில் வெளிநாட்டவர் சுமார் 20,000 இணைந்துள்ளனராம்.

## விமானம் தரைதட்டியது




**து**ருக்கிய விமானமொன்று நோபாளத்தின் சர்வதேச விமான தளத்தில் தரைதட்டியதால் அவ்விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

திரிபுவன் சர்வதேச விமான நிலையத்தில் கடந்த புதன்கிழமை வந்திறங்கிய துருக்கிய விமானம் தரைதட்டியது.

அதனையடுத்து ஏனைய விமானங்கள் எவையும் இறங்க முடியாதவாறு அவ் விமானம் தரைதட்டியதால் விமான நிலையம் மூடப்பட்டது.

நேபாளத்திலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் ஒரேயொரு விமான ஓடுதளம் மட்டுமே உள்ளதால் தற்போதுவரை சுமார் 160 விமானங்களின் வருகை தாமதமாகியுள்ளது.

இன்று இந்த விமான தளம் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஐஎஸ்ஐஎஸ்சிடம் அதி முக்கிய கைதிகள்



**த**னி நாட்டைத் உருவாக்கியுள்ள அடிப்படைப் திகளான ஐஎஸ் அமைப் அதிமுக்கியத்துவம் வாய்ந்த சிலர் கைதிகளாக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. தமக்கென இஸ்லாமிய பயங்கரவாபிடம்

இவர்களைப் பணயக்கைதிகளாக வைத்துக்கொண்டு பெருந்தொகை மில்லியன்களை நாடுகளிடம் தீவிரவாதிகள் பெற்றுவருவதாகவும் அவ்வாறு பணம் பெற்றுக்கொள்ளப்பட்டவாகள் வெளித்தெரியாமல் விடுவிக்கப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

– பட்ட மரம் தேராகும்
மணலெல்லாம் வீதி
ரெட்டை உயிர்
ஒன்றாகும்
இது காதல் ஜாதி
தொட்ட உடன்
உயிர் பூக்கும்
நீ என்னில் பாதி
விட்டு விட்டால் அணைந்து விடும்
உயிரென்னும் ஜோதி–

# வீணையடி நீ எனக்கு...

05

ரமேஷ் வேதந்தியா



– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

தொடுதல் உணர்வைத் தூண்டும். உணர்வு உறவைப் புதுப்பிக்கும். ஆம், தொடுதல் என்பது பரஸ்பர ஸ்நேகத்தை வளர்க்கிறது. ஸ்நேகம் வளர அன்பு அதிகமாகும். அன்பு நேசிக்கப்படும் ஆளைப் பொறுத்து புதிய வடிவங்கள் பெறும்.

காதல், பாசம், பக்தி என அன்பின் வடிவங்கள் பல. இங்கே இரண்டு இளம் உடல்கள் தொட்டுக்கொண்டன. அந்தத் தொடுதல் ஒரு நீண்ட கால உறவில் திளைத்திருந்த அனுபவத்தை அவர்களுக்குக் கொடுத்தது.

ரதன் அவசர அவசரமாக தனது முகத்தைக் கழுவிக் கொண்டான். அவனது கரங்கள் என்னவோ குழாயில் நீரைப் பிடித்து தனது முகத்தைக் கழுவிக் கொண்டதே தவிர அவனது சிந்தனைகள் அவன் வசம் இருக்கவில்லை. அந்த சில நிமிட நிகழ்வே அவன் மனதில் திரைப்படம் போல ஓடிக் கொண்டிருந்தது.

அவனுக்கு உதவி செய்வதற்காக அவனது பேக்குகளை வாங்க வந்த நிவேதா கால் இடறி அவனுக்கு மேலே விழப் போனதும், அவளை ஒரு பூங்கொத்தைப் போல அவன் தாங்கிப் பிடித்ததும் நினைக்கவே மனசுக்குள் பனி மழை பெய்வதைப் போல் ஒரு கிறக்கம். ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் தமது வாழ்க்கையில் எதிர் பால் மீதான முதல் தொடுதல் அனுபவம் வித்தியாசமானது. அது வாழ்வுக் காலம் முழுவதற்கும் ஞாபகத்தில் நிற்பது. ரதனின் மனசும் அந்தக் கண நேர அனுபவங்களையே அசை போட்டுக்கொண்டிருந்தது.

நிவேதா! அவள் மட்டுமென்ன...? ஒரு இளம்பெண் அதுவும் இதுவரை எந்த ஒரு ஆணுடனும் அதிகம் கதைக்காதவள். கல்லூரி நாட்களில் டியூசன் வகுப்பில் கூட ஆண்களுடன் பழகுவதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அதனை அதிகம் விரும்பாதவள். இன்று ஒரு இளைஞனுடன் மோதுப் பட்டதுமல்ல அவனது கரங்களில் ஒரு சிறு குழந்தையைப் போல் விழுந்ததை நினைக்க வெட்கம் பிடுங்கித்தின்றது. நிலத்தைக் குனிந்து பார்த்தப்படி தனது கரங்களால் கோலம் வரைந்து கொண்டிருந்தாள்.

'நிவேதா போவமா ? ... ரதன்தான் அந்த அமைதிச் சூழலைக் கலைத்தான்.

'ஓம் போவம் மாமா பார்த்துக்கொண்டிருப்பார்...' நிவேதாவும் பதிலுக்கு சொல்லியபடியே புறப்படத் தயாரானாள். ரதன் தனது கைக் குட்டையால் முகத்தைத் துடைத்தவாறே அவளிடமிருந்த தனது பேக்கை வாங்கி தனது தோலில் மாட்டிக் கொண்டான். அவன் முன்னே செல்ல, அவள் மெல்ல மெல்ல பின்னே சென்றாள். அவர்கள் வருவதைக் கண்ட நிவேதாவின் மாமாவும் அவர்களை நோக்கி வரத் தொடங்கினார்.

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல்**

அதற்கிடையில் ரதனும் நிவேதாவும் கன்டீனை நெருங்கி வந்தனர்.

"நிவேதா நான் டீ குடித்து விட்டேன் உங்களுக்கும் ஓடர் பண்ணியுள்ளேன் ஏதாவது சாப்பிடிறீங்களா...?" என்றார். அதற்கு நிவேதா "வேணாம் மாமா டீ மட்டும் போதும்... ரதன் உங்களுக்கு என்ன வேண்டும்? "என்றாள். "எனக்கும் டீ மட்டும் போதும்' என்ற ரதன் கேண்டீனுக்குள்ளிருந்த கதிரையில் அமர்ந்து கொண்டான். அவனுக்கு முன்னே நிவேதாவும் அமர்ந்து கொண்டாள்.

இருவருக்குமான டீ கோப்பையை அந்த கேண்டீன் வேலையாள் கொண்டு வந்து வைத்து விட்டு போனான். "ரதன் டீ குடிங்க நான் வெளியில நிற்கிறன் என்ன.,." என்றவாறே நிவேதாவின் மாமா. கேண்டீனுக்கு வெளியே பிளாட்பாரம் பக்கத்தில் போய் நின்றார்.

தாமதமாக வந்தபடியால் அங்கு ரதனும் நிவேதாவும் மட்டுமே கேண்டீனுக்குள் இருந்தனர். சக பயணிகளில் சிலர் வெளியே நின்று கதைத்துக்கொண்டிருக்க பலர் அந்த பிளாட்பாரத்தில் போடப்பட்டிருந்த வாங்குகளில் அமர்ந்தவாறே உறங்கிப்போயிருந்தனர்.

நிவேதா தேநீரை மெல்ல மெல்ல அருந்திக் கொண்டிருந்தாள் கேண்டீன் வானொலிப்பெட்டியில் ஏதோ ஒரு சிங்களப் பாடல் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. கேண்டீன் உரிமையாளர் ஒரு பாட்டுக் கேசட்டை எடுத்துப் போட்டதும் தமிழ் பாடல் அடிகள் ஒலிபரப்பாக தொடங்கியது. ரதன் மெல்ல சிரித்துக்கொண்டான். என்ன வியாபாரத் தந்திரம் இது. தமிழர்களே அங்கு அதிகம் கூடி இருப்பதால் அவர் தமிழ் பாட்டுக் கேசட்டை எடுத்துப் போடுவதை நிவேதாவுக்கும் கண்களால் சைகை செய்தான். ஆனாலும் அந்த நேரத்தில் அந்த பாடல், அதுவும் தாய் மொழியில் கேட்கும் அவனுக்கு பிடித்த பாடல் மனசுக்கு இதமாக இருந்தது.

'அமுத மழை
பொழியும் முழு நிலவிலே
ஒரு அழகு சிலை
உடல் முழுதும் நனைந்ததே
அடடா ஒரு தேவனையும்
மயக்கிடும்
எந்தன் ஐந்தறிவு
ஜீவன்களும்ரசித்திடும்......'



பாடல்தொடர்ந்துஒலித்துக்கொண்டிருந்தது.

"நிவேதா என்ன அழகான வரிகள் கேட்டீங்களா ...?" ரதன் பேச்சைத் தொடங்கினான்.

"ஓம்ரதன் எனக்கும் பிடித்த பாடல். ஒவ்வொரு அடியும் என்ன அழகா வர்ணிச்சிருக்கு."

"நிவேதா.. இந்த பாட்டு எனக்கும் ரொம்ப பிடிச்ச பாட்டு. இதில் ஒரு சுவை என்னவென்றால் இந்த பாடலை எழுதியது எமது இலங்கைக் கவி ஒருவர். அதுவும் மட்டக்களப்பைச் சேர்ந்த கவிஞர் என திருகோணமலை சுபா ரெக்கொடிங் பாரில் வைத்து தாசன் அண்ணன் சொன்னதாக ஞாபகம். அவரிடம் பொம்பள மனசு என்ற அந்த பட ரெக்கோடர் இருந்தது...."

'அப்படியா கேட்கவே சந்தோசமாய் இருக்கு ரதன்..'

"பூப்போட்ட புதுச் சேலை உடுத்தி
ஒரு பூஞ்சோலையே நடந்த தசைந்து
எந்தன் உயிரோடு உறவாடும் தென்றலே
உந்தன் தளிர் பூவில் இதழ் மோதிச் சென்றதே
விழித்தபடி பார்த்ததிந்த கனவு–நான்
விழித்தபடி பார்த்ததிந்த கனவு
என்ன விந்தை என்று புரியவில்லை எனக்கு...'

பாடல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது. ரதன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அந்த பாடல் வரிகள் அப்படியே நிவேதாவுக்கு பொருந்தியதாய் இருந்தது. அவளது அழகை வர்ணித்தே அந்தக் கவிஞன் எழுதியது போலிருந்தது.



"கோடி நட்சத்திரங்களைப் பறித்து
ஒரு சூரியனுக்குள்
புதைத்து வைத்தது போன்ற
உன் பிரகாசமான முகம்
அன்பே-என்
இத்தனை நாள் தவம்
இதற்காகத்தானோ..?
என் இளமை
இன்று உன்னால்
புதுபிக்கப்பட்டது
இத்தனை கால என்
காத்திருப்புகளும்
இந்த ஒரு
சந்திப்புக்காகத்தானா?
உன்னைக் கண்டு
கொள்ளவா
என் கவிதைகள்
ஒரு சுற்றி வளைப்பையே
நடத்தி வந்தது.
உன்னைக் கண்டு கொண்டேன்
உன்னில் என்னைக் கண்டேன்..."

ரதனின் மனசுக்குள் கவிதை பிரவாகித்தது.அந்த சில நிமிட மௌனம் அவளை என்னவோ செய்தது.தன்னைப் பார்த்தபடியே ரதன் ஏதோ ஆழ்ந்து சிந்திப்பது அவளுக்குப் புரிந்தது.

'ரதன் என்ன யோசனையில் ஆழ்ந்திட்டீங்க...?'

'இல்ல மனசுக்குள் ஒரு கவிதை ஓடியது. அதுதான்.'

'கவிதையா எங்க சொல்லுங்க பார்ப்பம்?' அவள் கேட்கவும் ரதனுக்கு தர்மசங்கடமாகியது. "இல்ல நிவேதா இதனைச் சொல்ல முடியாது. எழுதித் தாறன்.. அதுவும் இப்ப இல்ல..." அவன் சொல்லி முடிக்கவும் புகையிரத மணி அடிக்கவும் சரியாக இருந்தது. கொழும்புப் புகையிரதம் நெருங்கி வந்துவிட்டதற்கான சமிக்ஞை மணி. அனைத்துப் பயணிகளும் எழுந்து புறப்படத் தயாராகினர்.

மேவும்.. .. ..

# எனக்கும் ஒருவன் கிடைத்தான்

ஓ இன்று கோகிலாவைப் பெண் பார்க்க வருகிறார்கள். அதுதான் கோகிலாவின் அண்ணி சுதா அவளை அலங்காரம் செய்து கொண்டிருந்தாள்.

கோகிலா அண்மையில்தான் கனடா வந்திருந்தாள். அவள் அண்ணன் ராகவனோ தன் தங்கை மீது உயிரையே வைத்திருந்தான். அவன் தனக்குத் தெரிந்த புரோக்கர் மூலமாக தன் ஆருயிர்த் தங்கைக்காக வரன் தேடிக்கொண்டிருந்தான். பெண் பார்க்க வருபவர்களோ மண்பார்த்துத் தலை கவிழ்ந்து சென்றனர். அவர்கள் எதனை எதிர்பார்க்கிறார்கள்? கை நிறையச் சீதனம் கொடுக்க அவள் அண்ணன் தயாராகவேயுள்ளான். அவள் குணத்திற்கு நிகர் அவளே தான்.

கோகிலா பிறந்த போது அன்று அமாவாசை போலும். அதனால் அவள் நிறமும் அப்படியே ஆகிவிட்டாற் போலிருந்தது. கோகிலா உண்மையிலேயே ஓர் கோகிலம் தான். அவளிடம் பல திறமைகள் இயல்பாகவேயிருந்தன. இருந்தும் அவளைத் துணையாகக் கைப்பிடிக்க எந்தவொரு ஆண்மகனும் முன்வரவில்லையே. அவளைப் பெண்பார்த்தவர்கள் எத்தனைபேர். ஒவ்வொரு முறையும் மாப்பிள்ளை வீட்டார் போனபின் அண்ணாவின் துடிப்பு அவள் மனதைக் கசக்கிப் பிழிவது போலிருக்கும். ஆண்டவன் மேல் கோபம் கோபமாக வரும் ஏன் என்னை இப்படிப் படைத்தாய் என்று கடவுளிடம் சண்டை செய்தாள்.

சுதா ஒரு பொம்மைக்கு அலங்காரம் செய்வது போலக் கோகிலாவை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். இருவரிடையேயும் மௌனம் நிலவியது. அந்த மௌனத்தைக் கலைத்தான் ராகவன். மாப்பிள்ளை வீட்டார் வந்தாகிவிட்டது என்று ஒருவித படபடப்புடன் வெளியே போனான் அவனைத் தொடர்ந்து சுதாவும் போய்விட்டாள். சிறிது நேரத்தின் பின் பெண்ணை அழைத்து வரும்படி மாப்பிள்ளையின் அம்மா கூறினாள்.

இவர்களுக்கு மட்டுமென்ன என்னைப் பிடிக்கவா போகிறது? அவள் உள் மனமோ என்னை வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போகப்போகிறவர் களுக்குத்தானே நான் தேநீர் கொண்டு போகின்றேன் என்று ஓலமிட்டது. ஒவ்வொருவராக தேநீர்த்தட்டை நீட்டியபடியே போலியாக ஒரு புன்னகையை தன்னைப் பார்த்து சிரித்த அந்த அம்மாளிடம் வீசியபடியே தன் அறைக்குள் விர்ரென்று போய்விட்டாள். தான் நடந்து கொண்டவிதம் சிறிது அநாகரிகமாக அவளுக்குப்பட்டது. அவள் பள்ளித் தோழி நித்யா கூட அவர்களுடன் வந்திருந்தாளே. அவளுடனாவது நான் சிரித்திருக்கலாம் அட அவள்கூட என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பாள்.

அவள் மனம் எரிமலையாகக் கொதித்துக் கொண்டிருந்தது. அதை மற்றவர்களால் எப்படி உணரமுடியும். ஜன்னலினூடே வெளியே பார்த்தாள். வசந்த காலமாதலால் எங்கும் பல வண்ணங்களிலே பூக்கள் பூத்துக்குலுங்கின. அந்த வெம்மையைத் தணிப்பது போல ஜன்னலுனூடே மெல்லெனத் தவழ்ந்து வந்த தென்றல் அவள் வதனங்களை மெல்ல வருடி விளையாடியது. தன்னையே மறந்து சிந்தனையில் மூழ்கிவிட்டாள் கோகிலா.

ஊரிலே அம்மாவும் அப்பாவும் பார்க்காத வரன்களா? நான் ஒரு சங்கீத ஆசிரியை என அறிந்தும் கூட என்னை ஒருவரும் ஏற்க முன்வரவில்லையே. இங்கு கனடாவில் பக்கத்து வீட்டாரையே தெரியாத நிலையில் இருக்கும் போது இதுவெல்லாம் எப்படிச் சாத்தியமாகும்?

தோளிலே ஒரு கை பட நினைவுகளினின்றும் மீண்டும் மெல்லத் திரும்பியவள் தன் தோழி நித்யா சிரித்தபடியே தன் கரங்களை அப்படியே இறுகப் பற்றிப் பிடிப்பதை உணர்ந்தாள். கோகிலா நீ எப்படி இருக்கிறாய்? எத்தனை வருடங்களின் பின் உன்னைப் பார்க்கிறேன் தெரியுமா? உனக்கு இந்த டிரஸ் நல்லாயிருக்கு. கொஞ்சம் மெலிந்த மாதிரிக்கூட இருக்கு. அதற்கு மேல் அவர்களுக்கு வார்த்தைகள் வர மறுத்தன. இருவரும் தம் கரங்களை இறுகப் பற்றிப் பிடித்தபடி ஒருவரை ஒருவர் பார்த்தபடி சிலையாக நின்றனர். வாசலிலே காலரவம் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர். அங்கே சிரித்தபடியே ராகவனும் அவனருகில் நித்தியாவின் அண்ணா முகுந்தனும் நின்றிருந்தனர்.

முகுந்தனும் கோகிலாவும் தனிமையில் விடப்பட்டனர். கோகிலாவால் நம்பவே முடியாமலிருந்தது. இப்படியும் ஒருத்தரா? என்ன யோசிக்கிறீங்க? என்னை உங்களுக்குப் பிடித்திருக்கா? கோகிலா உம்மைப் பற்றி எல்லாமே எனக்குத் தெரியும். இந்தக் கனடாவில் நான் பல பெண்களைப் பார்த்தேன். ஆனால் நான் தேடுகின்ற ஏதோ ஒன்று அவர்களிடம் இருப்பதாக எனக்குப் படவில்லை. ஆனால் நான் எதிர்பார்க்கின்ற எல்லாமே ஒன்றாக உம்மிடம் இருக்கிறதாக உணர்ந்தேன். அவள் கைகள் வியர்த்தன. என்ன நான் சொல்லிக்கொண்டேயிருக்கிறேன் நீங்கள் பேசாமலிருக் கிறீர்கள் என்றான். அவள் அவன் கண்களை நிமிர்ந்து அப்போதான் முதல் தடவையாகப் பார்த்தாள். அந்தக் கண்களிலே பொய்யில்லை. அந்தக் காந்தக் கண்களின் கவர்ச்சியிலே அப்படியே அவள் ஈர்க்கப்பட்டுவிட்டாள். அவள் நெஞ்சிலே பொங்கிநின்ற எரிமலை கூட அவன் பார்வையின் குளிர்ச்சி கண்டு தணிந்து போயிற்று.

– தன்யா –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவி முரசு

இசை...

### மாசி - 2009

கரும்புகையினூடே
அதிர்ந்து ... அதிர்ந்து
வீழ்ந்தவிடமெல்லாம்...
மணல் மூடி
மரம் சரித்து
குழி மூடிக்
குழியறித்து
மனிதப் பிணக்காட்டில்
ஈஸ்வரனாடும்
இசை....

இசை பூந்து
உடலங்கள்
சிதறித் தெறித்தன ..

இசை ... இறந்த
பிணங்களின்
நிணங்களின் மீது
மொச்சைநாற்றமெடுத்து
வழிந்தோடிற்று ...

பக்கவாட்டு
மேளங்கள் ...
பறையுடன் கூடிச்
சிவன் ...
பிணநடனம் ஆட ...

சாம்பல் துகள்களாய்
வீழ்ந்தன
மனிதக் குருத்துக்கள்.

சிதைந்து வீழ்ந்த
சிறுகுருத்தின்

கபாளம் ஏந்திச்
சிவனாடா ...
அச் சிறுகுருத்தின்
தாய்...
கதறியழுகிறாள்

அவள்
வாயினூடும்பூந்து
வயிற்றைக் கிழித்துத்
தசையும்
எலும்பும்
நிணமும்
குருதியும்
இணைந்து...

இசை
இறுதிவடிவமெடுக்கச்

சிவனோ ...
இன்னும் பிணந்திண்ணக்
கரும் புகை
இசைக்கின்றான் ..

சர்ன்
புகத்
தாயொருத்தி
எழுந்து
நிற்கிறாள்

அவள்
கால்களின்
கீழ் ...

சிவன் தின்ற
சிறுகுருத்தின் உடல்
சிறு விரல்கள்
வெளித்தெறிய
புதைந்து கிடக்கிறது ...

சிவனுமை பாகா ....

நான் புல்லாய்ப்
பூடாய். புழுவாய்
மரமாய். பல்விருகமாய்ப்
பறவையாய்ப்
பாம்பாய்க் கல்லாகிக்
காலமெல்லாம் - உன்
நாமம் செபித்திருக்க

எமைப் - பேயாய்
ஏன்
அலையவிட்டீர்?

- மாயன் -



### இப்படியும் அப்படியும் எப்படியும்

மந்திரிப் பதவியே குறிக்கோள்
பலருக்கு,
மக்கள் நலனே விருப்பு ஒரு
சிலருக்கு:

மதில்மேல் பூனையாய் இருப்பர்
ஒரு சிலர்
வசதி வாய்ப்புக்காய் கட்சி
மாறுவார் ஒரு சிலர்!

தற்காப்பு அரசியல் நடத்துவர்
ஒருசிலர்
தடை தாண்டாமலிருப்போரும்
இங்குளர்!

சுயநல விசமிகள் அரசியலில்
சிலர் - தங்கள்
சொகுசான வாழ்வையே
சொர்க்கமாகக் கொள்வர்!

மக்களின் ஆணையைமதிப்பவர்
ஒருசிலர்
வாக்களித்தோரை மறப்
பருளர்!

கவிக்குயிலன், சேனையூர்



### தொல்லையுமாதலால்...



ஆடையினை இழந்து
முழு நிர்வாணமாகி ...

ஜீவாத்மாக மாறி
ஆடை மறந்து எந்நாளும்
பரமாத்மாவில் பதிந்து
இதுவம் அதுவாகி ...

வானமாய் வாயுவாய்
நீராய் நெருப்புமாய்
எங்குமே நிறைந்ததாய்
அருவுருவ மற்றதாய்

ஆடையே அணியாத
அற்புத கோலமாகி ....

இந்தளவு இந்த ஆடை
அருவருப்பானது மட்டுமல்ல
அடிக்கடி நோய் நொடியென்று
தொல்லையும் தருவதால்.

திருமலை சுந்தா

### திருமலை வாழ் மலைகள்



மலை சூழ் ஆழி ஆர்த்தெழ
மாவலியாள் தலை தாழ்த்தியெழும்
மாவேந்தன் ராவணேசன் தரிசனம் கண்ட
கோணேசர் வாழ்பூமி திருகோணமலை

வங்கத்தின் வாசல் கொட்டியாரக்குடா தன்னில்
கங்கை மலைகள் பெரிதுண்டு சிறிதுமுண்டு
பாதளமலை யென்ற பேரும் இதிலொன்று
பக்கமாயுள்ளது படையினரின் (நேவி) மலை

நெய்க்கினறுகள் கொண்ட நெய்மலை
வெள்ளக்கல்மலை வள்ளக்கல்மலை
நாகமலை நல்ல மத்தளமலை
ஆக இம்மலையாவும் கோணேசர் நிதிமலையே

கோணேசர் குடி கொண்டது கோயில்மலை
ஈசன் இடம்பெயர்ந்திருந்தது கழனிமலை
சம்பூரின் கீழ்திசையில் கரடிமலை கற்கேணிமலை
மூதூரின் மூன்றுமைல் ராஜவந்தான் மலைத்தொடர்

மக்கள் உவந்தேறிய உவர்மலை யுண்டு
மகிழ்வு தரும் கடலருகே அரிசிமலையுண்டு
வட்டவனிலுண்டு எழுத்துக்கல் மலை
வேலவன் சந்நிதியிலோ வெருகல்மலை

சம்பூர் ஸதீஸ்

# திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில் திருக்கோணேஸ்வரம்

**வரலாற்றுப் பக்கம்**

கடந்தவாற தொடர்ச்சி.. ...



கோணேசர் பதிகத்தினைப் போலவே ஏனைய பதிகங்களின் முத்திரைக் கவிதைகளில் "நற்றமிழ் ஞானசம்பந்தன்" "தமிழ் ஞானசம்பந்தன்" "சம்பந்தன் செய்த தமிழ் மாலை" "தமிழ் நவிலும் ஞானசம்பந்தன்" என்று விளிக்கிறார். இதன் மூலம் மிகத்தெளிவாக மொழி (தமிழ்) உணர்வு ஊடாக பக்தி மார்க்கத்தினைப் புத்துயிர் பெறச் செய்ய சம்பந்தர் முயற்சித்து வெற்றி கண்டிருக்கிறார் என்பது புலனாகிறது.

"தேசிய இலக்கியம்" என்ற நூலில் அதன் ஆசிரியரான திரு.அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் '*தமிழ்முரசு கொட்டி, தமிழ்க் கொடியேந்தி, தமிழ்க் கவிதையால் தமிழ்க் கடவுளைப் பாடிதுதிக்கும் தமிழினத்தைத் தட்டி யெழுப்பிய வீரத் தமிழராக*' திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரைப் பார்க்கிறார். அது மிகப்பொருத்தமானதே.

மக்கள் மத்தியில் சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு ஏற்ற ஊடகமாக இசையுடன் பாடக்கூடிய தேவாரத்தைத் தெரிவு செய்து, மக்களை அணிதிரட்டச் செய்ய பக்தி இரசத்தையும், மொழி உணர்வையும் (தமிழ்) இனஉணர்வையும் (இராவணன்) சமவிகிதத்தில் கலந்து சமண, பௌத்த மதங்களுக்கான எதிர்ப்புணர்வையும் நயத்துடன் புகுத்தி தனது இலட்சியத்தில் வெற்றி பெற்ற தோடல்லாமல் பின் வந்தவர்களுக்கும் வழிகாட்டியாக விளங்குகிறார் ஞானசம்பந்தர். தன் காலத்தில் சைவத்தின் எழுச்சியை தமிழின் எழுச்சியாக்க முற்பட்டிருக்கிறார் சம்பந்தர் என்பது குறிப்பிடத் தக்கது.

அக்காலத்தில் தீண்டாக் குடும்பத்தைச் சேர்ந்தவராகக் கருதப்பட்ட திருநீலகண்டர் என்பவரை தம்முடன் யாழ் இசைப்பதற்காக அழைத்துச்சென்ற இவர் சாதி வேறுபாடு, தீண்டாமை முதலிய மூடநம்பிக்கைகளை உடைத்தெறிய முயன்றிருக்கிறார். அத்துடன் தேவாரம் பாடி கோவிற்கதவு திறக்கப்பட்ட கதைமூலம் வேதப்பொருள் தெரியாமல் இருந்த சாதாரண தமிழ் மக்களுக்கு வேதப்பொருளினை தமிழில் அறியச்செய்ய திருஞானசம்பந்தர் பாடுபட்டிருக்கிறார் என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது.

மக்களுடைய நம்பிக்கைகள் தளர்ந்து, சமயம் தளர்வுற்றிருந்த காலத்தில் பக்தி இயக்கத்தினை முன்னெடுத்துச் செல்ல உறுதி பூண்டவர் ஞானசம்பந்தர். அவர் பதிகம் பாடி சுமார் 1350 ஆண்டுகளுக்குப் பின்னால் கடல் சூழ்ந்த இயற்கை எழில் கொஞ்சும் கோணமலைக் குன்றில் வீற்றிருக்கும் திருக்கோணேசப் பெருமானைக் கண்மூடி '*குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும் கோணமாமலையமர்ந்தாரே*' என்று தியானிக்கும் போது திருஞானசம்பந்தரின் திருவுருவம் மனக்கண்ணில் நிழலாடுவதைத் தவிர்க்க முடியவில்லை.

முற்றும்.....

வைத்திய கலாநிதி
த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 01

# மக்களில் இருந்து..... மக்களை நோக்கி

-மாயன்-

## இலக்கை அடைந்த மக்கள் போராட்டமொன்றின் பதிவுகள்

ஒரு இனத்தின் விடுதலை என்பது மிக நீண்ட பயணமொன்றின் நிறைவில் ஈட்டப்படுகின்ற ஒப்பற்ற உணர்வாகவே அவ்விடுதலைக்காகப் போரிட்ட மக்களிடம் இருக்கின்றது.

விடுதலை என்பது ஒரு உணர்வு என்பதில் எவ்வித மாறான கருத்துக்களும் இல்லை. யார் விடுதலை பெற வேண்டும் என நினைக்கின்றார்களோ அவர்களே தாங்கள் விடுதலை அடைந்ததாக உணரும் போது மட்டுமே அங்கு விடுதலை என்பது சாத்தியம் ஆகின்றது.

விடுதலை என்ற பதத்தின் உணர்வு நிலை விளக்கமாக பற்றற்றுப் போய்விடும் ஆன்மீக நிலை காணப்படுகின்றது எனினும் உரிமைகளை நிலைபெறச் செய்தல் என்பது விடுதலையின் இயக்கநிலை விளக்கமாக உள்ளது.

ஈழதேசத்தின் விடுதலைப் போராட்ட வரலாறானது மக்களில் இருந்து முகிழ்த்துப் பரவி பின்னர் அதன் கிளைகளில் ஒன்று மக்களை அடக்கும் சக்தியாகவும் பரிணமித்திருந்தது.

இன்று அரசியல் நிலைப் போரில் இருந்து ஆயுதப் போராகப் பரிணமித்து மீண்டும் அரசியல் நிலைக்கே ஈழ தேச விடுதலைப் போர் மாறியுள்ளது.

உலகில் ஆயுத யுத்தத்தினால் கியூபா சுதந்திரம் அடைந்த பின்னர் அனைத்து நாடுகளும் அரசியல் முயற்சிகளாலேயே தமது சுதந்திரத்தை அனுபவிக்கத் தொடங்கின என்பதை வரலாறு கோடிட்டுக் காட்டியுள்ளது.

அவ்வாறு தமிழர் தேசத்திலும் இன்று அரசியல் அணுகுமுறைகளில் மக்களின் போர் பயணப்படத் தொடங்கியுள்ளது.

அதன் புதிய பரிணாமமாக மக்கள் தாமே தமது உரிமைக்காக குரலெழுப்பிய நிகழ்வொன்று திருகோணமலையில் கடந்த வாரத்தில் பதிவாகியிருந்தது.



----

காணாமற்போனோரைக் (கா.போ.ஆ) கண்டறியும் ஆணைக்குழுவெனப் பெயரிடப்பட்ட ஆணைக்குழுவானது முந்தைய சனாதிபதியால் நியமிக்கப்பட்டது. தமிழ் மக்களின் ஆயுதப் போர் முடிவடைந்த பின்னர் அவர்களுடனான நல்லிணக்க வாழ்விற்காக உருவாக்கப்பட்ட மற்றொரு சனாதிபதி ஆணைக்குழுவான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்பவே இந்த கா.போ.ஆ உருவாக்கப்பட்டது. கா.போ.ஆவின் ஒன்றரை வருட காலப்பகுதியின் அமர்வுகள் தொடர்பாகக் கடும் விமர்சனங்களும் கருத்துக்களும் தமிழ் மற்றும் சிங்கள மனித உரிமை மற்றும் சிவில் சமூக அமைப்புக்களால் காலத்திற்குக் காலம் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் ஆட்சி மாற்றமொன்று இலங்கையில் நிகழ்ந்தது.

அப்போதைய சனாதிபதியான மஹிந்தவைத் தோற்றகடிக்க வேண்டும் என்ற முனைப்புடன் அதற்கு மாற்றாகப் பெயரிடப்பட்டிருந்த தற்போதைய சனாதிபதியான மைத்திரிபால ஸ்ரீசேனவின் வெற்றிக்காக இடப்பட்டன.

அவ்வெற்றியின் பின்னர் உள்நாட்டு விசாரணைகளில் சர்வதேசத் தரம் இருக்கும் என்ற கருத்துக்களை பிரதமமந்திரி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளிப்படையாகக் கூறி வந்தார்.

ஆனால் புதிய ஆட்சியின் பின்னர் உள்நாட்டு விசாரணைக்காக தனது முதலாவது அமர்வைச் செய்ய வந்த கா.போ.ஆ எவ்வித மேம்பாடுகளும் இன்றி அவ்வாறே இருந்ததுடன் அதன் இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக ஏமாற்றியிருப்பதை அறிவுடையோரெல்லாம் புரிந்து கொண்டனர்..........

நகரும்....

# முன்நாள் சனாதிபதியுடன் சில நிமிடங்கள் –

எனது நாட்டில் இடம்பெற்ற கிளர்ச்சி போன்றே உங்களுடைய நாட்டிலும் கிளர்ச்சி இடம்பெறுகிறது. இதற்குப் பின்னால் இந்தியாவின் றோ அமைப்பு செயற்படுகிறது என ராஜபக்ச குறிப்பிட்டார்.

இவ்வாறு சிறிலங்காவின் முன்னாள் ஆட்சியாளருடனான சந்திப்புக் குறித்து, பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் டவுன் நாளிதழில், மலீகா ஹமித் சித்திக் என்ற பெண் ஊடகவியலாளர் விபரித்துள்ளார். இதனை புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

சனிக்கிழமை காலை எட்டு மணி.

சிறிலங்காவின் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சவின் காட்டுப் பச்சை நிறத்தாலான இல்லத்திற்கு இற்கு வெளியே நான் காத்திருந்தேன். அது ஒரு சுமாரான, தாழ்ந்த கூரையைக் கொண்ட இல்லமாகக் காணப்பட்டது.

இந்த இல்லத்தின் முன்னால் நடுத்தர அளவிலான பலகையில் மகிந்த ராஜபக்சவின் உருவப்படம் காணப்பட்டது.

ஐம்பது நாட்களுக்கு முன்னர் வெளியாகிய அதிபர் தேர்தலின் அதிர்ச்சித் தோல்வியின் பின்னர் தற்போது சிறிலங்காவின் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச தனது சொந்த நகரான தங்கல்லையில் தங்கியுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, தான் தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவேன் என்ற அதீத நம்பிக்கையுடன் தனது பதவிக்காலம் முடிவதற்கு முன்னர் 1977ல் அடுத்த தேர்தலை நடத்தி அதில் தோல்வியுற்றது போன்ற நிலையே தற்போது மகிந்த ராஜபக்சவுக்கும் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மகிந்த ராஜபக்சவும் தனது சோதிடரின் ஆலோசனையின் பேரிலேயே தனது ஆட்சிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் தேர்தலை நடத்தினார்.

தங்கல்லையில் உள்ள மகிந்த ராஜபக்சவின் வதிவிட இல்லத்தில் இரண்டு காவற்துறையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுகின்றனர். இவர்கள் ஒலிவ் பச்சை நிற சீருடைகளை அணிந்துள்ளதுடன், இவர்களுடன் கடமையில் ஈடுபடும் மூன்று புலனாய்வு அதிகாரிகளும் மெல்லிய அரைக்கை சேட்டுடனும் கறுப்பு நிற நீளக்காற்சட்டையுடனும் காணப்பட்டனர்.

அவர்கள் மேம்போக்காக என்னைப் பார்த்ததுடன், சாய்ந்து செல்லும் வீதியை உற்றுநோக்கினர். சேலை அணிந்த பெண்களும், சேட் மற்றும் நிற சாரங்களை அணிந்திருந்த ஆண்களும் சீருடை தரித்த பாடசாலைச் சிறார்களும் அந்த வீதியால் பயணித்துக் கொண்டிருந்தனர்.

சிலர் முன்னாள் அதிபரின் வதிவிட இல்லத்தின் வாயிற் கதவுகளில் காத்திருந்தனர். மிகப் பெரிய மரம் ஒன்றின் நிழலின் கீழ் அமைந்திருந்த இந்த வாயிற் கதவில் காத்திருந்த மக்கள் சிலர் தமது பிள்ளைகளையும் கூட்டி வந்திருந்தனர். இந்தச் சிறார்கள் 'மகிந்த ராஜாவிடம்' (மகிந்த அரசன்) ஆசிர்வாதம் பெறுவதற்காகவே காத்திருந்தனர்.

நான் வியாழக்கிழமையும் மகிந்த ராஜபக்சவின் இல்லத்திற்கு வந்திருந்த போது இதனை அறிந்திருந்தேன். கொழும்பு கல்கிசையில் தங்கியிருந்த போது தற்செயலாக நான் சந்தித்த நபர் ஒருவர் மகிந்த ராஜபக்சவை நான் சந்திக்க வேண்டும் எனக் கூறினார்.

இவர் தான் நான் முன்னாள் அதிபரைச் சந்திப்பதற்கான தொடர்பாளராகச் செயற்பட்டார். 'தனது தேர்தல் தோல்வி தொடர்பாக முன்னாள் அதிபர் இதுவரையில் ஊடகங்களில் கருத்துத் தெரிவிக்கவில்லை. இவரைச் சந்தித்து நீங்கள் இது தொடர்பாக ஊடகத்தில் எழுதவேண்டும்' என எனது தொடர்பாளர் என்னிடம் கூறினார்.

இதன்பிரகாரம் நான் திரு.ராஜபக்சவின் நெருங்கிய கூட்டாளியான நிசாந்த சண்டாபரனவுக்காக காத்துக்கொண்டிருந்தேன். இவர் என்னை திரு.ராஜபக்சவிடம் கூட்டிச் செல்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தார்.

மகிந்த ராஜபக்சவின் வதிவிட இல்லத்தைச் சூழவிருந்த வழக்கமான காட்சிகள் என்னைக் குழப்பத்திற்கு உள்ளாக்கியது. மகிந்த ராஜபக்சவின் 'கார்ல்டன் இல்லத்திற்கு' அடுத்ததாக மருந்தகம் ஒன்று காணப்பட்டது. மக்கள் அங்கே தமக்குத் தேவையான மருந்துகளை வாங்குகின்றனர்.

இந்த இல்லத்திற்கு எதிராக தொழிற்சங்க அலுவலகம் ஒன்று காணப்பட்டது. இதற்கு அடுத்ததாக தீயணைப்புப் படையினரின் அலுவலகமும் திரையரங்கு ஒன்றும் அமைந்துள்ளன.

சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் எவரும் இங்கு நிறுத்தப்படவில்லை. இங்கு எவ்வித சோதனைச் சாவடிகளும் காணப்படவில்லை. பாதுகாப்பு அரண்களுடன் கூடிய நுழைவாயில் காணப்படவில்லை.

எமது முன்னாள் அதிபர் தனது சொந்த நகரான கராச்சியில் பாதுகாப்புக் கோட்டை ஒன்றுக்குள் தங்கியுள்ளார் என்பதை எவரும் இந்த இடத்தில் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது.

மணி எட்டரை. பல பேருந்துகள் 'கார்ல்டன் இல்லத்திற்கு' அருகில் மக்களை இறக்கி விட்டுச் சென்றன. தமக்குச் சிறப்பான உடைகளுடன் வந்திருந்த மக்கள் இந்த இல்லத்திற்குள் சென்றனர்.

இவ்வாறான நிகழ்வானது தற்போதும் மகிந்த ராஜபக்ச தனது நாட்டு மக்கள் மத்தியில் பிரபலமடைந்துள்ளார் என்பதையே உணர்த்தி நிற்கிறது.

ஜனவரி 09 அன்று அதிபர் தேர்தலின் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டு இரண்டு நாட்களிலிருந்து ஒவ்வொரு நாளும் மக்கள் காலை நான்கு மணியிலிருந்து இந்த இல்லத்திற்கு வெளியே காத்திருக்கத் தொடங்குவார்கள் என அங்கிருந்த காவற்துறை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

'முதல்நாள் பல ஆயிரக்கணக்கான மக்கள் முன்னாள் அதிபரைப் பார்ப்பதற்காக வந்தனர். இதன் பின்னர் ஒவ்வொரு நாளும் பல நூற்றுக்கணக்கான மக்கள் முன்னாள் அதிபரின் இல்லத்திற்கு வருகை தந்து தமது மரியாதைகளை அவருக்குச் செலுத்திச் செல்கின்றனர்' என காவற்துறை உறுப்பினர் மேலும் குறிப்பிட்டார். நான் முன்னாள் அதிபரின் இல்லத்தின் நுழைவாயிலைக் கடந்து மிகச் சிறிய பாதுகாப்பு அறைக்கு அடுத்துக் காணப்பட்ட ஒரு இருக்கையில் அமருமாறு கூறப்பட்டேன். இங்கு மக்கள் தமது கைத்தொலைபேசிகளை கையளித்து விட்டு வரிசையில் அமைதியாகக் காத்திருந்தனர்.

காலை 9.15, இல்ல வளாகத்திற்குள் மிகப் பெரிய கறுப்பு நிற கார் ஒன்று நுழைந்ததை நான் கண்டேன். உடனே அங்கு கூடியிருந்த மக்கள் நீங்கள் நீண்ட ஆயுளைக் கொண்டிருப்பீர்கள் என வாழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக திரு.ராஜபக்ச தனது இல்லத்திற்கு வந்தடைந்திருந்தார்.

திரு.சண்டபரான என்னைக் கூட்டிச் செல்வதற்காக வந்தார். அதற்கு முன்னர் நான் எனது கைப்பையை பாதுகாப்பு அதிகாரிகளிடம் கையளிக்க வேண்டியிருந்தது. நாங்கள் நீண்டு சென்ற மக்கள் வரிசையைக் கடந்து சென்று கொண்டிருந்தோம்.

'பாகிஸ்தானிய பெண்மணி ஒருவர் தங்களைச் சந்திக்க விரும்புவதாகவும் ஏனெனில் அவரது உள்ளத்திலும் பாகிஸ்தானிய மக்களின் இதயங்களிலும் நீங்கள் வாழ்வதாக நான் ஏற்கனவே திரு.ராஜபக்சவிடம் கூறியுள்ளேன்' என திரு.சண்டபரான என்னிடம் தெரிவித்தார். 'ஆம். உண்மையில் அப்படித்தான்' என நான் பதிலளித்தேன்.

மக்கள் வரிசையில் காத்திருந்த போது அவர்களைக் கடந்து என்னை ஒரு அறைக்குள் கூட்டிச்சென்றார். அங்கு சிறிலங்காவின் முன்னாள் அதிபர் பழுப்பு நிற தோலாலான கதிரையில் அமர்ந்திருந்தார். அவர் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். நாங்கள் கைகுலுக்கினோம்.

'உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி' என நான் அவரிடம் கூறினேன். 'தங்களைச் சந்திப்பது போன்று எமது நாட்டின் முன்னாள் அதிபரைச் சந்திப்பதென்பதைக் கற்பனையில் கூட என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. நீங்கள் மிகவும் பிரபலமடைந்துள்ளீர்கள்' என நான் அவரிடம் கூறினேன்.

அவர் பெருமை பொங்க எனது கைகளை மேலும் இறுக்கமாகப் பற்றிப்பிடித்தார். தமிழர் கிளர்ச்சியை முறியடிப்பதற்கு பாகிஸ்தான் தமக்கு உதவியதாக நான் சந்தித்த இலங்கையர்கள் சிலர் என்னிடம் கூறியது தொடர்பாக திரு.ராஜபக்சவிடம் நான் வினவினேன்.

'அமெரிக்கா, ஐரோப்பா, மேற்குலகம் போன்றன எமது நண்பர்களல்ல. எமக்கு பாகிஸ்தான் உதவியுள்ளது. குறிப்பாக முசாரப் உதவியுள்ளார். எனது நாட்டில் இடம்பெற்ற கிளர்ச்சி போன்றே உங்களுடைய நாட்டிலும் கிளர்ச்சி இடம்பெறுகிறது. இதற்குப் பின்னால் இந்தியாவின் றோ அமைப்பு செயற்படுகிறது' என திரு.ராஜபக்ச குறிப்பிட்டார்.

பாகிஸ்தானும் சிறிலங்காவும் எவ்வாறு மேலும் நெருக்கமான உறவைக் கட்டியெழுப்ப முடியும் என நான் அவரிடம் வினவினேன்.

'நான் இரண்டு தடவைகள் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளேன். நான் தக்சிலவுக்குச் சென்று பௌத்த எச்சங்களைப் பார்த்துள்ளேன். இவை தொடர்பாக இங்குள்ள மக்களுக்கு எதுவும் தெரியாது' என திரு.ராஜபக்ச தெரிவித்தார். 'கிழக்கில் வாழும் முஸ்லீம்களும் வடக்கில் உள்ள மக்களும் தற்போது நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் தவறாக வழிநடாத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக இவர்கள் அனைத்துலக சக்திகளால் தவறாக வழிநடத்தப்பட்டனர்' என மகிந்த ராஜபக்ச விளக்கினார்.

பாகிஸ்தானிய மக்களுக்கு ஏதாவது செய்தியைக் கூறப்போகிறீர்களா என நான் ராஜபக்சவிடம் வினவியபோது, 'உங்களது நாட்டில் தற்போது இடம்பெறும் கிளர்ச்சி விரைவில் முடிவுறும். நாடு வளம்பெறும். நாங்கள் மேலும் நெருக்கமானவர்களாவோம்' என திரு. ராஜபக்ச குறிப்பிட்டார்.

திரு.ராஜபக்சவிடமிருந்து விடைபெறுவதற்கு முன்னர் என்னை அவர் சந்தித்ததற்காக நான் நன்றி கூறியதுடன் 'நீங்கள் தற்போதும் சோதிடத்தில் நம்பிக்கை கொண்டுள்ளீர்களா' என நான் திரு.ராஜபக்சவிடம் வினவினேன்.

அதற்கு அவர் 'தற்போது நான் சோதிடத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை' எனக் கூறிவிட்டு உரத்துச் சிரித்தார்.

# விளையாட்டும் பயன்

**MOBILE**

## ஐபோனை காப்பாற்றுங்கள்

பல்வேறு அப்ளிகேஷன்களோடு களமிறங்கியுள்ள ஐபோன் இன்று ஹேக்கிங் இனால் அனைவருக்கும் பெரும் பிரச்சனையாக இருந்து வருகின்றது. அந்த வகையில் ஐபோனை ஹேக்கர்களிடம் இருந்து பாதுகாக்கும் சில எளிய வழிமுறைகளை இதோ,

1. நான்கு இலக்கு கடவுச்சீட்டுகளை பயன்படுத்தலாம். இதை செயல்படுத்த செட்டிங்ஸ் சென்று டச் ஐடி மற்றும் பாஸ்கோடு ஆப்ஷனை க்ளிக் செய்து சிம்பிள் பாஸ்கோடை ஆ.்.ப் செய்ய வேண்டும், இதையடுத்து உங்களால் பெரிய கடவுச்சீட்டை செட் செய்து கொள்ள முடியும்.

2. செல்.்.ப் டிஸ்ட்ரக்ட், ஆப்ஷன் யாரேனும் உங்களது போனை தவறாக பயன்படுத்த நினைத்தால் அதில் இருக்கும் அனைத்து தகவல்களும் அழிந்து விடும்.

3. அதிகளவில் செயலிகளை பயன்படுத்தும் போது மற்ற அம்சங்களை பயன்படுத்தும் வாய்ப்பும் அதிகமாகிறது, இதனால் உங்களது தகவல்கள் உங்களது அனுமதியின்றி பரவ வாய்ப்புகள் இருக்கின்றது. செட்டிங்ஸ் ஆப் சென்று ப்ரைவசி ஆப்ஷனை க்ளிக் செய்து நீங்கள் பரவலாக பயன்படுத்தும் செயலியிற்கு ஏற்ப செட்டிங்ஸை மாற்றியமைத்து கொள்ளுங்கள்.




4. ஆட்டோ.்.பில் ஆப்ஷனை யூசர் நேம், கடவுச்சீட்டு போன்றவைகளை என்டர் செய்யும் போது பயன்படுத்தாமல் இருப்பது நல்லது.

5. முதலில் டேட்டா ரிக்கவரி ப்ரோகிராம் ஒன்றை பதிவிறக்கம் செய்து இன்ஸ்டால் செய்ய வேண்டும். முதலில் முக்கியமான தகவல்களை மீட்க வேண்டும்.

யுஎஸ்பி கார்டு ரீடரில் மெமரி கார்டை செருகி கணனியில் பொருத்த வேண்டும்.

டேட்டா ரிக்கவரி ப்ரோகிரம் மூலம் கரப்ட் ஆன மெமரி கார்டில் இருந்து தகவல்களை ரிக்கவர் செய்ய முயற்சி செய்யலாம்.

ஸ்டார்ட் மெனு சென்று Computer என க்ளிக் செய்ய வேண்டும்.

கணனியில் டிவைசஸ் மற்றும் ரிமூவபிள் ஸ்டோரேஜ் பகுதியில் உங்களது மெமரி கார்டு காணப்படும்.

டெஸ்க்டாப்பில் Win+R பட்டன்களை க்ளிக் செய்து cmd என டைப் செய்து OK பட்டனை க்ளிக் செய்ய வேண்டும்.

கமான்ட் ப்ராம்ப்ட் ஸ்கிரீனில் chkdsk m: /r, என டைப் செய்ய வேண்டும், இங்கு m: வார்த்தை உங்களது மெமரி கார்டை குறிக்கும், அதன் பின் ↵ Enter பட்டனை க்ளிக் செய்ய வேண்டும்.

**INFOMATION TECHNOLOGY**

## புது கொன்ரோலர்



பல்வேறு ஹேமிங் சாதனங்களையும் கட்டுப்படுத்தக்கூடிய ஹேம் கொன்ரோலர்கள் பொதுவாக ஒரே மாதிரியாகவே காணப்படும். இதனை மாற்றியமைப்பதற்காக Grifta எனும் புதிய ஹேம் கொன்ரோலர் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

Ps3, PS4, Xbox 360, மற்றும் Xbox One ஆகிய சாதனங்களில் இயங்கக்கூடிய இந்த கொன்ரோலர் விண்டோஸ் கணனிகள் மற்றும் அன்ரோயிட் சாதனங்களிலும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.

## ஹேம் தளவிறக்கம்

ஹேம் பிரியர்களை கொள்ளை கொள்வதற்கு சோனியின் PlayStation 4 சாதனத்தில் விரைவில் Rock Band 4 ஹேம் களமிறங்கவுள்ளது. தற்போது வடிவமைப்பில் உள்ள இக்ஹேம் ஆனது இந்த வருட இறுதிக்குள் வெளியாகும் என இத்திட்டத்திற்கு பொறுப்பான முகாமையாளர் Eric Pope தெரிவித்துள்ளார்.




கையில் அழகுக்காக ஒட்டப்படும் ஸ்டிக்கரை கொண்டே ஸ்மார்ட் கைப்பேசிகள், டேப்லட்களை கட்டுப்படுத்த ஜேர்மனியில் உள்ள ஓர் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. iSkin எனப்படும் இந்த ஸ்டிக்கர் ஆனது இருவகையான சென்சார்களைக் கொண்டுள்ளதுடன் வயர்லெஸ் தொழில்நுட்பத்தி னையும் உள்ளடக்கியுள்ளது.

இதில் தொடுகையை ஏற்படுத்துவதன் மூலம் மொபைல் சாதனங்களைக் கட்டுப்படுத்த முடியும். மேலும் இந்த ஸ்டிக்கர்கள் பல்வேறு வடிவங்கள் மற்றும் அளவுகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

**OTHER**

## 12 பில் மடங்கு பெரிது



சூரியனை விடவும் 12 மில்லியன் மடங்கு பெரிய இராட்சத கருந்துவாரமொன்றை சர்வதேச விஞ்ஞானிகளைக் கொண்ட குழுவொன்று கண்டுப்பிடித்துள்ளது. எஸ்.டி.எஸ்.எஸ் ஜெ 0100 + 2802 என பெயர் சூட்டப்பட்டுள்ள மேற்படி கருந்துவாரமானது பூமியிலிருந்து 12.8 பில்லியன் ஒளியாண்டு தொலைவில் அமைந்துள்ளது. அது விண்வெளியில் ஒளி மற்றும் மின்காந்த ஆற்றலை வெளிப்படுத்தும் இராட்சத சக்தி மூலத்தின் மையத்தில் உள்ளது. அந்த சக்தி மூலமானது எமது சூரியனின் சக்தி வெளிப்பாட்டை விட மில்லியன் பில்லியன் தடவைகள் சக்தி வெளிப்பாட்டை கொண்டது.

## ஸ்பாஷ் ட்றோன்



தற்போது நீர் உட்புகாத தொழில்நுட்பத்தினைக் கொண்ட Quadcopter வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை Splash Drone எனும் விசேட பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றது. இதில் 15 நிமிடங்கள் பறப்பில் ஈடுபடுவதற்கான சக்தியை வழங்கக்கூடிய 4,200mAh மின்கலம் ஒன்றும் இணைக்கப் பட்டுள்ளது. மேலும் இதில் பொருத்தப்பட்டுள்ள ட்ரான்ஸ்மிட்டரினூடாக 1.6 கிலோ மீற்றர்கள் வரையான தூரத்திலிருந்து வீடியோ பதிவுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

## அதி வலு கார்

பிரபல கார் வடிவமைப்பு நிறுவனமான Koenigsegg ஜெனீவாவில் இடம்பெற்று வரும் சர்வதேச மோட்டார் ஷோவில் 1500 குதிரைவலுக் கொண்ட காரை அறிமுகம் செய்துள்ளது.

Koenigsegg Regera எனும் இக்காரின் முழுமையான சிறப்பம்சங்கள் வெளியிடப்படாத நிலையில் ஓய்விலிருந்து மணிக்கு 250 மைல்கள் எனும் வேகத்தை அடைவதற்கு 20 செக்கன்களே இக்கார் எடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# குறுக்கெழுத்து புதிர் 051

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | | ■ | 2 | | | 15 | |
| 3 | | | ன் | | | 4 | | |
| | | ■ | 16 | | | ■ | | ■ |
| | க | ■ | | ■ | 5 | | | ■ |
| ■ | | ■ | | ■ | ல | ■ | 6 | |
| 7 | | 17 | | ■ | | ■ | | ■ |
| | ம் | | 8 | | | ■ | 9 ரோ | |
| | ■ | 10 | ட் | | | ■ | ■ | ■ |
| | ■ | | | 11 | 12 | | 13 | |

### இடமிருந்து வலமாக

1. பூக்களைக் கோர்த்தால் கிடைக்கும்
2. குளத்திலுள்ள சிவப்பு மலர் - ஒரு எழுத்து குழம்பியுள்ளது.
3. உலகினைக் கலைத்த அழகிகளில் ஒருவர்
4. யூலியட்டின் காதலி
5. இசையை உருவாக்கும் பானை
6. அணைந்ததாய் வெளியே தெரியும் நெருப்பு
7. இரவில் தங்கும் இடம்
8. இது போனால் உடல் உடலம் ஆகம்
9. இத்தாலியின் தலைநகரம்
10. மாவினால் செய்யப்படும் உணவு
11. அடுப்பு எரியாவிட்டால் இது வரும்
12. சிறையில் இருப்பவர்
13. முக்காலமும் உணர்ந்தவர்

### மேலிருந்து கீழாக

1. எறிந்தால் திரும்பிவரும் ஆயதம்
5. ஆணும் பெண்ணும் இணைவது
6. கறுப்பினத்தரவரைக் குறிக்கும் பொதுப் பெயர்
7. அங்குசத்தால் இதனை அடக்க முடியாது
8. காசு தேவைப்படும்போது கூறுவது
10. சமாதானத்தின் பறவை
12. திசையை அளக்கும் அளவீடு
14. பெண்களுக்கு இங்கும் புற்றுநொய் வரும்
15. [illegible]
16. [illegible] புத்தகம்
17. மீட்டப்படும் வாத்தியம் - ஒரு எழுத்து குழம்பியுள்ளது

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :**

முடிவுத்திகதி : 12.03.2015

மலைமுரசு. இல - 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## புதிர் 050 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | ண் | டீ | 20 ப | ம் | 2 க | ப | ட | ம் |
| 3 த் | தை | பே | வி | 4 உ | டு | ம் | பு | ■ |
| த | ■ | 5 மு | த | லை | 24 பு | ■ | ■ | 18 கு |
| 6 வ | 21 ள் | ளி | 7 தொ | டை | ப் | ப | ம் | 19 கை |
| ரா | ளி | 8 பி | ர | 17 தி | வா | 23 தி | 16 வ | லை |
| 22 ய | 9 ப | டி | ■ | வி | ர் | ங் | த | நா |
| 10 ன் | கூ | யா | ■ | நெ | 11 டி | க | ம் | த |
| ன | ■ | ணை | 12 ச | கு | ணி | ள் | ன | ர் |
| ல் | 13 னி | தா | ரு | 14 ம | ண் | 15 ல் | யி | உ |

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:**

செல்வி. ம. தனுசா,
நாலாம் குறுக்குத்தெரு, திருகோணமலை

**பாராட்டு பெறுவோர் :**

செல்வி. கீ. கீதாஞ்சலி
செல்வன். கு. குமணன்
திரு. ம. வடிவழகன்
திரு. கே. புவனஹரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினி முரசு

## திரை விமர்சனம் இயக்குனர் துறை செந்தில்குமாரின் "காக்கி சட்டை"

### சிவகார்த்திகேயன், ஸ்ரீதியா நடிக்கும்



கான்ஸ்டபிளாக தன் வாழ்க்கையை தொடங்கும் சிவகார்த்திகேயன் எப்படியாவது இன்ஸ்பெக்டர் ஆகவேண்டும் என முயற்சி செய்து வருகிறார். ஆனால், இதற்காக இவர் பெரிதாக முயற்சி ஏதும் எடுக்காமல் இமான் அண்ணாச்சியுடன் சேர்ந்து ஜாலி அரட்டை அடித்து வருகிறார். ஒரு திருடனை பிடிக்கும் முயற்சியில் ரயில்வே ஸ்டேஷனில் ஸ்ரீதிவ்யாவை பார்க்கும் இவருக்கு பார்த்தவுடன் காதல் தான். இதை தொடர்ந்து ஒரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீதிவ்யா வீட்டிற்கு சிவகார்த்திகேயன் செல்ல, அவர்கள் குடும்பத்திற்கு போலிஸ் என்றாலே பிடிக்காது என்று அறிந்து கொண்டு, தான் வேலை தேடும் இளைஞன் என்று பொய் சொல்லி ஸ்ரீதிவ்யாவை காதலிக்க ஆரம்பிக்கிறார். இவருடன் ஜாலியாக டூயட், காமெடி என தன் வழக்கமான நகைச்சுவை பலத்துடன் அடித்து தூள் கிளப்புகிறார் சிவகார்த்திகேயன். ஆனால், இவர் கண்ணில் அவ்வப்போது படும் சில குற்றங்களை, மேல் அதிகரியான பிரபுவிடம் சொல்ல, அவர் இதையெல்லாம் கண்டுக்கொள்ளாமல் இருக்கிறார். இதனால் ஆத்திரம் அடைந்த சிவா, பிரபுவிடம் முறையிட 'உன்னால முடிஞ்சா தொட்டு பார்த்தாலே ஷாக் அடிக்கிற மாதிரி ஒரு கேஸ் கொண்டு வா' என சிவா மீசையை பிரபு முறுக்கிவிடுகிறார்.

இதை தொடர்ந்து யதார்த்தமாக சிவகார்த்திகேயன் ஒரு சிறுவனின் விபத்தை கண்டு, அதை தொடர்ந்து அவனை காப்பாற்ற முயற்சி செய்யும்போது பல திடுக்கிடும் உண்மைகளை கண்டுபிடிக்கிறார். வெளி மாநிலங்களில் இருந்து பிழைப்புக்கு வரும் சிறுவர்களில் தாய், தந்தை இல்லாதவர்களை டார்க்கெட் செய்து, அவர்களை மூளைச்சாவு அடைய செய்து, உடல் உறுப்புகளை திருடுகிறது ஒரு பெரிய கும்பல்.



இந்த நெட்வொர்க்கை சிவா கண்டுபிடிக்க, இதில் பிரபு, தன்னுடன் வேலை பார்க்கும் போலிஸ் இன்ஸ்பெக்டர் என பலரை இழக்கிறார். இந்நிலையில் இந்த நெட்வொர்க்கின் அடுத்த குழந்தை கடத்தல் திட்டத்தை சிவா கண்டுபிடிக்கிறார். இதை அவர் தடுத்து நிறுத்தினாரா? அந்த வில்லனை எப்படி பழி வாங்குகிறார் என்பதே மீதிக்கதை.

அஜித், விஜய், ரஜினியின் வசனங்களை அடுத்த படத்தில் கொஞ்சம் குறைத்து கொள்ளலாம். ஸ்ரீதிவ்யா, பாட்டுக்கு மட்டும் வந்து சென்றாலும், ஒரு சில காட்சிகளில் ஹீரோவிற்கு உதவி செய்து போகிறார்.

இமான் அண்ணாச்சியின் காமெடி நன்றாகவே உள்ளது. என்ன தான் விறுவிறு என்று சென்றாலும், ஏதோ காரணத்தால் திரைக்கதை கொஞ்சம் தள்ளாடுகிறது.

ஆக சிவாவுக்காக ரசித்து பார்க்கலாம்.

---



## ஆச்சரியத்தில் விஷ்ணு

மருத்துவமனையில் ஒரு அறுவை சிகிச்சைக்காக நடிகர் விஷ்ணு அனுமதிக்கப்பட்டுள்ளார். இதை அறிந்த அஜித் அவரை சென்று பார்த்து நலம் விசாரித்துள்ளார். இதுகுறித்து விஷ்ணு கூறுகையில் 'அஜித் சார் என்னை பார்க்க வந்த போது நான் ஆச்சரியத்தில் ஆழ்ந்தேன், மிகவும் எளிமையான மனிதர் அவர்' என்று கூறியுள்ளார்.

## பறிப்பு

ஊட்டி லவ்டேல் சாலையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் நயன்தாரா மற்றும் நடிகர் ஜெயராம் வீடுகளும் அடங்கும், இவர்கள் சொத்துவரி செலுத்தாமையால் அவர்களின் வீடுகளை பறிமுதல் செய்யப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

"தமிழுக்கு எண் 1ஐ அழுத்தவும்" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......




## நானே கொல்வேன்

ஒரே ஒரு கொலை செய்ய கடவுள் எனக்கு அனுமதி கொடுத்தால், மருத்துவக் கல்லூரி மாணவி நிர்பயாவைக் கற்பழித்துக் கொன்று விட்டு, ஊடகமொன்றுக்கு பேட்டியளித்திருக்கும் அந்த குற்றவாளியை நானே கொல்வேன் என்று நடிகை தப்சி ஆவேசமாக பேட்டியளித்துள்ளார். குற்றம் செய்தவர்கள் திருந்த வேண்டும் என்றுதான் சிறைக்கு அனுப்பப்படுகின்றனர். ஆனால், முகேஷ் சிங் போன்றவர்கள் திருந்த மாட் டார்கள். இவர்கள் உயிரோடு இருக்கவே கூடாது" என்றார்.





## குமுறும் பப்பாளி

நடிகைகளின் நிர்வாணப் படங்கள், ஆபாச வீடியோக்களை மோசடியாக உருவாக்கி வெளியிடுவது கற்பழிப்பை விட மோசமானது என்று ஆவேசமாகக் கூறியுள்ளார் நடிகை ஹன்சிகா.

மேலும் அவர் கூறுகையில் நடிகைகள் என்றால் ஏன் இவ்வளவு கீழ்தரத்தில் வைக்கின்றீர்கள்? யாராவது ஹீரோக்களின் படங்களை நிர்வாணமாக போடுங்களேன். நடிகைகளின் இப்படியான படங்களை இணைய தளத்தில் வெளியிடுபவர்களை கடுமையான ரீதியில் தண்டிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

## ஷங்கரால் தான்

கடுமையான உடற்பயிற்சி, வலுக்கட்டாயமாக மேற்கொண்ட டயட், உட்கொண்ட சில மெடிசின்கள் காரணமாக சில பிரச்சனைகளால் அவதிப் படுவதோடு, தோற்ற பொலிவைக் கொண்டுவர மிகவும் சிரமப் படுகிறாராம். வெளிநாட்டிற்கு சென்று சிகிச்சை பெற்று வர தற்போது விக்ரம் தீர்மானித்து ள்ளாராம். இதற்குக் காரணம் ஷங்கர் தான் என்று பலர் கூறி வருகின்றனர்.

## அட்லியுடன் கூட்டு விஜய்

இளைய தளபதி விஜய் புலி படத்தை முடித்த கையோடு, அடுத்து அட்லீ இயக்கத்தில் நடிக்க விருக்கிறார். இப்படத்துக்கு 2, 3 டைட்டிலுடன் விஜய்யை சந்திக்க, அவருக்கு எதிலும் திருப்தி இல்லையாம், இதனால், அட்லீ மீண்டும் வேறு டைட்டிலுடன் விஜய்யை சந்திக்க முயற்சி செய்து வருகிறாராம்.

## நானே தான் பிஸ் ஆகிட்டே!!



சிம்புவை ஒரு ஹீரோவாக திரையில் பார்த்து சுமார் 2 1/2 ஆண்டுகள் ஆகிவிட்டது. இந்நிலையில் வாலு படம் வரும் 27ம் தேதி வெளிவரும் என கூறப்பட்டது. தற்போது வந்த தகவலின் படி இப்படத்தின் சென்ஸார் திங்கள் கிழமை (09.03.2015) அன்று நடைபெறும் என கூறப்பட்டுள்ளது.

## மீண்டும் அப்பாவானார் "தல"



நடிகர் அஜித்குமார், ஷாலினி தம்பதியினருக்கு இரண்டாவது வாரிசாக ஆண் குழந்தை பிறந்துள்ளது. கடந்த 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அஜித் - ஷாலினி ஜோடி, திருமண பந்தத்தில் இணைந்தது. இந்நிலையில், கடந்த 2008ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி, இவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது. இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை காலை 4.30 மணியளவில் அஜித் - ஷாலினி தம்பதியருக்கு அழகான ஆண் குழந்தை பிறந்துள்ளது. அமர்க்களம் திரைப்படத்தில் சேர்ந்து நடித்த இவர்கள் காதல் திருமணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் 43

# பாதகமான ஜாதகமும் சாதகமான காதலும்



சோதிடத்தை நம்பி மோசம் போன பலரது வாழ்க்கை அனுபவங்களை நாம் அறிந்து கொண்டிருக்கின்றோம். சொல்லப்போனால் நாமும் கூட எமது திறமையில் அதிகம் நம்பிக்கை வைக்காது சோதிடத்தில் நம்பிக்கை வைத்த சந்தர்ப்பங்கள் பல இருக்கத்தான் செய்கின்றன. அதனாலேயே சோதிடத்தை தொழிலாக கொண்ட பலர் தமது வாழ்க்கையை இலகுவாக ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒருவனின் ஜாதகம் சரியாக இருப்பதற்கு பிறந்த நேரம் சரியாக இருக்க வேண்டும். பிறந்த நேரம் என்பது வயிற்றிலிருந்து தலை வெளியில் வரும் நேரமா? உடல் பூமியில் படும் நேரமா? கரு உருவான நேரமா? அல்லது தொப்பிள் கொடி வெட்டப்படும் நேரமா? இவற்றில் எந்த நேரத்தை வைத்து கணித்தால் சோதிடம் சரியாக அமையும் என்பது தெரியாமல் நாம் பலன்களை கணிப்பதில் எந்த பிரயோசனமும் இல்லை.

சோதிடம் பற்றிய உண்மையை ஆராயாத எமது பெற்றோர் தமது பிள்ளைகள் பின் தங்கியமைக்கு காரணமாக அவர்களுக்கு அட்டமத்து சனி என்று சமாதானம் கூறுவதில் திருப்தி காண்பர். அதே போன்று தமது தொழில் வெற்றியளிக்காவிட்டால் தமது கிரக நிலை மேல் குற்றம் சுமத்துவார்கள். அவை யாவற்றுக்கும் மேலாக தமது பிள்ளைகளுக்கு உரிய வயதில் விவாகம் நடக்காவிட்டால் உதயத்தில் செவ்வாய், ஏழில் செவ்வாய், எட்டில் செவ்வாய் என்று கூறி மனம் வருந்துவர். முப்பது வயதிற்கு மேற்பட்ட பெண்களை ஊராரே முதிர் கன்னிகள் என்று பெயர் சூட்டி விடுவர்.

போதாததற்கு 'ஆண்மூலம் அரசாளும் பெண்மூலம் நிர்மூலம்' என கூறி மூல நட்சத்திரத்தில் பிறந்த பெண்களை விவாக வாழ்க்கையில் இருந்து ஒதுக்கி வைத்து விடுவர். இன்னும் பூராடம் நட்சத்திரத்தில் பிறந்த பெண்கள் பற்றி குறிப்பிடுகையில் 'பூராடம் ஊராடும்' என்று பழிகூறுவர்.

பெற்றோர்கள் தமது பெண்களுக்கு மணவாளனை தெரிவதில் படிப்பு, உத்தியோகம், குணம், கம்பீரமான தோற்றம், அவரது குடும்ப பின்னணி, பணவசதி அனைத்தையும் பார்ப்பர். இவை யாவற்றுக்கும் மேலாக இருவரது கிரக நிலையையும் ஆராய்ந்து உத்தம பொருத்தம் வேண்டும் என்று அடம் பிடிப்பர்.

அடுத்த வளமாக தமக்கு மருமகளாக வரும் பெண் எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும் என்று பட்டியல் வைத்திருப்பார்கள். பெண் படித்தவளாக இருக்க வேண்டும். அழகில் தேவதையாக, உத்தியோகம் பார்ப்பவளாக, நகரில் வசதியான வீடு வேண்டும். இறுதியில் குணமானவளாக இருக்க வேண்டும்.

இரு பகுதி பெற்றோரையும் சமாதானப்படுத்தி ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் விவாகம் செய்து வைக்க முடியுமா பாருங்கள். இனி கல்யாண தரகர்மாருடைய 'புரோக்கர்' கட்டணம், போக்குவரத்து செலவு என்று நிபந்தனைகள் உண்டு.

இந்த இடத்தில் சற்று யோசியுங்கள். தங்கள் பெற்றோர் பேச்சு வார்த்தை மூலம் தமக்கு விவாகம் செய்து வைப்பர் என்று நம்பி காவல் இருக்கும் பெண்பிள்ளைகளின் நிலைதான் என்ன? அவர்கள் முதிர் கன்னிகளாக தமது காலத்தை ஓட்ட வேண்டியது தானா?

இனி அடுத்த கட்டத்திற்கு நகர்வோம். இன்று பள்ளி பராயத்திலேயே ஆண்களும் பெண்களும் சேர்ந்து பழகும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளது. அவர்கள் ஒருவருடன் ஒருவர் இணைந்தும், தம்மை புரிந்து கொண்டும் பழகுகின்றார்கள். நட்பு என்ற எல்லைக்குள் அவர்களால் ஒருவருக்கொருவர் உதவி செய்யவும் அன்பு பாராட்டவும் முடிகின்றது. தத்தமக்கு இருக்கக் கூடிய விசேட குணாம்சங்கள் நன்கு ஒத்துப்போகையில் ஒருவருக்கு மற்றவர் மேல் நாட்டமேற்படுகின்றது.

தமது கல்வி பற்றியும் நட்பு பற்றியும் பெற்றோருக்கு கூறி ஆலோசனை கேட்கும் அளவுக்கு இன்று சமூக மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெற்றோரும் தமது பிள்ளை மீது பாசத்தை பொழியும் அதே சமயம் அவர்கள் தமது எதிர் பாலாருடன் எந்த அளவில் பழகலாம். எப்படியான சந்தர்ப்பங்களில் விலகி நடக்க வேண்டும் என்ற அறிவுரைகளை இதமாக எடுத்து இயம்புவர்.

இன்று பெற்றோர் தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி தக்க ரீதியாக சிந்திக்கின்றார்கள். பிள்ளைகள் நன்கு கல்விகற்று தொழில் ரீதியில் தம்மை ஸ்திரப் படுத்திக்கொள்ளும் வரைக்கும் நட்பு என்ற எல்லையை தாண்டி காதல் என்ற சிக்கலில் வீழ்ந்து விடாதபடி அவர்களை கண்காணிக்கின்றார்கள். கண்டதும் காதல் என்றில்லாமல் பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையை நன்கு அமைத்துக்கொண்டு தமது கால்களில் நிற்கும் நிலைக்கு வரும்போது தமது பிள்ளைகளின் விவாக வாழ்க்கை பற்றி சிந்திக்கின்றார்கள்.

தமது பிள்ளை தமது வாழ்க்கை துணையாக ஒருவனை தெரிவு செய்யும் அளவுக்கு வளர்ச்சி பெற்றதும் தாமும் தமது பிள்ளையுடன் இணைந்து அவளது சிபார்சினை ஆராய்கின்றார்கள். அவளது முடிவு சரியாக நியாயப்படுத்தப்படும் கட்டத்தில பெற்றோர் பச்சைக்கொடி காட்டுகின்றார்கள். பிள்ளைகள் இருவரும் இணைந்து இருதரப்பு பெற்றோரினதும் சம்மதத்தை தாமே முன்னின்று பெறுகின்றார்கள். அங்கு அவர்களிடையே நிற பேதம் இல்லை. குல பேதம் இல்லை. பேச்சுவார்த்தை விவாகத்தில் இருக்க கூடிய எந்த ஒரு தடையும் காணப்படுவதில்லை.

சோடியாக இணையும் அந்த பிள்ளைகளும் மனதால் நன்கு இணைந்து தமது வாழ்வை திட்டமிட்டு நடத்த கூடியளவுக்கு முன்னேறி விடுவார்கள்.

பாதகமான ஜாதகமும், சாதகமான காதலும் எப்படி இருக்கின்றதென்பதை நீங்கள் இப்போ புரிந்திருப்பீர்கள்.

எனது நண்பனொருவன் பல வருடங்களாக மனைவி, இரு பிள்ளைகளுடன் சுவிஸ்சில் வாழ்ந்து வருகின்றான். எந்த எதிர்பார்ப்புமில்லாமல் இருபது வருடங்களுக்கு மேலாக அடிக்கடி பண உதவிகள் செய்து கை கொடுத்து வந்தான். 'உனக்கு தேவையான உதவியை கேள்' என நான் அடிக்கடி கூறிவந்தாலும் 'தேவைப்படும் போது கேட்பேன் தானே மச்சான்' என கூறி மறுத்து விடுவான். அண்மையில் அவன் குடும்பத்துடன் இலங்கை வந்த போது நான் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு 'வான்' கொண்டு சென்று அழைத்து வந்தேன்.

இப்போ அவனது வடிவான தோற்றம் கொண்ட மகள் விவாக வயதை எய்திவிட்டாள். யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அவனது மூத்த சகோதரனின் வயதில் மூத்த மகளுக்கு விவாகம் முடிந்தால்தான் நண்பனின் மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கலாம். நண்பன் என்னிடம் கேட்ட ஒரே உதவி அப்பெண்ணிற்கு விவாகம் செய்துவை என்பதாக இருந்தது. அப் பெண்ணிற்கு படிப்பு இருந்தது. தொழில் இருந்தது. வீடு வாசல் நகை பணம் அனைத்தும் இருந்தது. அவற்றிற்கு மேலாக கம்பீரமான தோற்றமும், குணமும் இருந்தது. வயது 28 ஐ அண்மித்துவிட்டாள். பொது நிறம். நானும் போட்டோ ஜாதகம் இரண்டையும் பல தரகர்மாரிடம் கொடுத்து இப்போ ஒரு வருடம் ஆகின்றது. ஒன்றில் பொருத்தமில்லை என்று கூறுகிறார்கள். அல்லது பெண், தேவதை போல் இல்லை என்று கூறுகிறார்கள்.

பெற்றோரே! எமது பிள்ளைகள் எதனை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று இப்போதாவது நீங்கள் முடிவு எடுங்கள்!

(வி.என்.சந்திரகாந்தி)



# கடலில் காவியமான அப்பாவுக்கு ஓர் கப்பல்

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**

கடந்த இருவாரங்களாக மட்டக்களப்பைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ளசில முன்னாள் போராளிகளைச் சந்தித்து அவர்களின் இன்றைய வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்க்கும் வகையில், வெளிநாட்டில் உள்ள சில நண்பர்களின் மூலம் அவர்களுக்கு சிறு கைத்தொழில் முயற்சி ஒன்றினை அமைத்துக் கொடுத்து அவர்கள் முகம் கொடுக்கும் ஒருசில பிரச்சனைகளையாவது தீர்க்க முயன்று வருகிறேன்.

எனது நண்பர்கள் சிலரின் பேருதவியினால் சில குடும்பங்களுக்கு உதவ முடிந்திருக்கிறது. அவர்களை அழைத்துக் கொண்டு ஒரு சுற்றுலா சென்றிருந்தோம் அன்று. மறக்க முடியாத அந்தச் சுற்றுலா பற்றிய பதிவே இது.

மாமா என்னும் பெயரின் பின்னாலிருக்கும் மகத்துவத்தை அன்றையநாள் உணர்ந்து கொண்டேன். 11 குழந்தைகளுடனும் அவர்களின் பெற்றோருடனும் அச்சுற்றுலா சென்றிருந்தோம்.

கதைகள் கனபேசி பின் கையில் தூங்கிப் போன சிறுமி, எனக்கருகிலேயே உட்கார்ந்திருந்த சிறுவன், வாழ்க்கையில் முதன் முதலாக புகையிரதப்பாதையையும், புகையிரதத்தையும் கண்ட அவனின் ஆச்சர்யம் கலந்த உணர்ச்சிகள், கோயிலுக்குச் செல்லும் வீதியில் அமைந்திருந்த சிறு சிறு கடைகளை கடந்த போது அவர்களின் ஏக்கமான பார்வைகள், குழந்தைகளின் 10 ரூபா பெறுமதியான விளையாட்டுப் பொருளையே வாங்கிக் கொடுக்க முடியாது தவித்த பெற்றோர், ஆளுக்கு இரண்டு விளையாட்டுப்பொருட்களை வாங்கிக் கொள்ளுங்கள் என்றதும், மாமா எனக்கு அது .. இல்லை இல்லை இது என்று தெரிவு செய்ய தடுமாறிய அவர்களின் குதூகலம் கலந்த மனநிலை, மாமா இன்னும் ஒன்று வாங்கித்தாங்களேன் என்ற போது இல்லை என்று சொல்ல முடியாது தடுமாறிய நான், என்னைத் தடுத்தகுழந்தைகளின் பெற்றோர்,

"எத்தனை கண்ணாடி இருக்கி ஒண்ணையும் வாங்கித்தாறாவு இல்லை அம்மா" என்று மட்டக்களப்புத் தமிழில் தன் தாயைப்பற்றி குறைகூறிய குழந்தை,

கோயிலில் அவர்களது பக்தி, அப்பா ஆமிக்காரனிடம் இருந்து வரணும் என்று கல்லுக் கடவுளிடம் வரம் கேட்ட குழந்தை, அதைக் கண்டு அழுத தாய், அரைமணிநேரத்தில் உணவு தருகிறேன் என்று கூறி ஒன்றரை மணித்தியாங்களின் பின் உணவு தந்த ஹோட்டல் முதலாளி, அதுவரை கொளுத்தும் வெய்யிலில் பொறுமை காத்த குழந்தைகள்,

கடற்கரையில் இறங்கியதும் அவர்களின் கூச்சமும் அவர்களின் ஓட்டமும், குழந்தைகளை கட்டுப்படுத்த முடியாத தாய்மார்.

2009ம் ஆண்டு கடலில் காவியமான அப்பாவுக்காய் வீட்டில் இருந்தே இரண்டு கப்பல்கள் செய்து வந்து கடலில் விட்ட மூன்று வயதுச் சிறுவன், அலைக்குப் பயந்து என் கழுத்தை கட்டிக்கொண்ட சிறுமி. என்னுடன் மண்வீடு கட்டியபடியே கடலுடன் நட்பாகிப் போன அக் குழந்தை, பின்பு என்னுடன் கழுத்தளவு நீரில் நின்றபடியே "அம்மா இங்க பாரு.. இங்க பாரு" என்று கத்திய அவளின் குதூகலம். கடலைவிட்டு வெளியேற விரும்பாத



சிறுவர்கள்,

மதிய உணவினை சிந்தாது சிதறாது அமர்ந்திருந்து உண்ட அவர்களின் பக்குவம், ஐஸ்கிறீம் கடையில் எதை வாங்குவது என்று தடுமாறிய அவர்களின் மனது, தடுமாறிய குழந்தைகளுக்கு விலையான ஐஸ்கிறீம்களை காட்டிய கடைக்காரர், இரகசியமாய் இரண்டாம் ஐஸ்கிறீம் கேட்ட குழந்தைகள்.

ஊரில் சின்ன வெங்காயம் ஒரு கிலோ 80 ரூபாய், கடற்கரையில் 2 கிலோ நூறு ரூபாய் என்றதும் வாங்கிக்கொண்ட பெற்றோர்.

மாலை வீடு திரும்பிய போது கடற்குளிப்பின் அசதியல் தூங்கி வளிந்த குழந்தைகள், பெரியோரின் நகைச்சுவைப் பேச்சு, மன அழுத்தங்களை மறந்து ஒரு நாளை களித்த அவர்களின் மகிழ்ச்சி,

விடைபெறும்போது "அண்ணா நன்றி" என்று வாய்க்கு வாய் கூறிய பெற்றோர். கண்கலங்கி நின்ற பெற்றோர். மாமா "பெயித்து வாறன்" என்று மண்ணின் மொழியில் விடைபெற்ற குழந்தைகள் என்று அன்றைய நாள் எத்தனையோ வருடங்களின் பின் மிகுந்த மகிழ்ச்சியைத் தந்திருந்தது.

மனதின் குறிப்புகள் சில:

தன்னை அறிந்தவர்கள் யாரும் இந்தச் சுற்றுலாவில் இருந்தால் அதனால் தனக்கும் தன் குழந்தைக்கும் மேலும் சிக்கல்கள் வரலாம் என்று எனது அழைப்பை அன்பாய் மறுத்த ஒரு பெண்.

பெற்றோர்கள், சகோதரர்கள், தங்கையின் கணவன் என்று தனது குடும்பத்தில் இருந்து ஐவரை இழந்த பெண் கடலில் இறங்க காட்டிய பயம். தன் குழந்தையின் கையை இறுகப்பற்றியபடியே காலாளவு நீரில் தன் தங்கையின் கையை பற்றியவாறு குழந்தையை குளிக்க அனுமதித்தார் அவர்.

இடுப்புக்குக் கீழ் இயங்கமுடியாத கணவரை குழந்தைபோல் பராமரித்த அவரது மனைவி, அவர் தனது கணவரை இயற்கை உபாதைகளை கழிக்க அழைத்துச் சென்ற போது தனது குழந்தைகளை பார்த்துக்கொள் என்று 9 வயதுச்சிறுமியிடம் கூறிய போது அவள் காட்டி பெறுப்புணர்ச்சி. மூன்று குழந்தைகளையும் மாறி மாறி கடலில் குளிப்பாட்டிய அந்த 9 வயதுத் தாய். ஓய்வே இல்லாது குடும்பத்துக்காய் உழைக்கும் அவளது மனம்.

பயணம் முழுவதையும் ஒழுங்குபண்ணித் தந்து சாரதியாய், எதையும் முகம் சுளிக்காது சிரித்த முகத்துடன் செய்து தந்த மனிதரும் அவரது ஆளுமையும்.

இப்படி பல பலஅனுபவங்களுடன் கடந்து போன அந்நாளும் மிக மிக இனியது.

**கற்பனை கலக்காத உண்மை சம்பவங்கள்!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுநடப்பு

# கிடைத்த அருமையான பொக்கிஷம்

கோவிந்தசாமி பேடியார் தனது தகப்பனாருக்கு உதவியாக இருந்து சிறு வயது தொடக்கம் வயலுக்குள்ளே காலத்தை கழித்ததினால் அவருக்கு பாடசாலைக்குள் நுழைய முடியவில்லை. பேடியார் மாத்திரமல்ல எம் பலரின் வாழ்க்கை சுயசரிதை கூட பாடசாலை செல்லாதிருந்ததற்கு பல ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணமுண்டு.

ஆனாலும் அவர்கள் திறமையற்றவர்களாக இருக்கவில்லை. தங்களின் நாளாந்த கடமைகளை கல்வி அறிவு இல்லாமலே மிகக் கச்சிதமாகவும் நேர்த்தியாகவும் மேற்கொண்டு உள்ளார்கள். பேடியார் வயலுக்குள் நின்றதால் கல்வியை மாத்திரமல்ல நேர காலத்திற்கு திருமணம் செய்யும் வாய்ப்பையும் இழந்திருந்தார்.

என்னவாக இருந்தாலும் ஊரார் அவரை அமைதியாக இருக்க இடம் தரவில்லை. எப்படியும் அவரின் மனதை மாற்றி திருமணத்திற்கு ஒப்புக் கொள்ளச் செய்தனர். உரிய வயதில் அவருக்கு திருமணம் நடக்காவிட்டாலும் நாற்பது வயதில் இந்திய வம்சாவழியைச் சார்ந்த இந்திரா எனும் பெண்ணை திருமணம் செய்து கொண்டார். மேலும் கோவிந்தசாமி பேடியாருக்கு தற்பொழுது உதவிக்கு ஒருவர் தேவை. அவரின் பெற்றோரும் அடுத்தடுத்து காலமாதலால். அவர் தனித்து விட்டார். குடும்பத்தில் பெற்றோருக்கு அவர் ஒரே ஒரு வாரிசு அவர்களால் ஊரில் சேர்த்து வைக்கப்பட்ட சொத்துகளுக்கோ அளவே இல்லை. அவைகளைப் பேணிப் பாதுகாப்பதென்பது சுலபமான காரியமுமல்ல.

இருப்பினும் பேடியார் எதிர்பார்த்த மாதிரி அவருக்கு ஒரு வாழ்க்கைத்துணை கிடைத்திருந்ததை இட்டு அவர் சந்தோசமடைந்தார். தனக்கு மனைவியாக வர இருப்பவர் அழகாக இருக்கத் தேவையில்லை. தனக்கு விசுவாசமாகவும், தனது நிலபுலன்களை கவனிக்கக் கூடியவராகவும் இருந்தால் அதுவே போதும் என்பதே அவரின் முக்கியமான எதிர்பார்ப்பு. அவ்வாறே அவரின் மனைவி இந்திரா அவருக்கேற்ப நடந்து வந்தார். அவர் ஒரு கடும் உழைப்பாளியாக காணப்பட்டார். பேடியாரின் நடவடிக்கைகளுக்கு மிகவும் உறுதுணையாக இருந்து அவரின் மனம் கோணாமல் இருக்க பார்த்துக்கொண்டார்.

பேடியரிடம் கல்வியறிவு இல்லாவிட்டாலும் போதிய தொழில் அனுபவம் அவரிடம் காணப்பட்டது. கொடுக்கல் வாங்கல், வரவு செலவு, நிர்வாகம் என்பது அவருக்கு அத்துப்படி. எவரும் அவரை இலகுவாக ஏமாற்றமுடியாது. சகல தொழிநுட்பங்களையும் அவரது தகப்பனார் அவருக்கு கற்றுக் கொடுத்திருந்தார். அவரின் மனைவி இந்திரா கூட அவரைப் போன்று நல்ல அநுபவசாலியாக இருந்தாள். வீட்டில் இருந்தவாறே பேடியாரின் விவசாய நடடிக்கைகளை கவனித்து வந்தார். திருமணத்தை அடுத்து தனக்கொரு வாரிசு பிறக்கும் என்ற நம்பிக்கையில் பேடியார் சந்தோசமாக இருந்தாலும், இறைவன் ஏனோ அவருக்கு அந்த ஆசையை நிறைவேற்றி வைக்க விரும்பவில்லை. அது தொடர்பில் பல முயற்சிகளை மருத்துவ ரீதியில் எடுத்திருந்தாலும், அவை அவருக்கு பயனளிக்கவில்லை. ஆனாலும் மாற்று வழிக்கா இடமில்லை?

மேலும் அவர் மனமுடைந்து இருந்தாலும் ஒரு குழந்தையை தந்தெடுத்து வளர்க்க வேண்டுமென முடிவு செய்திருந்தார். அந்த முடிவு அவருக்கு வெற்றியை அளித்தது. சிறுவர் காப்பகம் ஒன்றிலிருந்து ஐந்து வயது நிரம்பிய சிறுவனொருவனை தத்தெடுத்திருந்தார். அவனது பெயர் ஆகாஷ். அவன் அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தான். திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற இயற்கை கந்தளாய்க் குள அணைக்கட்டு உடைப்பு அன்று பாரிய சேதத்தை விளைவித்திருந்தது. அந்த பாரிய அனர்த்தத்தினால் பலர் மரணத்தை தழுவ வேண்டிய நிலை இருந்தது. பலர் தத்தமது வீடு வாசல்கள், வயல் காணிகள், உடைமைகள் அனைத்தையும் இழந்தனர். அம்மாவட்டத்தில் விவசாயத்திற்கு பிரபலமான கந்தளாய் பிரதேசத்தை இயற்கை அன்னை காப்பாற்ற தவறிவிட்டாள் என தாங்கமுடியாத மனக்கவலையினால் மக்கள் இயற்கை அன்னையை திட்டித் தீர்த்தனர்.

ஆகாஷ் சிறுவர் காப்பகத்தில் தஞ்சம்புக அந்த கொடூர இயற்கை அனர்த்தமே காரணமாயிருந்தது. கந்தளாய் கோயில் கிராமத்தை சார்ந்த அவனது முழுக்குடும்பமும் அன்றைய அனர்த்தத்தினால் முற்றாக அழிக்கப்பட்டது.

அதிலிருந்து தப்பியவனே ஆகாஷ். இன்று அவன் இலட்சக்கணக்கான சொத்துக்களுக்கு வாரிசாகி விட்டான். பேடியார் மாத்திரமல்ல இந்திராவும் ஆகாஷின் மேல் அன்பு காட்டினார். பேடியாரின் சொத்து ஆகாஷினால் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கை ஊரார் மனதில் இருந்து வந்தது. அங்குள்ள மக்கள் பேடியாரை ஒரு தெய்வமாக மதித்து வந்தனர். பேடியாரும் அங்குள்ள பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கி அவ்வப்போது அவர்களுக்கு தேவைப்படும் உதவிகளுக்கு ஒத்தாசையாக இருந்து வந்தார்.

எப்படியும் ஆகாஷை நன்கு படிக்க வைக்க வேண்டுமென்பதே அந்த தம்பதிகளின் ஏகோபித்த கருத்தாக இருந்தது. ஆகாஷ் வளரவளர அவர்களின் மனதில் வளர்ந்து வரும் சந்தோசத்திற்கு அளவேயில்லை. ஆகாஷ் ஓர் அனாதை என்பதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவ்வளவுக்கு பேடியார் அவனுக்கு செல்லம் கொடுத்து வளர்த்துவந்தார், ஏன் மனைவியும் கூடத்தான்.

அவன் தனக்கு குழந்தையில்லாத குறையை தீர்த்து வைத்தவன் என்பதால் மிகவும் செல்லமாக வளர்த்தாள் பேடியாரின் மனைவி. ஆகாஷ் மாவட்ட, மாகாண மட்ட ரீதியிலான பல விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசில்களை பெற்றிருந்தான். பேடியார் அவனுக்கு பல்கலைக்கழக உயர்கல்வியை பெற்றுக் கொடுக்க விருப்பமாயிருந்தாலும், விளையாட்டுத் துறையில் அவன் காட்டிய ஆர்வம் அவனை வேறு திசையில் திசை திருப்பியது.

ஆம்.. அவன் தற்பொழுது பாடசாலை கல்வியை முடித்துக் கொண்டு இலங்கை விமானப்படை கொழும்பு அக்கடமியில் சேர்ந்து கொண்டான். பேடியாரும் அனது விருப்பத்திற்று எதிராக செயற்பட விரும்பவில்லை. மேலும் அவனுக்கு சரியானதை தெரிந்தெடுக்கும் பக்குவம் இவ்வயதில் வந்திருக்குமல்லவா! ஆகாஷ் பிறப்பில் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தாலும் அவன் வளர்ப்புக்காக வந்து சேர்ந்த இடம் சொத்துக்கள் குவிந்து கிடக்கும் இடமல்லவா? அது ஆகாஷிற்காக உருவாக்கப்பட்ட இடமென்றால் அது மிகையல்ல. கொழும்பு விமானப்படை அக்கடமியில் கூட ஆகாஷ் ஏனையோரைவிட மிகச் சிறப்பாக செயற்பட்டான். மேலதிகாரிகளின் பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டான்.

அந்த பாரிய குள அணைக்கட்டு உடைப்பு அனர்த்தத்தின் போது அவனொரு சிறு குழந்தையாக இருந்ததால் அவனது பெற்றோர் பற்றி அவனுக்கு ஒன்றுமே தெரியாது. அன்று ஊர் மக்களால் காப்பாற்றப்பட்ட அவன் சேர்க்கப்பட்ட சிறுவர் காப்பகமே அவனுக்கு ஆகாஷ் என பெயர் சூட்டியது. பேடியாரும் அந்தப் பெயரையே பாவித்தார்.

பேடியாரின் பெயர் அவனுக்கு தலைப்பெயராக மாறி கோவிந்தசாமி ஆகாஷ் என பிறப்புச் சான்றிதழில் பதியப்பட்டது. விமானப்படை அக்கடமி நண்பர்கள் அவனை செல்லமாக ஆகா என அழைப்பார்கள். அங்கு அவன் ஒரு தமிழனாக கருதப்படவில்லை. சகலரும் அவனுடன் அன்பாக எவ்வித பேதமும் இன்றி பழகி வந்தனர். விமானம் பறக்கும் பிரிவில் இணைக்கப்பட்ட அவன் பல சாகசங்களைப் புரிந்து வந்தான்.

மாதம் இரு தடவை தனது வளர்ப்புப் பெற்றோரைப் பார்ப்பதற்கு செல்ல அவன் என்றுமே மறுத்ததில்லை. அங்கு விவசாய நடவடிக்கை களுக்கு பலர் உதவியாக இருந்ததால் அவை பற்றி யோசிப்பதற்கு சின்ன பேடியரான ஆகாஷிற்கு அவசியமிருக்கவில்லை. இருப்பினும் தனது வளர்ப்புப் பெற்றோரின் உடல்நலன் விடயத்தில் மிகவும் கவனமாக இருந்தான். ஆகாஷிற்கு ஊரில் நல்ல மதிப்பும் மரியாதையும் இருப்பதை அவதானித்த பேடியாரும் மனைவியும் மிகவும் சந்தோசப்பட்டனர். தங்களுக்கு உண்மையாக பிறந்த பிள்ளை தங்களை இவ்விதம் கவனிக்குமா என இருவரும் மனதுக்குள் எண்ணி பூரிப்படைந்தனர்.

இன்று ஆகாஷ் விமானப்படையில் ஒரு முக்கிய பிரிவொன்றின் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரியாக நியமனம் பெற்றான். நினைத்துப் பார்க்க முடியாத அளவு வளர்ச்சி கண்டு பேடியாரும் மனைவியும் வியந்து போனார்கள். ஏன் முழு ஊரும் தான்.

அது மாத்திரமல்ல பல பேச்சுக்கள் ஊரில் ஏட்டிக்குப் போட்டியாக அடிபடத் தொடங்கின. அதாவது அவனது கல்யாணப் பேச்சு. ஆனால் பேடியார் அது தொடர்பில் அலட்டிக் கொள்ள வில்லை. மேலும் பேடியாருக்கும் வளர்ப்புத் தாயாருக்கும் அவன் அவ்விடயத்திலும் தொந்தரவு வைக்கவில்லை. ஒரு நாள் ஓர் அழகு தேவதையை கூட்டி வந்து காட்டினான். அவள் கூட விமானப் படையின் முக்கிய பெண்அதிகாரி. இதைவிட பேடியார் குடும்பத்திற்கு என்ன வேண்டும்? ஆனால் பேடியாரின் மனைவிக்கு ஓர் சிறிய மனக்கசப்பு. அதாவது தனது சகோதரியின் மகளை ஆகாஷிற்கு திருமணம் செய்து வைப்பது தான் அந்த கசப்பு. இன்று தன் மகனின் ஆசைக்கு குறுக்கே நிற்காமல் தனதாசையை அடியோடு மறந்து போனாள் அந்த வளர்ப்புத் தாய்.



**- பாலையூற்றான் -**

---

# இப்படியும் நடக்கலாம்

## வேலியே பயிரை மேய்ந்தது

ஜேர்மனி நாட்டின் முன்னால் நீதித்துறை அமைச்சர் ஒருவர் குடிபோதையில் கார் ஓட்டிய குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளார். ஜேர்மனியின் சட்டப்படி, 0.5 அளவிற்குமேல் மதுஅருந்தி விட்டு வாகனத்தை ஓட்டினால் அபராதம் அல்லது சிறை தண்டனை கிடைக்கும். தான் குடித்த மதுவின் அளவு காரை ஓட்டிச்செல்லும் அளவிற்கு மிதமாக இருந்திருக்கும் என தவறாக கணித்துவிட்டதாக கூறியதுடன், தான் செய்த தவறுக்கு மன்னிப்பும் கோரியுள்ளார்.

## முதல் மனிதனின் எச்சங்கள்

உலகின் முதல் மனிதர்களில் ஒருவனது உடல் பாகம் எத்தியோப்பியாவில் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு 'ஹோமோ சாபியன்ஸ்' என்ற இனத்தை சேர்ந்த மனித உடல் பாகங்கள் சமீபகாலமாக அதிகமாக கண்டெடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக Ledi-Geraru என்ற பகுதியில் சுமார் 48 லட்சம் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஒரு மனிதனின் 'தாடை எலும்பை' (Jawbone) எத்தியோப்பிய மாணவன் கண்டு பிடித்துள்ளார்.



## 7 குழந்தை ஆபாச குற்றம் - கல்வி அமைச்சர்

ஒன்றாறியோ மற்றும் மனிரோபா ஆகிய மாகாணங்களில் ஒரு காலத்தில் துணை கல்வி அமைச்சர் பதவி வகித்த பென்ஜமின் லெவின், குழந்தைகள் ஆபாசம் சம்பந்தமான மூன்று குற்றச்சாட்டுக்களை செவ்வாய்கிழமை ஏற்றுக்கொண்டார். இவர் 1999 மற்றும் 2002 பகுதிகளில் மனிரோபாவில் மேம்பட்ட கல்வி துணை அமைச்சர் மற்றும் துணை கல்வி அமைச்சர் பதவிகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 63 வயதுடைய இவர் கைது செய்யப்பட்ட போது ஏழு குழந்தை ஆபாச குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன என்று தெரியவந்துள்ளது.

- அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இடம்பெற்ற வாய்தர்க்கம் ஒன்றின்போது, வீடற்ற நபரொருவரை அமெரிக்க பொலிஸார் சுட்டுக் கொலை செய்த சம்பவம் தொடர்பிலான வீடியோ ஆதாரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- பாலியல் துஷ்பிரயோத்தின் போது அமைதியாக இருந்திருந்தால் தாக்கியிருக்கமாட்டோம் என்று டில்லி மாணவி நிர்பயாவை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றவாளிகளில் ஒருவரான முகேஷ் சிங் கூறியுள்ளமைக்கு மாணவியின் பெற்றோர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.
- கடந்தாண்டு அக்டோபர் மாதம் முதல் பிரான்ஸின் சாம்பக்னி (Champagne) நகரத்தில் உள்ள Lavau என்ற பகுதியில் பிரான்ஸ் தேசிய தொல்லியல் துறை ஆராய்ச்சியாளர்கள் குழு ஆய்வில் ஈடுபட்டு வந்தது. இதன்போது கி.மு 5ம் நூற்றாண்டை சேர்ந்த கல்லறை ஒன்றை கண்டு பிடித்து பிரான்ஸ் தொல்லியல் ஆராய்ச்சி யாளர்கள் சாதனை செய்துள்ளனர்.
- பிரித்தானியாவில் ஊழல் பணத்தை வைத்து வெளிநாட்டவர் சொத்துக்களை வாங்கி குவிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. பணமோசடியில் ஈடுபட்ட பல நிறுவனங்கள் பிரித்தானியாவில் கடந்த 2004ம் ஆண்டு முதல் சுமார் 307 மில்.டொலர்கள் மதிப்பிலான சொத்துக்களை வாங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசியல் அலசல்**

# தமிழ் மக்கள் இனியும் எவ்வளவு காலத்திற்கு காத்திருக்க வேண்டும்??

கொழும்பிலுள்ள ஒரு மனித உரிமைச் செயற்பட்டாளரின் தகவல் இது. ஆட்சி மாற்றத்திற்கு முன்பு கொழும்பிலுள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்களோடு சக்திமிக்க மேற்கு நாடுகளின் உயர் அதிகாரிகள் நெருங்கி செயற்பட்டிருக்கிறார்கள். மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் பல சந்திப்புக்களை மேற்கொண்டிருக்கிறார்கள். மேற்படி மனித



உரிமைச் செயற்பாட்டாளர்களின் உதவியோடு உள்நாட்டில் இருக்கக் கூடிய சாட்சியங்களைச் சேகரித்திருக்கிறார்கள். இவ்வாறு சேகரிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படக் கூடிய ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் அறிக்கையானது இலங்கை அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. பொது எதிரணியின் பிரதானிகளில் சிலர் மீதும் குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் இவ்வாறு போர்க்குற்றச் சான்றா தாரங்களையும், சாட்சியங்களையும் தொகுத்துக்கொடுத்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் சிலர் அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்த மூத்த அமெரிக்க அதிகாரி ஒருவரைச் சந்திப்பதற்கு முயன்றபோது கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அதற்குரிய ஒழுங்குகளைச் செய்வதற்கு பின்னடித்ததாகக் கூறப்படுகின்றது. குறிப்பிட்ட அந்த மூத்த அதிகாரிக்குப் பதிலாக கீழ்நிலை அதிகாரிகளை வேண்டுமென்றால் சந்திக்கலாம் என்று கூறப்பட்டதாகவும் ஒரு தகவல் உண்டு. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவர் பின்வரும் தொனிப்படக் கருத்துத் தெரிவித்திருந்தார்.....

"ஆட்சி மாற்றத்திற்கு முன்பு எங்களை மாதக் கணக்கில் சந்தித்த மூத்த அதிகாரிகள் இப்பொழுது நிமிடக் கணக்கில் சந்திப்பதற்கு முன்அனுமதி தர மறுக்கிறார்கள். எங்களுடைய உதவியோடு தொகுக்கப்பட்ட அறிக்கையை அவர்கள் ஒத்தி வைக்கப்போவதாக அல்லது அதன் கடுமையைத் தணிக்கப் போவதாகத் தெரிகிறது. இது விடயத்தில் மிகுந்த ஆபத்துக்கும் மிகுந்த இடர்களுக்கும் மத்தியில் துணிந்து முன்வந்து எங்களோடு செயற்பட்ட உள்ளூர் முகவர்களின் முகத்தில் நாங்கள் இனி எப்படி முழிப்பது?" என்று.

ஆனால் அதே சமயம் அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி செயலாளர் நிஷா பிஸ்வால் சில சிவில் சமூகப் பிரமுகர்களைச் சந்தித்தபோது (முக்கியமான மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை அல்ல) "எமது பணியிலக்கு இன்னமும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை" என்று தொனிப்படக் கருத்துத் தெரிவித்துள்ளார். அவர்கள் பணி இலக்கு என்று கருதியது எதனை? இப்பொழுது நிகழ்ந்துகொண்டிருக்கும் மாற்றங்களை திரும்பிச்செல்லவியலாத ஒரு புள்ளி வரை கொண்டு சென்று ஸ்திரப்படுத்துவதுதான். அதாவது மாற்றத்தை பாதுகாத்து ஆகக்கூடிய பட்சம் அதை ஸ்திரமானதாக மாற்றுவது.

மாற்றத்தை எப்படிப் பாதுகாப்பது? அவர்கள் பின்வரும் வழிகளில் சிந்திக்கலாம்.

01. மாற்றத்திற்கு எதிரான சிங்களத் தரப்புக்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது.

02. மாற்றத்திற்கு எதிரான தமிழ்த் தரப்புக்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது.

03. மாற்றத்தைப் பலப்படுத்தத் தேவையான அரசியல், சமூக, பொருளாதார உளவியல் சூழலை மேலும் விருத்தி செய்வது.

இவற்றைச் சிறிது விரிவாகப் பார்க்கலாம்.

மாற்றத்தை எதிர்க்கும் சிங்கள தரப்பு எனப்படுவது ராஜபக்சக்களின் தரப்புத்தான். அத்தரப்பை சக்திமிக்க நாடுகள் ஏற்கனவே கையாளத் தொடங்கிவிட்டன. போர்க்குற்றச்சாட்டுக்களை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி அவர்களைக் கையாள முயற்சிக்கலாம். ராஜபக்ச சகோதரர்களில் இருவர் அமெரிக்க குடியுரிமைகளைப் பெற்றிருப்பது இது விடயத்தில் மேற்கு நாடுகளுக்கு ஒரு பிடியாகும். கடந்த மூன்று ஆண்டுகளாக ஒவ்வொரு ஜெனீவாத் தீர்மானத்தின் போதும் தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் வெளியாருக்கு எதிரான பயப்பிராந்தியானது அதிகரித்து வந்துள்ளது. அதே காலப்பகுதிகளில் தமிழகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் ஏற்படும் எழுச்சிகள் மேற்படி பயப்பிராந்தியை மேலும் அதிகரிப்பவைகளாகவே காணப்பட்டன. சிங்கள மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய மேற்படி பயப்பிராந்தியை வெற்றிகரமாகக் கையாண்டதன் மூலமே ராஜபக்ச தன்னை நிலை நிறுத்தி வந்தார். எனவே ராஜபக்சக்களை வெற்றிகரமாகக் கையாள்வது என்பது சிங்கள மக்கள் மத்தியில் பயப்பிராந்தியை அதிகப்படுத்தும் வெளிக்காரணிகளையும் உட்காரணிகளையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதுதான். இத்தகையதொரு நோக்கு நிலையில் இருந்தே இனிவரக்கூடிய ஐ.நா தீர்மானங்களைக் குறித்தும், மனித உரிமை ஆணையகத்தின் செயற்பாடுகள் குறித்தும் முடிவுகள் எடுக்கப்படும்.

இரண்டாவதாக, மாற்றத்தை எதிர்க்கும் தமிழ்த்தரப்புக்களை கையாளீவது. உள்நாட்டில் மாற்றத்தை எதிர்க்கும் தமிழ்தரப்புக்கள் ஒரு பலமான திரளாகக் காணப்படவில்லை. மாற்றத்தை ஆதரித்த கூட்டமைப்பே மக்கள் ஆணையைப் பெற்ற கட்சியாகக் காணப்படுகின்றது. எனவே, தமிழர்கள் தரப்பில் மாற்றத்தை எதிர்க்கக் கூடிய சக்திகள் ஒப்பீட்டளவில் சிங்களத் தரப்பைவிடவும் பலவீனமாகவே காணப்படுகின்றன. இதுவும் மேற்கு நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் அனுகூலமான ஓர் அம்சம்.

ஒப்பீட்டளவில் அதிகரித்த எதிர்ப்பு புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலேயே. எழக் கூடும். அது கூட போரின் இறுதிக்கட்டத்தில் புலம்பெயர்ந்த நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அளவிற்கு உயர்வானதாக இருக்கப்போவதில்லை. அப்படிப்பட்ட உணர்ச்சிக்கொதிப்பான மிகக் கொந்தளிப்பான ஆர்ப்பாட்டங்களையே மேற்குநாடுகள் அதிகம் பொருட்படுத்தவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். மேலும் ராஜபக்ச அரசாங்கத்திற்கு எதிராக ஓர் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் உத்தியாக புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தையும் அதன் எழுச்சிகளையும் மேற்கு நாடுகள் அளவுக்கு மிஞ்சிப் பெருப்பித்துக்காட்டின என்று ஓர் அவதானிப்பும் உண்டு. இத்தகையதோர் பின்னணியில் மாற்றத்தையும் பாதுகாத்து தமிழர்களுடைய அபிலாசைகளையும் எப்படிப் பாதுகாப்பது என்ற கேள்விக்கு மேற்கு நாடுளும் இந்தியாவும் விடை கண்டுபிடிக்க வேண்டி இருக்கும்.

இனி மூன்றாவது, அதாவது மாற்றத்தைப் பலப்படுத்தும் விதத்தில் அரசியல் சமூக பொருளாதார உளவியல் சூழலைக் கட்டியெழுப்புவது. இது ஏற்கனவே தொடங்கிவிட்டது.

அதேசமயம் மாற்றத்தை மனோரதியப்படுத்தும் விதத்திலான வேலைத்திட்டங்கள் இனிமேல் முன்னெடுக்கப்படும். மாற்றத்தை ஒரு மாயையாகக் கட்டி எழுப்ப வேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு. பிலிப்பைன்சிலும் மியான்மரிலும் இவ்வாறான செயற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அந்த வேலையைச் செய்வதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களையும் சிவில் சமூகங்களையும், செயற்பாட்டு இயக்கங்களையும் மத நிறுவனங்களையும், ஊடகங்களையும், புத்திஜீவிகளையும், படைப்பாளிகளையும் அரசியல்வாதிகளையும் அவர்கள் கையாள முற்படுவார்கள். இந்தியாவில் உள்ள ஈழ அகதிகள் திரும்பி வரலாம் என்று கூறப்படுவதும் அப்படியொரு வேலைத்திட்டம்தான்.கணிசமான அளவு இந்திய மற்றும் மேலைத்தேய ஊடகங்கள் மாற்றத்தை ஒரு மாயையாகக் கட்டி எழுப்பி வருகின்றன. சிங்கள மக்கள் இந்த மாயைக்குள் சிக்கி உழல்வதால் அவர்களுக்கு கெடுதி எதுவும் வரப்போவதில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு?

யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒரு கலைச் செயற்பாட்டாளர் கேட்டார் ... "விலைகளைக் குறைக்குமாறும் சம்பளத்தைக்கூட்டுமாறும் நாம் கேட்டோமா? பாதைகளைத் திறப்பதும், தடைகளை நீக்குவதுமா எங்களுடைய அடிப்படைப் பிரசசினைகள்?. நாங்கள் இதைவிட பயங்கரமானப் பிரச்சினைகளைக் கடந்து வந்திருக்கின்றோம். ஆனால் இப்பொழுது இவைதான் எங்களுடைய பிரச்சினைகள் என்று காட்டப்பார்க்கிறார்கள்"... என்று.

உண்மைதான் தமிழ் மக்கள் இதைவிடப் பயங்கரமான சூழ்நிலைகளுக்குள் வாழ்ந்திருக்கிறார்கள். பதுங்கு குழிக்கும் வீட்டுக்கும் இடையே ஈருடகவாசிகளாகக் கிழிபட்டிருக்கிறார்கள். சவர்க்காரத்திற்குப் பதிலாக பனம் பழப்பாணியைப் பயன்படுத்தியிருக்கிறர்கள். தேங்காய்ப்பாலுக்குப் பதிலாகக் கஞ்சியைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். மின்சாரத்திற்குப் பதிலாக ஜாம் போத்தல் லாம்பை பயன்படுத்தியிருக்கிறார்கள். காகிதாதிகள் கிடைக்காத போது கார்ட்போட் மட்டைகளில் பத்திரிகைகளைப் பதிப்பித்து வாசித்திருக்கிறார்கள். மிதி வண்டிச் சில்லில் சுற்றி வானொலி கேட்டிருக்கிறார்கள். போரின் இறுதிக் கட்டத்தில் தேங்காய் இல்லாமல், பச்சைமிளகாய் இல்லாமல், தூள் இல்லாமல், உப்பு இல்லாமல் கண்ணீரையே உப்பாக்கி சமைத்துச் சாப்பிட்டிருக்கிறார்கள். உலகின் மிக நீண்ட கழிப்பறை என்று வர்ணிக்கப்பட்ட பொக்கணையில் இருந்து முள்ளிவாய்க்கால் வரையிலுமான வங்கக் கடற்கரையில் எதுவிதமான மறைப்புக்களுமின்றி மலம் கழித்திருக்கிறார்கள். நலன்புரி நிலையங்களில் மலக்குழிக்குள் தவறி விழுந்து உயிரிழந்திருக்கிறார்கள் இதை இப்படியே முடிவின்றி எழுதிக்கொண்டே போகலாம்.... அயுதமோதல்கள் முடிவுக்கு வந்து சுமார் ஆறு ஆண்டுகளாகிவிட்டன. ஆனால் இப்பொழுதும் தமிழ் மக்களால் இறந்து போனவர்களை நினைவுகூர முடியவில்லை. இறந்துபோனவர்களையும் காணாமல் போனவர்களையும் எண்ணிக் கணக்கெடுக்க முடியவில்லை. தமது அரசியல் கைதிகளை விடுவிக்க முடியவில்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க முடியவில்லை. இவ்வாறாக ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து சுமாராக ஆறு ஆண்டுகள் ஆன பின்னரும் கூட கூட்டுக் காயங்களிலும், கூட்டு மனவடுக்களிலும் உழன்று கொண்டிருக்கும் ஒரு சமூகத்திற்கு நிவாரணங்களும் விலைக்குறைப்பும் சம்பள உயர்வும் ஒரு கூட்டுச் சிகிச்சையாக அமையுமா?

நிச்சயமாக இல்லை. தமிழ் மக்கள், ஒரு மக்கள் திரளாக தங்களுக்குரிய கூட்டு உரிமைகளை அனுபவிக்கும் ஓர் அரசியற் சூழலே அவர்களுக்குரிய கூட்டுச் சிகிச்சையாக அமைக்க முடியும். அப்படி ஒரு கூட்டுச் சிகிச்சைக்கான உரையாடல்கள் எவையும் அற்றதோர் வெற்றிடத்தில் வெளிப்பூச்சு மருந்தையே உள்மருந்தாக கருதி மயங்கலாமா? அரசியல் வாதிகளும், புத்திஜீவிகளும், ஊடகங்களும் அந்த மாயத் தோற்றத்தைக் கட்டி எழுப்ப உதவி புரியலாமா? ஆயின் மாற்றத்தையும் தமிழ் மக்களின் கூட்டு உரிமைகளையும் பாதுகாப்பது எப்படி? அல்லது இந்த மாற்றங்கள் தமிழ் மக்களின் கூட்டு உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாற்றங்களா?

நிச்சயமாக இல்லை. நிகழும் மாற்றங்களால் தமிழ் மக்களுக்கும் உடனடி நன்மைகள் உண்டு என்பதை இக்கட்டுரை ஏற்றுக்கொள்கிறது ஆனால் இந்த மாற்றங்களின் மூலம் தன்னைப் புதுப்பித்துக் கொண்டிருக்கும் சிங்களபௌத்த மேலாண்மைவாத மனோநிலையில் ஏற்படக் கூடிய மாற்றமே தமிழ் மக்களின் கூட்டு உரிமையைப் பாதுகாக்கக் கூடியது. அதல்லாத ஏனைய எல்லா மாற்றங்களும் அந்த மனோநிலையை புதிய காலகட்டங்களுக்கு ஏற்ப புதுப்பிக்கும் வகையிலான மாற்றங்களே! சக்திமிக்க நாடுகள் மனித உரிமைகளையும் போர்க்குற்ற விசாரணைகளையும் அரசியல் கருவிகளாக அல்லது அழுத்தப்பிரயோக உத்திகளாக கையாண்டுவரும் ஒரு பூகோளச் சூழலில் திரும்பவும் திரும்பவும் கைவிடப்படும் மக்களாக தமிழ் மக்களே காணப்படுகிறார்கள். யாருடைய வாக்குகளை வைத்து மாற்றம் உறுதி செய்யப்பட்டதோ அந்த மக்கள் கூட்டமே எந்தவிதமான பாதுகாப்பு உத்தரவாதமும் இன்றி இனிமேலும் காத்திருக்குமாறு கேட்கப்படுகின்றது.

அண்மையில் லோர்ட் நசெபி யாழ்ப்பாணத்து விஜயம் மேற்கொண்டிருந்தார். பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இலங்கை விவகாரங்களுக்கு இவரே பொறுப்பு. தனது விஜயதின் பின் கருத்துத் தெரிவிக்கும் போது தமிழ் மக்கள் இறந்தவர்களை நினைவு கூர்வதற்கான ஒரு நாளை சமாதான நாளாக அனுஸ்டிக்க முடியுமா என்று தான் ஆராயப்போவதாக் கூறியிருக்கிறார்.

இறந்தவர்களை நினைவு கூருவது அல்லது இறந்தவர்களையும் காணாமல் போனவர்களைகயும் கணக்கெடுப்பது போன்றவை அனைத்தும் ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுரிமையின்பாற்பட்ட விவகாரங்களே! தமிழ் மக்களின் கூட்டு உரிமையைப் பாதுகாப்பற்கான பொருத்தமான உரையாடல்கள் எவையும் இதுவரையிலும் தொடங்கப்படவில்லை. நாடாளுமன்றத் தேர்தல் வரையிலும் பேசக்கூடாத ஒரு விவகாரமாகவே அது கருதப்படுகின்றது. அதற்குப் பின்னரும் அது எப்பொழுது பேசப்படும் என்பது குறித்து உத்தியோகபூர்வமான வெளிப்படையான அறிவிப்புக்கள் எவையும் இதுவரையிலும் கிடைக்கவில்லை. இத்தகையதொரு பின்னணியில் லோர்ட் நசெபி கூறுகிறார் "தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கும் என்று தமிழ் மக்கள் நம்பிக்கையுடன் இருக்கவேண்டும். அதே வேளை புலம்பெயர்ந்தவர்களும் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்" என்று

எல்லாரும் தமிழ் மக்களையே காத்திருக்குமாறு கேட்கிறார்கள். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து ஆறு ஆண்டுகள் ஆன பின்பும் கூட்டுக் காயங்களிலும், கூட்டு மனவடுக்களிலும் உழன்றுகொண்டிருக்கும் ஒரு சமூகத்தையே எல்லாரும் காத்திருக்குமர்று கேட்கிறார்கள்.

தமிழ் மக்கள் இனியும் எவ்வளவு காலத்திற்குக் காத்திருக்கப் போகிறார்கள்? அல்லது வெளியாருக்காகக் காத்திருப்பதற்குப் பதிலாக வெளியாரைக் கையாளும் ஒரு வளர்ச்சியை எப்பொழுது பெறப்போகிறார்கள்?

– –நிலாந்தன் – –

www.tamilsvoice.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. நேர்விளிம்பு, கவராயம் அளவுகோல் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக் கோடுகள் யாவற்றையும் தெளிவாகக் காட்டுக.

1. AB=8cm, AD=5.5cm, கோணம் DAB= 60பாகை, AB//DC, DC=6cm ஆகவுள்ள சரிவகம் ABCDஐ அமைக்க. பருமப்படிப் படம் அமைத்துக் கொள்க.
2. கோணம் ACD யை அளந்தெழுதுக.
3. B, C ஆகிய புள்ளிகளிலிருந்து சமதூரத்தில் செல்லும் புள்ளியின் ஒழுக்கை அமைக்க.
4. புள்ளி C யில் CD க்கு செங்குத்து அமைக்க
5. B, C ஆகியவற்றில் சமதூரத்திலிருந்து செல்லும் புள்ளியின் ஒழுக்கும் C யில் அமைத்த செங்குத்தும் சந்திக்கும் புள்ளியை E எனக் குறிக்க.
6. E ஐ மையமாகவும் CE ஐ ஆரையாகவும் கொண்ட வட்டத்தை அமைக்க.
7. வட்டத்தின் ஆரையை அளந்து எழுதுக.

02. என்னிடம் ரூபா x இருந்தது. அதில் ரூபா பத்திற்கு ஒரு பேனாவை வாங்கிய பிறகு எஞ்சியிருக்கும் பணத்திற்கான கோவையை எழுதுக.

03. கணிப்பீட்டுப் பரீட்சை ஒன்றில் 6 மாணவர்கள் பெற்ற புள்ளிகள் வருமாறு. 7, 6, 7, 5, 7, 8 ஆகும். எனின், ஆகாரப்புள்ளி யாது?

04. செவ்வகமொன்றின் சுற்றளவு 24செமீ. அதன் ஒரு அகலத்தின் நீளம் 4 செ.மீ எனின், அச்செவ்வகத்தின் நீளம் யாது?

05. வாடகைக் கொள்வனவுத் திட்டத்தில் குளிர்சாதனப் பெட்டியொன்றை வாங்கிய ஒருவர் முதல் கொடுப்பனவை செலுத்தி மீதியை 20 சம மாதாந்த தவணைக் கட்டணங்களாக செலுத்துவதற்கு உடன்படுகிறார். இக் கொடுக்கல் வாங்கலில் வட்டி செலுத்த வேண்டிய மாத அலகுகள் எத்தனை?

06. ஒரு மாம்பழத்தின் விலை ஒரு தோடம்பழத்தின் விலையின் கால் பங்கு ஆகும். ஒரு மாம்பழத்தின் விலை 5 ரூபா எனின், 3 தோடம்பழங்களின் விலையினைக் காண்க.

## பாடம் : வரலாறு

01. அமெரிக்கா கண்டத்தில் இன்று வட அமெரிக்கா கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மக்கள் பின்வருவனவற்றுள் எந்த கண்டத்தில் இருந்து புராதன காலத்தில் வந்தவர்கள்?
   1. ஆபிரிக்கா 2. ஆசியா 3. அவுஸ்திரேலியா 4. ஐரோப்பா

02. கொத்மலை, விக்டோரியா, றந்தெனிகலை நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ள நதியானது,
   1. மகாவலிகங்கை 2. நில்வள கங்கை
   3. வளவ கங்கை 4. கல்லோயா

03. ஓவிய மறுமலர்ச்சி ஐரோப்பாவில் ஏற்பட்ட பிரசித்தி பெற்ற நகரத்தினை பின்வருவனவற்றில் இருந்து தெரிவு செய்க
   1. சுவிஸ்லாந்து 2. இத்தாலி 3. அயர்லாந்து 4. ஜேர்மனி

04. 1917ம் ஆண்டு ஏற்பட்ட ரஷ்ய புரட்சியின் விளைவுகளில் ஒன்று
   1. ஊழிய சுரண்டல் தொடர்ந்து நிலவியது
   2. ரஷ்யாவில் சமவுடைமை கருத்துக்கள் பரவி சோசலிச பொருளாதாரம் உருவானது
   3. முதலாளித்து வாதிகளின் அதிகாரங்கள் தொடர்ந்து காணப்பட்டது.
   4. பிரபுக்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டு அடிமைச் சமுதாயம் ஒன்று தொடர்ந்து நிலைபெற்றிருந்தது

05. ஐக்கிய நாடுகள் சபையின் இணைநிறுவனமான (UNIDO) எனக் குறிப்பிடப்படுவது
   1. ஐக்கிய நாடுகள் சபையின் தேசிய அபிவிருத்தி அமையம்
   2. ஐ.நா சபையின் முதலீட்டு அபிவிருத்தி அமையம்
   3. ஐநா சபையின் கைத்தொழில் அபிவிருத்தி அமையம்
   4. ஐ.நா சபையின் சனத்தொகை அபிவிருத்தி திட்டம்

06. பிளினி என்ற தேச சஞ்சாரி பின்வருவனற்றுள் எந்நாட்டினை உடையவர்
   1. கிரேக்கம் 2. அரேபியா 3. உரோமம் 4. சீனம்

07. இரண்டாம் உலகப் போரிலே எந்நாட்டில் படையெடுத்த போது ஹிட்லருக்கு பெரும் தோல்வி ஏற்பட்டது?
   1. பெல்ஜியம் 2. ரூசியா 3. இங்கிலாந்து 4. போலந்து

## பாடம் : விஞ்ஞானம்

01. பின்வரும் சாதனங்களிடையே எதில் மிக்கூடிய வாற்றுப் பெறுமானம் இருக்கலாம்?
   1. வானொலிப்பொறி 2. சாதாரண மின்குமிழ்
   3. அமிழ்ப்பு வெப்பமாக்கி 4. தொலைக்காட்சிப் பெட்டி

02. வீட்டில் நடைபெறும் ஒரு பரிசோதனைக்காக மாணவன் ஒருவன் சூரியனில் இருந்து கிடைக்கும் சமாந்தர ஒளிக்கதிர்களை பயன்படுத்தி ஒரு தடவை விரியும் ஒளிக்கற்றைகளையும், ஒரு தடவை ஒடுங்கும் ஒளிக்கற்றைகளையும் பெறவேண்டும். இதற்கு மிகவும் இலாபகரமான முறை பின்வருவனவற்றுள் எதனை வாங்குதலாகும்?
   1. குவிவுவில்லை மாத்திரம் 2. குழிவு வில்லை மாத்திரம்
   3. குவிவு வில்லையும், குழிவு வில்லையும் 4. குவிவுவில்லையும், குவிவாடியும்

03. பின்வரும் தாவரங்களுள் எது ஒரு வரண்ட நிலத்தாவரம் அல்லாதது?
   1. நாகதாளி 2. கற்றாழை 3. கள்ளி 4. துளசி

04. பூனையொன்று எலியொன்றினை பிடித்து உணவாக உட்கொள்ளலை பின்வருவனவற்றுள் எத்தொடர்புக்கு உதாரணமாகக் கொள்ளலாம்?
   1. ஒட்டுண்ணி 2. இரைகவ்வல் 3. ஒன்றியவாழ்வு 4. அழுகல் வளரி

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

பாரதியார் சுயசரிதை (புதிய பாடத்திட்டம்)

### பிள்ளைக் காதல்

காத்திருந்தவள் போம்வழி முற்றிலும்
கண்கள் பின்னழகார்ந்து களித்திட
யாத்த தேருருளைப்படு மேழைதான்
யாண்டு தேர்செலு மாங் கிழுப்புற்றெனக்
கோத்த சிந்தையோடேகி மதில் மகிழ்
கொண்டு நாள்கள் பல கழிந்திட்டனன்
பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்
புலனழிந்தொரு புத்துயி ரெய்துவேன்.

**பாட்டின் பொருள்** - அவளைக் காணும் ஆசையோடு காத்திருந்து அவள் போகின்ற வழி முழுவதும் அவள் பின்னழகை கண்கள் ஆராய்ந்து பார்த்து மகிழ்ச்சி கொள்ளும் வேளை என் உள்ளமானது உருவாக்கப்பட்ட தேரின் சில்லினுள் அகப்பட்டு இழுபட்டுச் செல்லும் சிறுவிலங்கு போன்று அத்தேர் செல்லும் பாதை முழுவதும் இழுபட்டுச் செல்வது போன்று இழுபட்டுச் செல்ல அவள் பற்றிய நினைவுகளால் நாட்கள் பல கழித்துவிட்டேன். சுடர் பூத்தது போன்ற அவளது முகத்தினை காண நேர்ந்தால் என் ஐம்புலங்களும் அழியப்பெற்று ஓர் புதிய பிறப்பினை அடைந்திடுவேன் எனப் பாரதி கூறுகின்றான்.

**இப்பாடலில் இடம்பெறும் அணிச்சிறப்பு :**

உவமானம் - தேர்சில்லினூடாக இழுத்துச்செல்லப்படும் கொம்பில்லாச் சிறு விலங்கு
உவமேயம் - அவளது நினைவுகளால் இழுத்துச்செல்லப்படும் மனம்.
பொதுத்தன்மை- இழுத்துச் செல்லப்படல்
உவமைஉருபு - போல



தமிழ் இலக்கியத் தொகுப்பு
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

Ex 01: ***Read the following description about Gandhi and write a similar description about Bharathiyar. Use the information given in the table. Write five sentences.***

| Name | Date of Birth | Date of death | Birth place | Subjects studied | job | |
|---|---|---|---|---|---|---|
| Gandhi | 02 - 10 - 1869 | 11 - 09 - 1921 | Rajkot Gujarat | Law | Lawyer | fought against British rulers |
| Bharathiyar | 15 - 08 - 1847 | 11 - 12 - 1882 | Eddayapuram India | Sanskrit and Sanskrit and | Editor and journalist | fought against British rulers |

Gandhi was born on October 2nd, 1869 at Rajkot in Gujarat. When he was young, he learned law. Subsequently scholars gave Gandhi the title "Mahatma" which stick on to his name till his death that occurred on 11th September 1921. By profession mahatma Gandhi was a lawyer. He fought against the British rulers.

Bharathiyar was ..........................................................................................

.....................................................................................................................

05. மனித உணவுக்கால்வாயிலே ஒரு சரிவான தசைப்படை காணப்படுவது
   1. களத்தில் 2. இரைப்பையில் 3. முன்சிறுகுடலில் 4. நேர் குடலில்

06. பின்வருவனவற்றில் எது தனியனின் பாரம்பரிய இயல்பாக அமைவதில்லை
   1. உயரம் 2. நுண்மதி 3. தோலின் நிறம் 4. தசை வளர்ச்சி

07. இயற்கையின் மூலகமாக இருக்கத்தக்க உலோகம் பின்வருவனற்றில் எது?
   1. சோடியம் 2. இரும்பு 3. வெள்ளி 4. நாகம்

08. தாவர இலைகளில் காணப்படும் சில இசைவாக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   அ. அவிழ்ந்த இலை வாய்கள் இருத்தல்
   ஆ. மிகவும் மெல்லிய புறத்தோல் இருத்தல் இ. மேற்றோல் மயிர்கள் இருத்தல்.
   இவற்றில் ஆவியுயிர்ப்பு வீதத்தை குறைப்பதற்கு உதவும் இசைவாக்கங்கள் யாவை?
   1. அ, ஆ ஆகியன மாத்திரம் 2. அ, இ ஆகியன மாத்திரம்
   3. ஆ, இ ஆகியன மாத்திரம் 4. அ, ஆ, இ ஆகிய எல்லாம்

09. ஒரு சோடியங் குளோரைட்டு கரைசலின் அமைப்பு 58.5g $dm^{-1}$ ஆகும். அக்கரைசலின் அமைப்பை வேறு விதத்தில் சரியாக எடுத்துரைக்கும் விடை யாது? (NA=23, Cl=35.5)
   1. 58.5 mol $dm^{-3}$ 2. 5.85 mol $dm^{-3}$ 3. 1 mol $dm^{-3}$ 4. 0.1 mol $dm^{-3}$

10. ஒரு தாவரத்தின் பூவை அவதானித்த மாணவன் ஒருவன் அதனைப் பற்றிய பின்வரும் விபரங்களைக் குறித்துக் கொண்டான். அதன் அல்லிகள் நிறத்தை உடையன. கேசரங்கள் அடியிலிருந்து அமுதம் வெளியே வந்து கொண்டிருந்தது. மகரந்தக் கூடுகள் குறிக்குக் கீழே அமைந்திருந்தன. இப்பூ எக்காரணியின் மூலம் மகரந்தச் சேர்க்கை அடைவதற்கு வடிவமைந்திருக்கின்றது?
   1. பூச்சிகளின் மூலம் 2. காற்றின் மூலம்
   3. நீரின் மூலம் 4. செயற்கை முறையின் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 10

01. இலங்கையில் மிக குறைந்த வெப்பநிலையையுடைய நகரம்
    1. நுவரெலியா 2. யாழ்ப்பாணம் 3. அம்பாந்தோட்டை
    4. அநுராதபுரம்

02. இரவு நேரத்தை அண்மிக்கும் போது இலைகள் சுருங்கும் தாவரமாவது
    1. எலுமிச்சை 2. கறிவேப்பிலை 3. புளியம்
    4. வேம்பு

03. மழை வீழ்ச்சி அளவிடப்படுவது
    1. மில்லி லீற்றரில் 2. மீற்றரில் 3. மில்லிமீற்றரில்
    4. லீற்றரில்

04. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்
    1. ஆனந்த சமரக்கோன் 2. டபிள்யூ.டி. அமரதேவா
    3. கலாநிதி சீ. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா 4. கலாநிதி ரீ.வி.ஜாயா

05. தரைவழிப்போக்கு வரத்துச்சாதனம்
    1. கப்பல் 2. விமானம் 3. படகு 4. புகையிரதம்

06. துடுப்பாட்டத்தில் ஒரு குழுவில் இடம்பெறும் வீரர்களின் அதிக பட்ச எண்ணிக்கை
    1. 7 2. 11 3. 16 4. 5

07. பழுதடைந்த உணவை உண்பதால் ஏற்படக்கூடிய நோய்
    1. கண்நோய் 2. நீர் வெறுப்புநோய்
    3. வயிற்றுவலி 4. டெங்கு

08. தாவர வளர்ச்சிக்குத்தேவையான அத்தியாவசிய காரணி
    1. கிருமி நாசினி 2. ஒலி 3. நீர் 4. பாதுகாப்பு

09. வேகமாக ஓடக்கூடிய பறவை?
    1. தீக்கோழி 2. வாத்து 3. கொக்கு 4. அன்னம்

10. வீட்டுத்தோட்டத்தில் வளரும் களை வகை அல்லாதது?
    1. கோரை 2. துத்திரி 3. சீதேவியார் செங்கழுநீர் 4. இஞ்சி

**பகுதி 02**

01. பின்வரும் வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றி எழுதுக.
அ. காந்தியடிகள் சத்தியசோதனை என்ற நூலை எழுதினார்.

....................................................................................

ஆ. காந்தியடிகள் போர்பந்தர் என்னும் கிராமத்தில் பிறந்தார்.

....................................................................................

02. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக
அ. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

....................................................................................

ஆ. ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்

....................................................................................

03. வெற்றிடத்துக்குப்பொருத்தமான மரபுச் சொற்களை எழுதுக
அ. நாய் குரைக்கும் என்பது போல பன்றி

....................................................................................

ஆ. குதிரையின் ஆண் குண்டு எனப்படுவதுபோல நண்டின் ஆண்

....................................................................................

04. பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.
அ. அண்ணா எனக்கு இந்த எல்லே விளையாட்டின் வரலாறு பற்றிக் கூறுவீர்களா எனத் தம்பி கேட்டான்
ஆ. அதோ அண்ணா ஓர் ஆச்சிரமம் தெரிகின்றது



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



## தெளிவான முடிவு எடுக்கவேணும் குட்டிக்கதை

ஒரு ஊரில் பத்து விவசாயிகள் இருந்தார்கள். ஒரு நாள் அவர்கள் தத்தம் நிலங்களில் உழவு வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது வானம் இருட்டிக் கொண்டு வந்தது. பயங்கர மின்னலுடன் இடி இடித்தது. பயந்து போன அவர்கள் பக்கத்தில் இருந்த ஒரு பாழடைந்த மண்டபத்தில் ஓடி ஒளிந்து கொண்டனர்.

வெகுநேரமாகியும் மின்னல் வெட்டுவதும் இடி இடிப்பதும் நிற்கவில்லை. அவற்றின் உக்கிரம் வேறு அதிகரித்துக் கொண்டே போனது. பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த விவசாயிகளில் ஒருவன் "நம்மிடையே ஒரு மகாபாவி இருக்கிறான். அவனைக் குறி வைத்துத்தான் கடவுள் இடியையும் மின்னலையும் ஏவியிருக்கிறார். அந்தப் பாவியை வெளியே அனுப்பிவிட்டால் மற்றவர்கள் பிழைத்துக் கொள்ளலாம்" என்று சொன்னான்.

மற்றவர்கள் இதனை ஆமோதித்தார்கள். இத்தனை பேரில் அந்தப் பாவியை எப்படி அடையாளம் கண்டு கொள்வது என்று விவாதம் நடந்தது. விவாதத்தின் முடிவில் தீர்ப்பைக் கடவுளிடமே விட்டு விடுவது என்று முடிவாயிற்று. அதன் படி அனைவரும் தத்தம் தொப்பிகளைக் கையில் பிடித்துக் கொண்டு தொப்பியை மழையில் நீட்டுவது என்று முடிவாயிற்று.

அனைவரும் தத்தம் தொப்பிகளை மழையில் நீட்டினர். பயங்கரமான இடி முழக்கத்துடன் ஒரு மின்னல் வெட்டியது. அதில் ஒரு விவசாயியின் தொப்பி மட்டும் எரிந்து சாம்பலாகியது.

மற்ற ஒன்பது விவசாயிகளும் "இவன்தான் பாவி. இவனை முதலில் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு" என்று கத்திக் கொண்டே அவன் மேல் பாய்ந்தனர். அந்த விவசாயி கெஞ்சிக் கதறி தான் அப்பாவி என்று மன்றாடினான். மற்றவர் யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவனை பலவந்தமாகக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினர். அவன் கதறிக் கொண்டே மழையில் ஓடினான்.

அப்போது அதி உக்கிரமாக ஒரு மின்னல் தாக்கி இடி இடித்தது. ஓடிக்கொண்டிருந்த விவசாயி அதிர்ச்சியில் உறைந்து நின்று விட்டான். சற்று நேரத்தில் நிலைக்குத் திரும்பி மண்டபத்தைத் திரும்பிப் பார்த்தான். மண்டபத்தில் இடி விழுந்து நொறுங்கிக் கிடந்தது. ஒரு புண்ணியவானின் புண்ணிய பலத்தில் தப்பித்திருந்த ஒன்பது விவசாயிகளும் அவனை வெளியே தள்ளிப் பாதுகாப்பை இழந்து பரிதாபமாகக் கருகிச் செத்துப் போய் விட்டனர்.

– எடுக்கும் முடிவை சரியானதாக எடுத்தல் வேண்டும்–

## எனது பட்டம்



எனக்கு மிகவும் பிடித்த விளையாட்டு பட்டம் ஏற்றுதல் ஆகும். என்னிடம் ஏழு பட்டங்கள் உண்டு. வானவில் நிறங்கள் ஏழிலும் என்னிடம் பட்டங்கள் உண்டு. எனது அப்பாவும், அண்ணாவும் பட்டம் ஏற்றுவதற்கு எனக்கு உதவுவார்கள். என் அண்ணாவிடம் என் அளவு பட்டம் ஒன்றும் உள்ளது.

*சீ. பிரணிக்ஷன்*
*தரம் - 05*



*திருமதி.சந்திரன், திருகோணமலை*

## சிந்திக்க .. ..

படுத்துக் கிடப்பவனுக்கு
பகலும் இருட்டாகத் தெரியும்:
எழுந்து உழைப்பவனுக்கு
இருட்டிலும் வெளிச்சம் தெரியும்...

## கெட்டிக்காரரே!



குஞ்சுத் தம்பியே - நலம்
குழப்பிடாதடா!
பிஞ்சுத் தங்கையே - துயர்
பெருக்கிடாதடி!

ஆடிப்பாடு வீர - விளை
யாடி மகிழுவீர்!
கூடியாடுவீர் - ஏதும்
குறை வராமலே!



அம்மை அப்பனார் - வேலை
அங்கு செய்கிறார்!
உம்மைப் பார்த்திட - மாலை
ஓடி வருவராம்!

பாட்டி பாட்டனார் - உம்மைப்
பார்த்துக் கொள்ளுவோம்!
கேட்டு நடந்திடின் - நீவிர்
கெட்டிக்காரரே!

*தாமரைத்தீவான்*
*பூச்சந்திவு- கிண்ணியா*

## பொது அறிவு - 12

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. உலகின் மிகப்பெரிய தீவுக் கூட்டம் எங்குள்ளது? இந்தோனேசியா
02. உலகிலேயே தங்கம் வாங்குவதில் பொதுவாக அதிக ஆர்வம் காட்டுபவர்கள் யார்? இந்தியர்கள்
03. யானைகளைப் பழக்கி அடக்கும் கருவி எது? அங்குசம்
04. மனித உடலின் மிகப்பெரிய சுரப்பி எது? ஈரல்
05. தலதா மாளிகையை கட்டிய மன்னன் யார்? கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன்
06. ∴பேஸ்புக்கின் பழைய பெயர் என்ன? ∴பேஸ்மேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுவட்டு வெளியீடு

சம்பூர் ரதனின் உருவாக்கத்தில் உருவான "கேட்காத குரல்கள்" குறுந்திரைப்படம் இறுவட்டு வெளியீடு கடந்த வியாழக்கிழமை 05.03.2015 உவர்மலை விவேகாநந்தா கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.இரா.சம்பந்தன் கலந்து சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் பல முக்கியஸ்தர்களும் பங்குபற்றினர். இதில் சம்பந்தன் ஐயா அனைவருக்கும் இறுட்டுக்களை வழங்கி வைத்தார்.







## ஞானம் அறிமுக விழா



கலை இலக்கிய சஞ்சிகையான ஞானம் (ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழ்) நூலின் அறிமுக விழா கடந்த வியாழன் (05.03.2015) அன்று திருமலை நவம் அவர்களின் தலைமையின் கீழ் திருகோணமலை பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடந்தேறியது. இந்நிகழ்வுக்கு நகரமுதல்வர் திரு.க.செல்வராஜா வர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

976 பக்கங்களைக் கொண்டமைந்த இந்நூல் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், ஓவியங்கள் என பலவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்நிகழ்வு கனகசபை தேவகடாட்சம் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகி அறிமுகவுரை, ஆய்வுரைகளைத் தொடர்ந்து சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் அவர்களால் ஏற்புரை வழங்கப்பட்டதுடன் திருமலை.வீ.என்.சந்திரகாந்தி அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவடைந்தது. மேலும் பிரதிகளை வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

## பூர்ணிமா விழா



மட்டக்களப்பு மாவட்ட அகில இலங்கை கிருஸ்ண பக்தி இயக்கம் ஏற்பாடுசெய்த பூர்ணிமா விழா கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்றது. கல்லடி,உப்போடையில் உள்ள மட்டக்களப்பு மாவட்ட அகில இலங்கை கிருஸ்ண பக்தி இயக்க நிலையத்தில் நடைபெற்றது. இதனை முன்னிட்டு பஜனை மற்றும் அபிசேக நிகழ்வுகள் நடைபெற்றதுடன் ஸ்ரீகிருஸ்ண சைதன்ய மஹாபிரபு உபதேசங்களும் கதைகளும் நடைபெற்றன. இதன்போது ஆரார்த்தி, பூஜை, கீர்த்தனம் என்பன நடைபெற்றதுடன் பல்வேறு ஆன்மீக சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

## சித்திரசேனா கலாலயத்தினரின் தேவாஞ்சலி

சித்திரசேனா கலாலயத்தினரின் தேவாஞ்சலி நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மாலை மட்டக்களப்பில் நடைபெற்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கெயார் சர்வதேச அமைப்பின் அனுசரணையுடன் கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பெரும்பான்மையினத்து மக்களின் வாழ்வுடன் ஒன்றிணைந்துள்ள சடங்குகளைக் கொண்டதான நிகழ்வுகளை உள்ளடக்கியதாக இந்த நாட்டிய நிகழ்வு நடைபெற்றது. கலை இயக்குனர் ஹேஷ்மா விக்னராஜாவின் நெறியாள்கையின் கீழ் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வில் பெருமளவான கலை ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வினை பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் வழிநடாத்தினார்.







# சர்வதேச மகளிர் தினம் – மார்ச் 08

## மக்கள் முரசு

உலகம் முழுவதிலும் கொண்டாடப்படும் மகளிர் தினம், சர்வதேச மகளிர் தினமாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட தினம் மார்ச் 18, 1911. ஃபிரெஞ்சுப் புரட்சியின் போதே பெண்கள் தங்களுக்கும் ஆண்களுக்குச் சமமான சுதந்தரம், சம உரிமை, அரசனது ஆலோசனைக் குழுமங்களில் பிரதிநிதித்துவம் கேட்டு போராட்டத்தில் இறங்கினர். எட்டு மணி நேர வேலை, வேலைக்குத் தகுந்த கூலி, அரசியலில் வாக்குரிமை ஆகியவையும் அவர்களது புரட்சி செயல்பாட்டில் பட்டியலிடப்பட்டன.

அப்போது ஆரம்பித்த இந்தப் போராட்டங்கள் 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் மெல்ல மெல்ல உலகம் முழுதும் பரவி பெண்களிடையே ஒரு குறிப்பிடத்தக்க அசாதாரண விழிப்புணர்வை ஏற்படுத்த ஆரம்பித்தன. பெண்கள் தங்கள் பலம் என்னவென்று உணரத் தொடங்கினர்.

பெண்ணடிமை, பெண்களை இழிவுபடுத்துதல், பெண்களை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துதல், பெண் என்பதால் அவளை ஒதுக்குதல் ஆகிய சமுதாய போக்குக்களுக்கு எதிராகவே இந்தப் போராட்டங்கள் நடந்தன.

1911ம் ஆண்டு மார்ச் 19 ஆம் தேதி முதல் முறையாக ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் சர்வதேச மகளிர் தினம் அங்கீகாரம் பெற்றது. சுமார் ஒரு மில்லியன் பெண்களும் ஆண்களுமாக பெண்களுக்கு சம உரிமை கேட்டு ஒரு பேரணியாகத் திரண்டு பிரசாரத்திலும் ஈடுபட்டனர். துரதிஷ்டவசமாக மார்ச் 25 ஆம் தேதி நியூயார்க் நகரில் ஏற்பட்ட 'முக்கோண தீ விபத்து' 140 உழைக்கும் மகளிரின் உயிரைப் பறித்தது. இவர்கள் அனைவரும் அமெரிக்காவுக்கு வயிற்றுப் பிழைப்புக்காக வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள். இந்தக் கொடும் சம்பவம் பெண்களின் உழைக்கும் சூழலைப் பற்றிய மோசமான நிலையை உலகுக்கு அறிவித்தது. இதே ஆண்டில் உழைக்கும் மகளிர் டீசநயன யனெ சுழளநள என்ற போராட்டமும் நடத்தினர். இதில் பங்கு பெற்ற மகளிர் ருந றயபெ டீசநயன டிரவ றந றயபெ சழளநள, வழழ என்று எழுதப்பட்ட கொடிகளை தாங்கி ஊர்வலம் சென்றனர்.

1913 ஆம் வருடம் முதல், மார்ச் 8 சர்வதேச மகளிர் ஆண்டாக உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

வேத காலத்தில் பெண்கள் மெத்தப் படித்தவர்களாகவும், தங்கள் கணவன்மார்களுக்கு சரிசமமாக எல்லா விஷயத்திலும் மேன்மையாக வாழ்ந்து வந்ததாகவும் அறிஞர்கள் கூறுகின்றனர். கார்கி, மைத்ரேயி போன்ற பெண் அறிவாளிகளைப் பற்றி உபநிடதம், ரிக் வேதமும் பேசுகின்றன.

ஆனால் பிற்காலத்தில் பெண்களின் நிலை சரியத் தொடங்கியது. சதி (கணவன் உயிர் துறந்த பின் பெண்ணும் அவனுடன் தீக் குளிக்கும் வழக்கம்) குழந்தை திருமணங்கள் பெண் வீட்டாரிடம் வரதட்சணை கேட்பது போன்ற சமுதாயச் சடங்குகள் பெண்களுக்கு எதிராக இருந்தன.

மிகவும் சிறிய வயதில் நடந்த திருமணங்களில் பெண் வயதுக்கு வரும் முன்பே கணவன் உயிர் துறக்க நேரிட்ட சந்தர்ப்பங்களில் அந்தப் பெண்கள் ஆயுள் முழுவதும் விதவை பட்டத்துடன் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டு வாழ நேர்ந்தது. மறுமணம் என்பது அவர்களால் மட்டுமல்ல, அவர்களின் குடும்பத்தாராலும் கூட நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக கருதப்பட்டது. பெற்றோர் ஆதரவிலோ அவர்களது மறைவுக்குப் பின் கூடப் பிறந்தவர்களின் நிழலிலோ அவர்களது குடும்பங்களின் சம்பளமில்லா வேலைக்காரிகளாக இந்தப் பெண்கள் வாழ நேர்ந்தது.

கோவில்களில் நாட்டியமாடும் பெண்கள் தேவதாசி என்றழைக்கப்பட்டனர். நாட்டியக்கலையை வளர்த்ததில் இவர்களது பங்கு மிக முக்கியமானது. கடவுளுக்கே என்று தாங்களாகவே 'பொட்டு' கட்டிக் கொள்ளும் இவர்கள் 'நித்ய சுமங்கலி' என்று அழைக்கப்பட்டனர். கடவுளுக்கு தாசிகளாக இருந்து, கோவிலின் வருமானத்திலேயே தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தனர். கோவில்களின் வருமானம் குறையக் குறைய இவர்களது நிலையும் சிறிது சிறிதாக மாறி மனிதர்களின், குறிப்பாக பணம் படைத்த ஆண்களின் ஆசை நாயகிகளாக மாறும் அவல நிலைக்கு ஆளாகினர். இதனால் சமுதாயத்தில் எந்தவித உயர்ந்த மரியாதையும் இவர்களுக்கு மட்டுமில்லை இவர்களது வாரிசுகளுக்கும் கிடைக்கவில்லை. உயர்ந்த நிலையில் இருந்த இவர்கள் விலைமாது என்கிற பட்டத்தை சுமக்க வேண்டியதாயிற்று.

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் பெண்கள் முன்னேறியிருப்பது போலத் தோன்றினாலும் இது மிகவும் சிறுபான்மை தான். மூன்றாவது உலகம் என்று சொல்லப்படும் நாடுகளில் பெண்களின் நிலை இன்னும் பரிதாபத்திற்குரியதாகவே இருக்கிறது. பெரும்பான்மையான பெண்கள் தங்களது தினசரி வாழ்க்கையை நடத்திக் கொண்டு போகவே அதிகப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கிறது. இந்தப் பெண்களுக்கு 'பெண்கள் சுதந்திரம், பாலியல் விடுதலை' என்பது புரியாத அவர்களுக்கு சம்மந்தப்படாத ஒன்றாகவே

1975 ஆம் ஆண்டு மெக்ஸிகோ நாட்டில் நடந்த சர்வதேச மகளிர் மாநாட்டில் அடித்தட்டுப் பெண்களுக்கும், மேல்வர்க்க பெண்களுக்கும் இடையே பூதாகாரமான இடைவெளி இருப்பது வெட்ட வெளிச்சம் ஆகியது. இந்த அடித்தட்டுப் பெண்களில் பெரும்பாலோர் எழுத்தறிவு இல்லாமலும், போஷாக்கு குறைந்தவர்களாகவும், வளர்ச்சியடையாத கிராமப் பகுதிகளில் இருப்பவர்களாகவும், ஏழ்மையிலும், உடல்நலக் குறைவிலும் சிக்கித் தவிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையிலும்கூட வளர்ந்துவரும் நாடுகளான இந்தியா, ஸ்ரீலங்கா முதலிய நாடுகளில் பொறுப்பான அரசியல் பொறுப்புகளை பெண்கள் ஏற்று நடத்தி வருவது ஒரு நல்ல அறிகுறியாகவே தெரிகிறது. இதனால் பெண்கள் சுதந்திரம் என்பது ஒரு மேற்கத்திய மந்திரச்சொல்லாக மட்டுமில்லாமல் வளர்ந்துவரும் நாடுகளிலும் எதிர்காலத்தில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

'பெண்களுக்கெதிரான கொடுமைகளை கண்டு அயர்ந்து போகாமல் எதிர்த்து நின்று பிரகாசிப்போம்' என்பதுதான் இந்த வருட மகளிர் தினத்தில் பெண்கள் இந்த உலகத்திற்கு தெரிவிக்கும் செய்தி.

தொகுப்பு : தன்யா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கை அடை....

முன்னெடுத்தனர்.

இதனையடுத்து அணைக்குழுவுடனான பேச்சுக்கள் கடந்த 3ம் திகதி திருகோணமலை மாவட்ட ஆயர் வண. கலாநிதி. கிங்ஸ்லி சுவாம்பிள்ளையின் தலைமையில் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களான வண. யோகேஸ்வரன் அடிகள் மற்றும் மலைமுரசின் ஆசிரியர். "மாயன்" இரா.ஸ்ரீஞானேஸ்வரன் ஆகியோர் முன்னெடுத்தனர்.

அப்பேச்சுக்களில் காணாமற்போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இயலாமையை வலியுறுத்திய சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் தற்போதைய அளவில் ஆணைக்குழு நகருமானால் மேலும் 13 வருடங்கள் இவ்வாணைக்குழு இயங்கினால் மட்டுமே ஏற்கனவே பதியப்பட்டுள்ள 18,000 முறைப்பாடுகளை விசாரணை செய்து முடிக்க முடியும் என்பதையும் வலியுறுத்தினர்.

அத்துடன் மக்கள் இவ்வாணைக்குழுவின் மீது நம்பிக்கையிழந்துள்ளதைத் தெரிவித்ததை அடுத்து ஆணைக்குழுவுடன் இரண்டு உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

அவை முறையே ஆணைக்குழுவிடம் செய்யப்பட்ட 18,000 முறைப்பாடுகளில் தற்போது வரை விசாரித்து முடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் 2000 முறைப்பாடுகள் தொடர்பான இடைக்கால அறிக்கையை இம்மாதத்தினுள் வெளியிடுவது மற்றும் அடுத்து ஆணைக்குழுவின் அமர்வுகளுக்கு முன்னர் சிவில் சமூக அமைப்புகளுடன் கலந்தாலோசிப்பது ஆகியனவையே அவையாகும்.

இவ்விரு முடிவுகளும் மக்கள் போராட்டத்தின் பயன்கள் எனத் தெரிவித்துள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகள் திருகோணமலையில் ஆரம்பித்துள்ள இப் போராட்டமானது தனது இலக்கையெட்டியுள்ளது என்றும் தெரிவித்தனர்.

## முதலமைச்சர் பதவி....

தெரிவிக்கின்றது.

கடந்த 5ம் திகதி மட்டக்களப்பில் கூடிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மட்டக்களப்பு மத்திய குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொதுவான வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவேண்டும் என்று கோரியுள்ளது. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவுசெய்வதற்கான உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் வலிறுத்தியுள்ளது.

கிழக்கு மாகாணசபையில் பலமான ஆட்சியாளராக மாறுவதற்கானதும் முதலமைச்சரை பெறுவதற்கானதும் அதிகாரமுள்ள அமைச்சை பெறுவதற்குமான வாய்ப்புகள் இருந்தும் அதைத் தவறவிட்டுள்ளோம்.

இந்தப் பொறுப்பை இந்தத் தவறை விட்டவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். இனிமேல் இந்த தவறை விட்டுவிடக்கூடாது. இன்றைய சூழ்நிலையில் நாம் பலமாக இருக்கும்போது, முஸ்லிம் காங்கிரஸால் ஏமாற்றப்பட்டுவிட்டோம் எனும் ஐயப்பாடு தமிழ் மக்கள் மத்தியில் இருந்துவருகின்றது.

மாவட்ட ரீதியான பொதுவான வேலைகளை முன்னெடுப்பதற்கும் கிழக்கு மாகாணசபையில் கடந்தகாலத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை தடுத்துநிறுத்தவும் திறமை அடிப்படையிலும் விகிதாசார முறையிலும் நியமனங்களை வழங்கவும் அதிகாரப் பங்கீட்டை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் விகிதாசார அடிப்படையில் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கவும் இன ஐக்கியத்தை உருவாக்குவதற்கும் எமது கட்சி முழுமையான ஒத்துழைப்பு வழங்கும். மேலும், கூட்டமைப்பிலுள்ள ஒருகட்சி கூட்டு முடிவை எடுக்காமல் தனித்து செயற்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள தவறுகளை சுட்டிக்காட்டியமைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் ஈபிஆர்எல்எவ் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மீது குறித்த ஒரு கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் சுமத்தப்பட்ட கண்டனத் தீர்மானமானது இன்றைய சூழலில் எமக்கு மனவேதனை அளிக்கின்றது. கிழக்கு மாகாண ஆட்சியமைப்பு தொடர்பாகவும் அமைச்சுப் பதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட முறைமை தொடர்பாகவும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சி ஜனநாயக வரன்முறைகளுக்கு முரணாக நடந்துகொண்டமை தொடர்பாக நாம் மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

இராஜதந்திர நடவடிக்கைகளையும் தமிழர்களின் உரிமைகள், அபிலாசைகள், இயல்பு வாழ்க்கை, புனர்வாழ்வு நடவடிக்கைகள், அதிகாரப்பங்கீடு முதலான கருத் திட்டங்களுக்கும் உணர்வுபூர்வமாகவும் இதயசுத்தியோடும் மனஉறுதியோடும் நாம் எமது வேலைத்திட்டங்களை காலத்தின் தேவை அறிந்து கூட்டுத் தலைமைகளால் மட்டும் உருவாக்கப்படுகின்ற வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம்.

இதுவே இன்று நம்முன்னுள்ள கடமையாகும். இந்தவகையில் தமிழ்த் தேசியத்தின் இலட்சியத்தை என்றுமே வெல்லப்பட முடியாத வரலாற்றுச் சூழ்நிலையை ஏற்படுத்திவிடக்கூடாது. இதன் காரணமாக தமிழ்த் தேசியத்தை பிளவுபடுத்தி சின்னாபின்னமாக்கித் தமிழ்த் தேசியத்தின் சனநாயக அரசியல் இருப்பையும் உரிமையையும் குழிதோண்டிப் புதைத்துவிடும் செயல் நிலைவாத நிலைப்பாட்டையே இந்நிலைமைகள் தோற்றுவிக்கும். தமிழ்த் தேசியத்தின் வலிமையை உலகுக்கு எடுத்துச் சொல்ல தமிழ்த் தேசியக் கட்களின் ஐக்கியம் தொடர்ந்து பேணப்பட, உட்கட்சி முரண்பாடுகளையும் கருத்து மோதல்களையும் கூடுமானவரை தவிர்த்துக்கொள்ள, தமிழ் மக்கள் கட்சி ரீதியாக பிரிந்துநின்று தமிழ்ப் பிரதிநிதித்துவங்களை கிழக்கு மண்ணில் இழக்காது இருக்க கூட்டுத்தலைமை பொதுவான வேலைத்திட்டத்தை வகுத்து மாவட்ட ரீதியாக வெளியிலுள்ள நல்ல சக்திகளை இனங்கண்டு அவர்களை உள்வாங்கி கிராம ரீதியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுவான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாக அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படவேண்டும் என அக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியான ஈபிஆர்எல்எவ் மட்டக்களப்பு மாவட்ட மத்திய குழு தீர்மானித்துள்ளது - என அதன் அறிக்கை தெரிவிக்கின்றது.

## காணாமலாக்கப்....

முதலமைச்சர் ஆகியோரைச் சந்தித்து மகஜர் கையளித்தனர். அவர்களிடம் உரையாடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த கால போரில் வடக்கு கிழக்கில் கடத்தப்பட்டு காணாமல் போன பலர் திருகோணமலை, அம்பாந்தோட்டை, மஹரகம போன்ற நாட்டிலுள்ள பல இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அங்கு சப்பாத்துக்களை துடைப்பதற்கும் மேலும் பல இதரவேலைகளையும் செய்வதற்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்ற இரகசிய தகவல் எமக்கு கிடைத்துள்ளது.

விடயம் தொடர்பில் தனிப்பட்ட வகையில் ஜனாதிபதிக்கும் ஏனைய உயர் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளதுடன் விசாரணை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளோம்.

அத்துடன் சிறைகளிலும் புனர்வாழ்வு முகாம்களில் உள்ளவர்களையும் எதிர்வரும் வெசாக் தினத்தில் விடுதலை செய்யுமாறும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளோம். எனவே அனைவரும் நம்பிக்கையுடன் இருப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐரோப்பிய...

36 மில்லியன் ரூபாய்களை அதிபாதிப்பிற்குள்ளான மக்களக்கு வழங்கவுள்ளது. மட்டு-அம்பாறையிலுள்ள 7200 குடும்பங்கள் இந்த உதவியினைப் பெறத் தகுதியுடையவர்களாக உள்ளனர்.

வெள்ளத்தினால் தமது நாளாந்த வருமானத்தை இழந்துள்ளவர்களுக்கு அவர்களின் நாளாந்தச் செலவுகளைக் கவனிக்கும் வகையில் காசுக் கொடுப்பனவை நிகழ்த்தவுள்ளதாகத் தெரியவருகின்றது.

## மீனவர்...

எதிர்த்து திருகோணமலை மாவட்ட மீன்பிடிச்சங்கங்கள் 42 இணைந்து நேற்று (6) நடாத்திய ஆர்ப்பாட்டத்தை அடுத்தே இந்நிலை தோன்றியது.

இதன்போது திருகோணமலை மாவட்டத்திலுள்ள மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் அரச மட்ட அதிகாரிகளுக்கும் இடையிலான கூட்டம் காலை. 9.30 மணியிலிருந்து மதியம் வரை இடம்பெற்றது. கூட்டத்தில் காணி,காணி அபிவிருத்தி அமைச்சர குணவர்தன, கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி, அரசாங்க அதிபர் புஸ்பகுமார மற்றும், மாகாணசபை உருப்பினர்களான ஜெனார்த்தனன், அன்வர், இம்ரான் மஹ்ரூப் மற்றும் குச்சவெளி பிரதேச செயளாளர் தயாபரன் ஆகியோர் பங்கேற்றனர்.

வெளியே கூட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டதைத் தொடர்ந்துதடிஅடி மற்றும் கண்ணீர்புகை தாக்குதல் நடாத்துவதற்கும் தயாரான நிலையில் இருந்ததோடு நகரிலின் போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டது.

காணி அமைச்சர் உடனடியாக காவல்துறை உயர் அதிகாரிகளுடன் உரையாடியதுடன் மீனவருக்கு அவர்களது கோரிக்கைகளுக்கான தீர்வானது உடனடியாக எடுக்கப்படும் என்று வழங்கப்பட்ட உறுதியை அடுத்து மீனவர்கள் அவ்விடத்தைவிட்டு கலைந்து சென்றுள்ளனர்.

## அரசியல் தலைவர்கள்...

தெரிவித்தார்.

"வடமாகாண முதலமைச்சர் ஆதரங்கள் எதுவும் இல்லாமல் அவ்வாறு சொல்ல மாட்டார். அவ்வாறாயின் நாங்கள் ஏன் வெசாக் போயாதினம் வரை காத்திருக்க வேண்டும். இன்றே தமிழ்த் தலைமைகள் அவர்களை விடுவிக்கும் நடவடிக்கைகளை ஏன் எடுக்கக்கூடாது என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

எமது சொந்தங்களை விடுவிக்க அரசிற்கொரு காலக்கெடு விதிக்க வேண்டும் என்றும் அவ்வாறான நடவடிக்கைகள் ஊடாகவே அரசாங்கம் அவர்களை விடுவிக்க நிர்ப்பந்தத்தை

## ஈ-சிட்டிசன்......

குடும்பமொன்றுக்கு ஒரு படிவம் கிராமசேவையாளரால் வழங்கப்படுவதாகவும் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் அப்படிவத்தினை படப்பிரதி செய்து நிரப்பித்தர வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

அப்படிவமொன்றை பிரதி செய்வதற்கு ரூபா 10 தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ள வறியவர்கள் குடும்பமொன்றில் ஏழுபேர் இருப்பின் எழுபது ரூபாய்களைச் செலவு செய்வது தமக்கு இயலாத காரியம் என்றும் தெரிவித்துள்ளனர்.

## இரண்டு வருடங்களாக....

அவர்கள் தெரிவித்தனர்.

கடைசியாக 2013ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் திகதி கூட்டப்பட்ட ஊழியர் நலன்புரிச்சங்கக் கூட்டத்திற்குப் பின்னர் இன்று வரை எவ்வித கூட்டங்களும் கூட்டப்படாமலயே இரண்டு தடவைகள் சுற்றுலாக்களும் ஒரு தடவை வருடாந்த ஒன்று கூடலும் நடத்தப் பட்டுள்ளதாகவும் அவற்றின் வரவு செலவு விபரங்கள் எவையும் தற்போதுவரை அலுவலர்களின் பார்வைக்குச் சமர்ப்பிக்கப் படவில்லை என்றும் தெரிகின்றது.

நலன்புரிச் சங்கத்தின் தலைவராகப் பிரதேசச் செயலாளரே பணியாற்றுவதால் வேலைப்பழு காரணமாகக் கூட்டத்தைக் கூட்ட முடியாதிருப்பதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized By Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஆன்மீக சூழல் அற்றுப் போகும் முஸ்லீம் வீடுகள்

கடந்தவாற தொடர்ச்சி .. ..

வீடுகள் அமைதிக்குரியதாகவும் நிம்மதிக் குரியதா அல்லாஹ்வை நினைவுபடுத்துவதற்கோ -திக்ர் செய்வதற்கோ- குர்ஆன் ஓதுவதற்கோ ஐந்து நேரம் தொழுவதற்கோ நேரமில்லை. அதற்கான எண்ணமுமில்லை.

"கேபிள் டீவி மூலமும், டிஷ் மூலமும் நூற்றுக்கணக்கான "செனல்கள்" காண்பிக்கப்படு வருவதால் ஒவ்வொரு செனல்களிலும் எந்தெந்த நேரங்களில் என்னவிதமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் என்பதை மனனமிட்டுவைத்திருக்கிறார்கள் மூலம் வெள்வேறு விதமான நிகழ்ச்சிகளை பார்த்து வணக்கத்திற்கான நேரத்தை தொலைத்து விடுகிறார்கள்.

பெண்களும் சிறுவர்களும் தங்களுடைய அதிகமான நேரங்களை இதில் செலவிடுகின்றனர். குறிப்பாக வயது வந்த பெண்பிள்ளைககள் அரட்டையடிக்கிறார்கள். பிள்ளைகள் படிப்பில் கோட்டை விடுவதற்கும் கணவன் மனைவிக்கிடையில் விரிசல்கள் ஏற்படுவதற்கும் இதுவே பிரதான காரணமாகும். திசைமாறும் பயணங்களுக்கு இசைவான வழிகளை அமைத்துக் கொள்கிறார்கள்.

குர்ஆன் மனனம் செய்யப்பட வேண்டிய உள்ளங்கள் ஷைத்தானின் கீதங்களை பதிவு செய்கின்றன. அல்லாஹ்வுடைய வேத வசனங்கள் ஓதப்பட வேண்டிய உதடுகள் ஷைத்தானின் ராகங்களை இசைத்துக் கொண்டிருக்கின்றன. ஆன்மீகத்தை ஒதுக்கிவிட்டு அசிங்கங்களை அரங்கேற்றுகிறார்கள்.

"உங்கள் வீடுகளை மண்ணறைகளாக ஆக்கிவிடாதீர்கள். நிச்சயமாக ஸூறதுல் பகரா ஓதப்படும் வீட்டை விட்டு ஷைத்தான் விரண்டோடுகிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழி), நூல்: முஸ்லிம்)

குர்ஆன் ஓதப்படும் வீட்டிலிருந்து ஷைத்தான் விரண்டோடுகிறான். அந்த வீட்டாரிடத்தில் எந்த விதமான தீமையை தூண்டவும் செய்ய வைக்கவும் முடியாமல் போகிறது.

தொடரும் .. .. – இம்தியாஸ் ஸலபி –




## தயிர் சிக்கன்



**தேவையான பொருட்கள்**

சிக்கன் - ¼ கிலோ, தயிர் - ½ கப், எலுமிச்சை சாறு - 1 மே.கரண்டி, எண்ணெய் - 1 மே.கரண்டி, மஞ்சள் தூள் - ½ தேகரண்டி, உப்பு - தேவையான அளவு, பூண்டு - 6 பெரிய பல், இஞ்சி - 1 துண்டு, மிளகு – 10, சோம்பு - 1 மே.கரண்டி

**செய்முறை**

சிக்கனை சிறிய துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும். பின் தேவையான பொருட்களை அரைத்துக்கொள்ளவும். சிக்கனுடன் அரைத்த விழுது, தயிர், தூள் வகைகள் சேர்த்து நன்றாக கலக்கி 5 நிமிடங்கள் ஊறவிடவும்.

தாச்சியில் எண்ணெய் ஊற்றி ஊறவைத்த சிக்கனை சுமார் 10 - 15 நிமிடங்களுக்கு நன்றாக வெந்து தண்ணீர் வற்றும் வரை வேகவிடவும். கடைசியில் எலுமிச்சை சாறு சேர்த்து மேலும் 1-2 நிமிடங்கள் வேகவிடவும்.

கவனிக்கவேண்டியவை:

தயிரின் புளிப்பின் அளவினை பொருத்து எலுமிச்சை சாறு சேர்த்துக்கொள்ளவும். புளிப்பான தயிர் என்றால் எலுமிச்சை சாறு தேவையில்லை.

## மூக்கினழகு முகத்தில் தெரியும்



பெண்களை பார்த்தால் மூக்கும் முழியுமாக நல்ல லட்சணமாக இருக்கிறார் என்று சொல்வார்கள். முகத்திற்கு அழகை கொடுக்கும் மூக்கு, எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. மூக்கின் பராமரிப்பு மிகவும் எளிது, ரெகுலரான பேஷியல் கூட போதும். ஒ்வொரு நாள் காலையிலும் மூக்கின் இரு ஓரங்களிலும் கை விரல்களினால் படத்தில் உள்ளது போல் மேலும் கீழுமாக மசாஜ் செய்து வர மூக்கு கூர்மையாக மாறும்.

அழகு குறிப்பு



மூக்கில் பிளாக் ஹெட்ஸ் உள்ளவர்கள், விரல்களால் மூக்கின் பக்க வாட்டிலும், நுனியிலும் அதிக நேரம் மசாஜ் செய்ய வேண்டும். பிறகு ஒரு பாத்திரத்தில் கொதித்த நீரை ஊற்றி, நன்றாக வேர்க்கும்வரை ஆவி பிடிக்க வேண்டும். இப்போது வெளிச்சமான இடத்தில் அமர்ந்து, கண்ணாடியைப் பார்த்து பிளாக் ஹெட்ஸ் இருக்கும் இடங்களில் பிளாக் ஹெட் ரிமூவரால் மெதுவாக அழுத்த வேண்டும். பின்னர் குளிர்ந்த நீரில் மூக்கினை நன்றாக கழுவினால் போதும்.



சப்பையான மூக்கு உள்ளவர்கள் முகத்திற்கு பவுண்டேஷன் மற்றும் பவுடர் அப்ளை செய்த பிறகு, முக நிறத்தைவிட கொஞ்சம் ஒரு ஷேடு குறைவான டார்க் நிறத்தில் உள்ள ரூஜை மூக்கின் இரு ஓரங்களிலும், அதாவது இரு புருவத்தின் ஆரம்பங்களிலிருந்தும் மூக்கு அடிவரை, நேராக தடவ வேண்டும். இப்போது நடுபக்கம் மட்டும் லைட்டாகவும், ஓரங்கள் பளிச்சென்று தெரியாதது போலவும் இருக்கும்.

ஒரு பக்கம் மட்டும் சப்பையாக இருப்பவர்களும் மேல் கூறியது போல் செய்யலாம்.



# மருத்துவம்

## தினமும் காலையில் – நீர் அருந்துதல்!!

தினமும் காலையில் எழுந்தவுடன் வெறும் வயிற்றில் தண்ணீர் குடிப்பது நல்லது என பலரும் சொல்லக் கேள்விப்பட்டிருப்போம். தண்ணீர் குடிப்பதால் எண்ணற்ற நோய்களில் இருந்து நம்மை பாதுகாக்கலாம். தினமும் தண்ணீர் குடிப்பதால் வயிறு சுத்தமாவதுடன், உடலில் உள்ள நச்சுக்கள் சிறுநீர், மலம் மூலம் வெளியேறிவிடும்.



பெரும்பாலான நபர்களுக்கு உடலில் நீர்ச்சத்து குறையும் போது தான் தலைவலி ஏற்படுகிறது, அத்தகைய நபர்கள் தினமும் காலையில் தண்ணீர் குடித்து வருவது நல்லது.

குறிப்பாக காலையில் அவசர அவசரமாக வேலைக்கு கிளம்பும் நபர்கள், சாப்பிடாமல் செல்வது வழமையாகி விட்டது. இவர்கள் தினமும் தண்ணீர் குடிக்கும் போது பசி எடுப்பதுடன் அல்சர் தொல்லையிலிருந்து தப்பிக்கலாம். வெதுவெதுப்பான தண்ணீரை குடித்தால் உடலின் மெட்டாபாலிசம் அதிகரிப்பதுடன், உண்ணும் உணவு விரைவில் செரிமானமாகிவிடும்.

மேலும் இரத்த சிவப்பணுக்களின் வளர்ச்சியானது அதிகரித்து, இரத்தமானது அதிகப்படியான ஆக்சிஜனை கொண்டிருப்பதால் உடலானது எனர்ஜியுடன் இருக்கும்.

எடையை குறைக்க நினைப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த வரப்பிரசாதம் என்றே சொல்லலாம். முகமும் பொலிவுடன் இருப்பதுடன், பருக்கள் வருவது குறைந்துவிடும்.

## தூதுவளை மற்றும் கொத்தாவரங்காய்

**தூதுளை**

தூதுவளை இலையைப் பிழிந்து எடுத்து சாற்றை 1 அல்லது 2 துளி காதில் விட்டால், காதுவலி மற்றும் காதில் சீழ் வடிதல் ஆகியவை குணமடையும்.

இந்த இலையை நெய்யில் வதக்கி துவையலாகவோ அல்லது குழம்பாகக் கடைந்து சாப்பிட்டால், நெஞ்சில் கட்டிருக்கும் கபம் நீக்கி உடல் பலமடையும்.

இதன் இலைச் சாற்றை சம அளவு நெய்யில் காய்ச்சிக் காலை மாலை ஒரு தேக்கரண்டி சாப்பிட்டு வந்தால், ஆஸ்துமா மூச்சுத் திணறலில் உள்ளிட்ட நோய்கள் குணமடையும்.

தூதுவளை கீரையை சமைத்து சாப்பிட்டால், பற்களை வலுவடைவதுடன் பித்த நோயும் குணமாகும்.

தூதுவளை இலையை அரைத்து தண்ணீருடன் சேர்த்து அருந்தி வந்தால் இருமல், இரைப்பு நோய் நெருக்காமல் இருக்கும்.

**கொத்தாவரங்காய்**



கர்ப்பிணி பெண்கள் இதை உண்பதன் மூலம் அவர்களது குழந்தை கருவில் நல்ல ஆரோக்கியத்துடன் உருவாகிறது. பிறப்பினால் ஏற்படும் பிரச்சனைகளை இதன் மருத்துவ குணம் குறைக்கிறது.

கலோரி அளவுகளில் மிக குறைந்த உணவாக இருந்தாலும், வைட்டமின்களையும் மற்றும் தாதுக்களையும் அதிகமாக கொண்டிருக்கும் உணவு என்பதால் எடையை குறைக்க விரும்புபவர்கள் இதை ஒரு உணவாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : சமூக நிகழ்வுகளில் போக்கு உணர்ந்து செயல்படுவீர்கள். பணம், புகழ் திருப்திகர அளவில் கிடைக்கும்.



**ரிஷபம்** : நன்மை அடைவதில் லட்சிய நோக்கம் மிகுந்திருக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். வீடு, வாகன அபிவிருத்தி உண்டு.



**மிதுனம்** : வார்த்தையில் உண்மையின் ஒளி பிரகாசிக்கும். சோதனைகளை கடந்து, வாழ்வில் சில நன்மைகளை பெறுவீர்கள்.



**கடகம்** : தைரிய மனதுடன் செயல்படுவதால், வெற்றியின் பாதையில் குறுக்கீடு விலகும். உடன் பிறந்தவர் உதவுவர்.



**சிம்மம்** : உங்கள் சொல்லுக்கு வரவேற்பு உள்ள இடங்களில் மட்டும் பேசலாம். செயல் நிறைவேற முயற்சி வேண்டும்.



**கன்னி** :எதிர்ப்பு விலகிநன்மை கிடைக்கும். சமூகப் பணி வளரும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும்.



**துலாம்** : புதிய வாய்ப்புகளை ஆர்வமுடன் பயன் படுத்துவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி நிறைந் திருக்கும்



**விருச்சிகம்** : நயவஞ்சகமாக பேசுபவரிடம் இருந்து விலகுவீர்கள். வாழ்வில் முன்னேற்றம் பெற, இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும்.



**தனுசு** : மனதில் இரக்க குணம் வளரும். புதியவர் அன்பு பாராட்டுவர். இளைய சகோதரருக்கு உதவுவீர்கள். வீடு, வாகன பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும்.



**மகரம்** : முக்கியமான செயல் நிறைவேறும். ஆன்மிக நம்பிக்கை மனதில் வளரும். உறவினர்களின் தேவைக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும்.



**கும்பம்** :உடன் பிறந்தவர்களின் கூடுதல் அன்பு கிடைக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம்.



**மீனம்** : பிறரது ஆடம்பர வாழ்வு முறையை பார்த்து, தானும் செயல்பட எண்ணம் ஏற்படும். வார்த்தையின் வசீகரம், புதிய நட்பை பெற்றுத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## உள்ளூர் விளையாட்டு செய்திகள்

### ஆரம்ப வகுப்பு மாணவர்களின் இல்ல விளையாட்டுப் போட்டி

இ.கி.ச.ஸ்ரீ.கோணேஸ்வரா இந்துக்கல்லூரி பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் திரு.எஸ்.பத்மசீலன் அவர்களின் தலைமையில் கடந்த 04.03.2015 அன்று கல்லூரியின் மைதானத்தில் திரு.சி.சசிகுமார் ஆசிரியர் அவர்களின் வழிநடத்தலின் கீழ் நடைபெற்றது. இப்போட்டியின் போது கொடிகள் உயர்த்தப்பட்டு தேசியகீதம் சிங்கள மொழியில் இசைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நான்கு இல்லங்களைக் கொண்ட இப்போட்டியின் போது 25.5 புள்ளிகளுடன் சிவானந்தா இல்லம் சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது. அதைத் தொடர்ந்து இரண்டாம் இடத்தை 21 புள்ளிகளுடன் விபுலானந்தா இல்லமும் முறையே மூன்றாம் நான்காம் இடங்களை விவேகானந்தா மற்றும் இராமகிருஷ்ணா இல்லங்களும் பெற்றுக் கொண்டன.



இப்போட்டியில் பிரதம விருந்தினராக நகராட்சிமன்றத் தலைவர் திரு.கே.செல்வராஜா அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

கதிரவன்







### வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி

24.02.2015 அன்று கும்புறுபிட்டி மெதடிஸ்ட் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் திரு.வி.இராஜேந்திரம் அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. பாரதி, வள்ளுவன், கம்பன் எனும் மூன்று இல்லங்களுக்கிடையே பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகளும், அணிவகுப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இப்போட்டியின் போது திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.என்.விஜேந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தார். இப்போட்டியில் வள்ளுவன் அணி முதலாம் இடத்தை தட்டிச் சென்று சம்பியன் ஆனது. அனைத்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்களும் கேடயங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.











### அணிக்குத் தெரிவு

இலங்கை பல்கலைக்கழகங்களின், இணைந்த ஹொக்கி அணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வீராங்களை செல்வி. சுபோதினி விதானகே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் பணிப்பாளர் கே.கணேசநாதன், கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார். இந்த வீராங்கனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### நாற்காடு நாமகள் வெற்றி

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட மண்முனை மேற்கு (வவுணதீவு)கல்வி கோட்டத்திற்குட்பட்ட கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வில் நாவற்காடு நாமகள் வித்தியாலயம் இந்த ஆண்டுக்கான சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

29 பாடசாலைகள் இந்த விளையாட்டுப்போட்டி நிகழ்வில் கலந்துகொண்டதுடன் முதலாம் இடத்தினை நாவற்காடு நாமகள் வித்தியாலயமும் இரண்டாம் இடத்தினை மகிழவட்டுவான் மகா வித்தியாலயமும் மூன்றாம் இடத்தினை கன்னன்குடா மகா வித்தியாலயமும் பெற்றுகொண்டது.

### தகாத வார்த்தை பேசியதால் சிக்கலில் கோஹ்லி



பயிற்சியின் போது 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையாளரை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார் கோஹ்லி. 'தன்னையும், தோழி அனுஷ்காவையும் பற்றி சர்சைக்குரிய கட்டுரை எழுதியது அந்த பத்திரிகையின் வேறு நிருபர்' என தெரியவந்ததும், மற்றொருவர் மூலம் மன்னிப்பு கேட்டார்.

இருப்பினும் மன்னிப்பை ஏற்காத 'இந்துஸ்தான் டைம்ஸ்' விளையாட்டு செய்தி ஆசிரியர் சுக்வந்த் பாஸ்ரா, கோஹ்லி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பி.சி.சி.ஐ, மற்றும் ஐ.சி.சி.யிடம் புகார் தெரிவித்துள்ளார். இருப்பினும் கோஹ்லி தவறை ஏற்றுக் கொண்டதால் பிரச்சினையை சுமூகமாக டிவுக்குக் கொண்டுள்ளது நிர்வாகம்.

### மைதானத்தில் சுருண்டு விழுந்த வீரர்

இங்கிலீஸ் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியின் போது மைதானத்தில் மயங்கி விழுந்த வீரரினால் பரபரப்பு ஏற்பட்டது. கால்பந்து வீரர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் போது திடீரென்று இதயம் செயலிழந்து போவதால் மைதானத்தில் சுருண்டு விழுவது வாடிக்கையாகி வருகிறது.

இந்த போட்டியின் போது ஸ்வான்சீ அணியை சேர்ந்த பிரான்ஸ் ஸ்டிரைக்கர் பெ.ஃப்டிம்பி கோமிஸ் என்பவரே, இதய நோயினால் பாதிக்கப்பட்டு மைதானத்தில் சுருண்டு விழுந்தார்.

### திமுது = குசல்



இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் திமுது கருணாரத்ன 05.02இடம்பெற்ற பயிற்சியின் போது காயத்திற்கு உள்ளாகியுள்ளார். இந்த நிலையில் திமுது கருணாரத்னவிற்கு பதிலான குசல் ஜனித் பெரேராவை அவுஸ்ரேலியாவிற்கு அனுப்ப இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

### உலக கிண்ண புள்ளி விபரம்

| | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| ஏ பிரிவு | நியூசிலாந்து | இலங்கை | அவுஸ்திரேலியா |
| பீ பிரிவு | இந்தியா | தென்னாபிரிக்கா | பாக்கிஸ்தான் |



### பட ஸ்பெஷல்

இந்திய கிரிக்கெட் அணியின் சாதனை வீரராக இருக்கும் சச்சின் தன்னை பற்றிய படத்திற்கு பெயர் வைக்கும் பொறுப்பை தனது உயிருக்கு உயிரான ரசிகர்களிடமே ஒப்படைத்திருக்கிறார். படத்திற்கு பொருத்த மான தலைப்பை தெரிவிப்பவர்களுக்கு ஸ்பெஷலானது காத்திருக்கிறது. 'உங்களிடம் இருந்து தலைப்பை கேட்க காத்துக் கொண்டிருக்கிறேன்' என்று டிவிட் செய்துள்ளார்.

### காயப்பட்டமைக்கு க்ளவுஸ் பரிசு

04.03.2015 அன்று இடம்பெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணியுடன் ஆப்கானிஸ்தான் அணி மோதியது. இந்த போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் டேவிட் வார்னர் 178 ஓட்டங்கள் அடித்தார். இதில் டேவிட் வார்னர் அடித்த சிக்ஸர் ஒன்று போட்டியை பார்த்துக் கொண்டிருந்த ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த சகாப்புதீன் என்ற சிறுவனை தாக்கியது. இதில் அந்த சிறுவனின் தோள் பட்டையில் காயம் ஏற்பட்டது. தான் அடித்த சிக்ஸர் பந்தால் தாக்கப்பட்ட அச்சிறுவனுக்கு அவுஸ்திரேலிய வீரர் டேவிட் வார்னர் தனது க்ளவுசில் கையொப்பமிட்டு பரிசாக வழங்கியுள்ளார்.



### ஹிந்தி நடிகையுடன் திருமணம்

இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் தனது நீண்டநாள் காதலியான நடிகை கீதா பஸ்ராவை இம்மாத இறுதியில் திருமணம் செய்துகொள்ளவுள்ளார். கீதா பஸ்ரா சில ஹிந்தி மற்றும் பஞ்சாபி திரைப்படங்களில் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



### எச்சில் உமிழும் விளையாட்டு

இங்கிலீஸ் பிரிமியர் லீக் கால்பந்து போட்டியின் போது மான்செஸ்டர் யுனைடெட் அணி வீரர் ஈவான்ஸ் முகத்தில் எச்சில் உமிழ்ந்த நியூகேசில் யுனைடெட் அணி வீரருக்கு 7 போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இங்கிலீஸ் பிரீமியர் லீக்கில் கடந்த புதன்கிழமையன்று நியூகேசில் நகரில் உள்ள ஜேம்ஸ் பார்க் மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணியுடன் நியூகேசில் யுனைடெட் அணி மோதியது. முதல் பாதி ஆட்டம் முடியும் தறுவாயில் மான்செஸ்டர் யுனைடெட் வீரர் ஈவான்ஸ் நியூகேசில் வீரர் பெப்பிஸ் சிஸ்சேயிடம் இருந்து பந்தை கைப்பற்ற முயற்சித்தார். அப்போது இரு வீரர்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு ஒருவர் மீது ஒருவர் எச்சில் உமிழ்ந்து கொண்டனர். தொடர்ந்து பெப்பிஸ் சிஸ்சே சிவப்பு அட்டை காட்டப்பட்டு களத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளை மீட்டுத் தாருங்கள்



சிகிரியாவின் ஓவியங்களில் தனது பெயரைப் பதித்தற்காக இரண்டு வருட சிறைத் தண்டனையைப் பெற்றுக்கொண்ட தனது மகளை மீட்டுத்தருமாறு அவரது வறிய தாய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு சித்தாண்டியைச் சேர்ந்த உதயா தனது பெயரைச் சிற்பத்தில் எழுதியதால் சிறைத்தண்டனைக்கு உள்ளாகியுள்ளார்.

கடந்த மாசிமாதம் நண்பிகளுடன் சுற்றுலாசென்ற அவர் இக்குற்றச் செயலைப் புரிந்ததாக தம்புள்ளை நீதிமற்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தனது மகள் தெரியாமல் செய்த தவறு என்று அழும் அவரது வறிய தாயார் தனது மகளின் வருமானத்திலேயே தனது வாழ்வையும் ஓட்டிவருவதாகத் தெரிவித்தார்.

ஏற்கனவே இதுபோன்று எழுதிய சிலரை ஒரு சில தினங்களில் தண்டப்பணம் மாத்திரம் அறவிட்டு விடுதலை செய்துள்ளார்கள் என அறிகின்றேன் எனவே அது போன்று எனது மகளையும் விடுதலை செய்வதற்கு அரசாங்கமும், எங்களுடைய அரசியல்வாதிகளும் எப்படியாவது உதவி செய்ய வேண்டும்.

எங்களுக்கு உதவி செய்வதற்கு யாருமில்லை. நாங்கள் எனது மகளை மீட்பதற்கு கடும் கஷ்டப்பட்டோம்.

சிங்களம் தெரியாததால் எங்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை அவர்கள் கூறியது கூட சரியாக புரியவில்லை கடைசியில் எனது மகளுக்கு இரண்டு வருட சிறைத்தண்டனை விதித்துள்ளார்கள்

எனது மகளை எப்படியாவது மீட்டுத்தாருங்கள் அவள் தவறுதலாக எழுதிவிட்டால் அவளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதற்கு உதவி செய்யுங்கள்.

நான் ஒரு நோயாளி எனது மகள் விரைவில் வீடு திரும்பவில்லை என்றால் நான் சாவதைத் தவிர வேறு வழியில்லை எனவே எப்படியாவது எனது மகளை மீட்டுத்தாருங்கள் என உங்கள் எல்லோரிடமும் கெஞ்சி மன்றாடி கேட்கின்றேன் என அவர் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார். (புதிய தமிழர்கள்.கொம்)

## ஈ-சிட்டிசன் படிவங்கள் தமிழில் இல்லை

(அச்சுதன்)

ஐக்கியநாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டமும் (யுஎன்டிபி) இலங்கை அரசாங்கமும் இணைந்து திருகோணமலையில் வழங்கி வருகின்ற தகவல் திரட்டுப் படிவங்கள் தமிழ்மொழியில் வழங்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

ஆங்கிலத்திலும் சிங்கள மொழியிலும் வழங்கப்படுகின்ற படிவங்களால் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர்.

உள்ளகப் பொருளாதார அபிவிருத்திக்கான நடத்தை திட்டம் என்ற தலைப்புடன் வழங்கப்படும் ஈ-சிட்டிசன் படிவங்கள் கிராம சேவையாளர்கள் ஊடாக வழங்கப்படுவதாகவும் அவற்றில் தமிழ் படிவங்கள் வழங்கப் படவில்லை என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் 17

## இரண்டு வருடங்களாக கூட்டப்படாத பிரதேசச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்

பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலகத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் கூட்டங்கள் எவையும் கடந்த 26 மாதங்களாகக் கூட்டப் படவில்லை என அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

மாதாந்தம் சுமார் முப்பதாயிரம் ரூபாய்களுக்கு மேல் அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட்டாலும் அதற்கான கணக்குகள் கடந்த இரண்டு வருடங்களாகக் காட்டப் படாமல் இருப்பதாகவும் 17

## கிழக்கில் அரசியல் உறுதியாகிவிட்டது

### கிழக்கு முதல்வர் நஸீர் அஹமட்

கிழக்கு மாகாணத்தில் நிலவிய அரசியல் ஸ்திரமற்ற தன்மை என்ற இருண்டகாலம் தற்போது முடிவடைந்துள்ளது.

மாகாணத்திலுள்ள அனைத்து இனங்களும் அபிவிருத்தியில் கவனம் செலுத்துகின்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளனர் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

சனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கிழக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே, அவர் இவ்வாறு கூறினார்.

## கடத்தல் மாடு வெட்டியவரை கறுப்புப் பட்டியலில் நகர சபை சேர்க்க முடியும்

கன்னியா பிரதேசத்தில் இருந்து கடத்தப்பட்டு வெட்டப்பட்ட மாடுகள் விவகாரம் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்க வேண்டிய திணைக்களங்கள் இவற்றைப் பற்றி அலட்டிக்கொள்ளாத நிலையில் திருகோணமலை நகரசபையும் அமைதி காப்பதாகத் தெரிகின்றது.

கன்னியாவில் மீள்குடியேறி கடும் வதைகளை எதிர்கொண்டு தமது வாழ்வாதாரத்தைப் பெருக்கி வரும் தமிழ் மக்களுக்கு இவ்வாறானதொரு நிலை நடைபெற்றுள்ள போது அவ்விடயம் தொடர்பாக தமிழர்களால் தேர்வு செய்யப்பட்ட நகரசபை அமைதி காப்பது ஏன்? என கன்னியா மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை அவ்வாறு கடத்தல் மாடுகளை வெட்டியவரை நகரசபையினால் கறுப்புப் பட்டியலில் சேர்த்து அவ்வாறு மாடு வெட்டும் அனுமதியை இரத்து செய்ய முடியும் எனத் தெரிகின்றது.




## மாற்று முதலமைச்சராக விமலவீர திசாநாயக்க??

கிழக்கு மாகாண ஆட்சியானது தளம்பல் நிலையில் உள்ளதை அடுத்து மாற்று முதலமைச்சராக முன்னாள் கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்கவை தலைமையாகக் கொண்டு அதிருப்திக் குழுவினர் ஆட்பலம் திரட்டும் முயற்சியில் ஈடுபடுவதாகத் தெரியவந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரின் ஆதரவுடன் ஆரம்பத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சிமைத்த போது முஸ்லிம் காங்கிரஸின் மாகாணசபைக் குழுத்தலைவர் ஜமீலுக்கு முதலமைச்சர் பதவியை வழங்காது நஸீர் அஹமட்டிற்கு முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸ் வழங்கியவுடனேயே உட்கட்சிப் பூசல்கள் ஆரம்பமாகியிருந்தன.

அதனையடுத்து திடீரென முன்னாள் மாகாண சபைத் தவிசாளர் ஆரியவதி கல்வி அமைச்சராகச் சத்தியப் பிரமாணம் செய்த போது அதனை ஏற்றுக்கொள்ளாத ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நான்கு உறுப்பினர்கள் தமது ஆதரவை மு.காவிற்கு விலக்கிக் கொண்டதை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்த மு.கா இரண்டு அமைச்சுப் பதவிகளை த.தே.கூ வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்தே அதிருப்தியாளர் குழு விமலவீர திசாநாயக்கவை மாற்று முதலமைச்சராக்க கொண்டு நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக நம்பத்தகு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்களான விமலவீர திஸாநாயக்க, டப்ளியு.டி.எச் வீரசிங்க, ஜயந்த விஜேசேகர, டி.எம்.ஜயசேனவும் தேசிய காங்கிரஸை சேர்ந்த எம்.எஸ் உதுமாலெப்பை மற்றும் எம்.எல்.எம். ஆமீர் லெப்பை ஆகியோரே ஆதரவை விலக்கிக் கொண்டவர்களாவர்.

## இந்துக் கல்லூரியில் சிங்களத்தில் தேசிய கீதம்

திருகோணமலை இ.கி.ச ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் வருடாந்த ஆரம்பப்பிரிவு விளையாட்டுப் போட்டியில் தேசிய கீதம் சிங்களத்தில் இசைக்கப் பட்டுள்ளது. கடந்த 04.03.2015 அன்று நடந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளின் போதே இச்சரித்திரத் தவறு நிழ்ந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உரியவர்களிடம் விசாரித்த போது எதிர்பாராதவிதமாக அத்தவறு நிகழ்துவிட்டதாகத் தெரிவித்தனர். இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக நகரசபை முதல்வர் கலந்து சிறப்பித்திருந்தார்.

## மகளிர் தினம்

மார்ச் 8ம் திகதி மகளிர் தினத்தை முன்னிட்டு பட்டித்தடல் இடைத்தங்கல் முகாமில் மூதூர் இந்துக் குருமார் சங்கத்தின் தலைமையில் விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அன்றைய தினம் நலன் விரும்பிகள் சிலரால் அன்னதான நிகழ்வொன்று அங்கு இடம்பெறவுள்ளதுடன் மறுநாள் 09 மதிகதி சட்ட உதவி ஆணைக்குழுவின் உதவியுடன் பிரதேசச் செயலாளரின் தலைமையில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 07.03.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது